Office of the Registrar of Books & Newspapers,
6 - APR 1955
CEYLON

ஒரப் பதிப்புவிலை சதம் 10

சுதந்திரன்
ESUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO- 12

USHA உஷா

கை மெஷின்	ரூ. 225-00.
டிரெடல்	ரூ. 315-00.
போல்டிங்	ரூ. 340-00.

சோல் ஏஜண்ட்: G. H. REIMOO,
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 6060.

புத்தகம் 8 ஜய ஹ பங்குனி மீ 21ஒ [3-4-55] ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் பிறை 8 இதழ் 44

உயர்தர கல்வி கமிஷன் அறிக்கை இரண்டு

பிரிவுகளாக சமர்ப்பிக்கப்படலாம்

ஒருமொழிக் கொள்கையை எதிர்ப்பவர்களின் அபிப்பிராயங்களும் இடம் பெறும்

இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள மொழி வல்லுனர்களைக் கலந்தாலோசிக்க முடிவு

(சுதந்திரன் நிருபர்)

உயர்தரக் கல்வி கமிஷனில் பெரும்பான்மை அங்கத்தவர்கள் சிங்களம் மட்டுமே போதனா மொழியாக இருக்க வேண்டும் என்றும், தமிழுக்கு இரண்டாவது அந்தஸ்துகூட கொடுக்க முடியாது என்றும் அபிப்பிராயப்படுவதாக சென்ற இரண்டு வாரங்களுக்கு முன் நாம் அந்தரங்கமான ஒரு செய்தியை வெளியிட்டது வாசகநேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

என்றாலும் ஒரே பாஷைக் கொள்கைக்கு பலமான எதிர்ப்பு தோன்றும் என்ற பீதி இவர்களிடையே ஏற்பட்டுள்ளது. எனவே ஒரே பாஷையை அரசகரும மொழியாகக்கொண்டுள்ள இந்தியாவிலிருந்து கல்வி அறிஞர்களை கலந்துகொண்டுஅந்தச் சாக்கில் தமது திட்டத்தை புகுத்திவிடலாம் என்று இவர்கள் அந்தரங்கமாக திட்டமிட்டுள்ளதால் இதுசம்பந்தமான இறுதி முடிவு எடுப்பதை ஒத்திப்போட்டுள்ளார்கள் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது.

நாட்டின் உயர்தரக் கல்வி சம்பந்தமான திட்டத்தை வகுப்பதற்காக நிறுவப்பட்ட இந்த கமிஷனில் பெரும்பாலான உறுப்பினர்கள் சிங்களம் மட்டுமே போதனா பாஷையாக இருக்க வேண்டும் என்று கமிஷனின் அடுத்த கூட்டத்திலும் தொடர்ந்து வற்புறுத்தியுள்ளார்கள். என்றாலும் இந்தப் பிரச்னை நாட்டின் பெரிய தேசியப் பிரச்னையாக இருப்பதால் இதுபற்றி ஒரு இணக்கமான முடிவுக்கு இவர்கள் வந்துள்ளார்கள். சிங்களம் மட்டுமே போதனா மொழியாக இருக்க வேண்டும் என்று பெரும்பான்மையோரின் தீர்மானத்திற்கு எதிராக இருப்பவர்களின் அபிப்பிராயங்களையும் சேர்த்து அறிக்கையை இரண்டு பகுதியாக சமர்ப்பிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

என்றாலும் இதுசம்பந்தமான இறுதியான வாக்கெடுப்பு எடுக்குமுன் நாட்டின் மொழிப் பிரச்னைபற்றி மீண்டும் தீர்க்க ஆராய்ச்சி செய்வதென்று உயர்தரக் கல்வி சம்பந்தப்பட்ட இந்த கமிஷன் தீர்மானித்துள்ளது.

இந்த விஷயம் சம்பந்தமாக ஆலோசனைகளை சமர்ப்பிக்குமாறு சிங்கள, தமிழ் வல்லுனர்களை அழைப்பது என்றும் கமிஷன் தனது கடைசிக் கூட்டத்தில் முடிவு செய்தது.

இலங்கையிலுள்ள மொழி வல்லுனர்களின் அபிப்பிராயங்களை திரட்டிய பின், இந்தப் பிரச்னை சம்பந்தமான அறிவுரைகளைப் பெறுவதற்கு இந்தியாவிலுள்ள பிரசித்திபெற்ற கல்வி அறிஞர்களை கலந்துகொள்வது என்றும் கமிஷன் தீர்மானித்திருக்கிறது. இந்தியா ஒரு பாஷையையே அரசகரும மொழியாகக்கொண்டுள்ளதால், மொழி சம்பந்தப்பட்ட இலங்கையின் பிரச்னையைத் தீர்க்க இந்தியாவின் அனுபவம் பெரிதும் உதவியாக இருக்கும் என இவர்கள் கருதுகிறார்கள் என்று தெரிகிறது.

புதிதாக கைத்தொழில் நிலையங்கள்

ஒன்றையும் அரசாங்கம் ஆரம்பியாது

முன்பு நிறுவப்பட்டவைக்கு மூடுவிழாச் செய்ய நேர்ந்ததே காரணமாம்

அன்னியர் போட்டி இருக்கு மட்டும் உள்நாட்டுத் தொழில் வளராது என அபிப்பிராயம்

(நமது நிருபர்)

அரசாங்கம் புதிதாக கைத்தொழில் நிலையங்கள் ஒன்றையும் ஆரம்பியாது என்று தெரிகிறது. சென்ற சில ஆண்டுகளுக்கிடையில் பல கைத்தொழில் நிலையங்கள் மூடப்பட்டதே இதற்குக் காரணம் என்று நம்பப்படுகிறது. வெளிநாட்டு பொருட்களின் போட்டியை எதிர்த்து நிற்க முடியாததாலேயே உள்நாட்டு தேசிய தொழில்கள் குடைசாய்கிறது என்று தொழில்வட்டாரங்களில் கருதப்படுகிறது.

இன்று இலங்கையில் 19 கைத்தொழில்கள் இருக்கின்றன. இவையனைத்தும் நூற்றுக்கு நூறு உள்நாட்டுச் சந்தையையே நம்பி வாழ வேண்டியிருக்கிறது. எனவே இந்த கைத்தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதியாக்கப்படும் பொருட்களின் பலமான போட்டிக்கு இரையாக்கப்படுகின்றன.

அரசாங்கம் கைத்தொழில் பொருட்களுக்கு ஒரு பாதுகாப்பான விலையை நிர்ணயித்துள்ளது. கைத்தொழில் பொருட்கள் சட்டத்தின் மூலம் உள்நாட்டு கைத்தொழில்களுக்கு உதவுவதாக தெரிவித்திருந்தது. என்றாலும் நாடு பூராவும் பல நூற்றுக்கணக்கான கைத்தொழில் நிலையங்களுக்கு மூடு விழா நடந்ததுவதே கண்ட பலன்.

இன்று இயங்கிவரும் கைத்தொழில்களுக்கு ஸ்திரமான நிலையை ஏற்படுத்தியபிறகே புதிய தொழில் நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுவதாகவும் அதனால் தான் சமீபத்தில் புதிய கைத்தொழில் நிலையங்கள் எதையும் ஆரம்பிப்பதில்லை என்று அது தீர்மானித்திருப்பதாகவும் தெரிகிறது.

(5-ம் பக்கம் பாக்க)

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 11ல் வெற்றி பெற்றோர்!

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 11ல் முதற் பரிசு பெற்ற இருவர்களில் ஒருவரான திரு க. மெய்யழகனும் அவரது குடும்பத்தாரும், பரிசு பெற்ற திரு மெய்யழகனும், திரு செல்லையாவும் சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டியை பாராட்டி நமக்கு அனுப்பிய கடிதங்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

அணுக்குண்டின் நீண்டகால விளைவுகள்

சென்ற யுத்தத்தின்போது ஹிரோஷிமாவில் அணுக்குண்டு வீசப்பட்டதன் நீண்டகால விளைவுகள்பற்றி யு. எஸ். விசாரணைக் கமிஷன் தலைவர் டாக்டர் ஹோம்ஸ் சில தகவல்களை வெளியிட்டுள்ளார். சிலர் தற்காலிகமாய் மலடுகள் ஆனதாகவும்; குண்டுவீச்சுக்குப்பின் பிறந்த குழந்தைகளுள் சில குரூபமாக இருந்ததாகவும் அவர் கூறினர்.

மூலம்
சகலவித மூலநோய் சங்காரி

மூல நோய்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஒரே போத்தலில் குணம் தெரியும். தவிர, சகலவித வாதங்கள், ஊறல், படை, (Eczema) கிரந்தி, மற மறப்பு, முதலானவைகளுக்கும் அதியற்புத குணமளிக்கும்.

காலங்கடத்தாமல் உடனே வாங்கிச் சாப்பிடுங்கள்

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரியர்

கேட்லாக் இலவம்!

வெஸ்டன் ஏஜென்ஸீஸ்,
170, ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு. போன்: 2885

போட்டி தோழர்களுக்கு

சுதந்திரன் 13 தினகரன் 9 குறுக்கெழுத்துப் போட்டிகளில் வெற்றிபெற வேண்டுமா? A. V. M. போட்டி டிப்ஸை பெற்றுக்கொள்வதற்கு முந்துங்கள். தனிப் பிரதி விலை -/25 சதம். தபால் மூலம் -/30 சதம் ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். ஏஜன்ஸி வேண்டுவோர் 25% கழித்து முன்பணத்துடன் ஆடர் செய்யவும்.

A. V. M. TIPS,
91, Sea Street, COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

யார் யார்மீது அன்பு செலுத்த வேண்டும்?

திரு தொண்டமானுக்கு பகிரங்க கடிதம்

"தாழ்த்தப்பட்டவர்கள் சகிப்புத்தன்மையுடனிருந்து அவர்களை அடக்கி ஆளுவோரிடம் அன்பு செலுத்தி அவர்களது இதயத்தை வெற்றி கொள்ளவேண்டும் என்பதுதான் நான் அவர்களுக்குச் சொல்லக் கூடியபுத்திமதியாகும்"

"மேல் ஜாதி வகுப்பினர் சாதிப் பாகுபாட்டு வழக்கத்துக்கு மிகப் பழைய காலம் முதலே அடிமைப்பட்டிருந்ததால் அதிலிருந்து விடுபடுவது அவர்களுக்குக் கஷ்டமாகத் தோன்றுவதாயும் ஆனால் தாழ்த்தப்பட்டோர் தரங்கள் எதிர்த்து முன்னேறுவது மூலம் சாதி வழக்கத்தைப் பற்றிய நினைவை மக்களிடமிருந்து அகற்றி விடலாமென்று எண்ணக் கூடாதென்றும் திரு தொண்டமான் நீர்வேலி பரமேஸ்வரி சனசமூக நிலைய அத்திவாரக்கல் நாட்டு வைபவத்தில் பேசியபோது குறிப்பிட்டதாக வந்த செய்தியை 9-3-53 ல் வெளிவந்த பிரபல்யமான ஒரு தமிழ் தினசரியில் கண்ணுற்றேன்.

ஜனநாயக காங்கிரஸ் தலைவர் யாருக்குப் புத்திமதி கூற வேண்டுமென்பதை மறந்து விட்டதை எண்ணித் துக்கமேற்படுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமைக்காகப் போராடக் கூடாதென்று கூறியுள்ளதை மக்கள் நலனிலே அக்கறை கொண்டோர் வரவேற்கவே மாட்டார்கள்.

அன்பு யார் யாரிடம் செலுத்த வேண்டும்? கஷ்டப்படுபவர்கள் மேல் கஷ்டப் படாதவர்கள் அன்பு செலுத்த வேண்டுமா? நசுக்கப்படுபவர் மேல் நசுக்குபவர் அன்பு செலுத்த வேண்டுமா? அல்லது கஷ்டப்படுபவர்கள் கஷ்டப்படாதவர்கள் மேல் அன்பு செலுத்த வேண்டுமா? நசுக்குபவர்கள் மேல் நசுக்கப்படாதவர்கள் அன்புசெலுத்த வேண்டுமா? திரு தொண்டமானுக்கு இது தெரியாதா? நசுக்கப்படும் தாழ்த்தப்பட்டவர்கள் நசுக்குபவர்கள் மேல் அன்பு செலுத்த வேண்டுமென்றுபோதிப்பது நீதியா? நியாயமா? உரிமையைப் பெறத்தானே தோட்டத் தொழிலாளரை வேலை நிறுத்தம் செய்யும்படி சொல்கிறார் தலைவர் தொண்டமான். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் சகிப்புத்தன்மையுடன் இருக்க வேண்டுமென்கிறார்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மேல் சாதியினரால் கஷ்டப்பட்ட தாழ்த்தப்பட்டோர் அன்பைத்தான் செலுத்தினர்; செலுத்துகின்றனர். "அடே கந்தா" என்று விழிக்க "என்ன எஜமான்" என்று இன்றும் பணிகிறார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், அவர்கள் மேல் அன்பு செலுத்த வேண்டுமா? உரத்த குரலிலே மக்களை மாக்களாகவே மதிக்காத மேல் சாதியினர்மேல் அன்பு செலுத்த வேண்டுமா?

உலகமெல்லாம் உரிமைக் குரல் கேட்கும் இந்நேரத்திலும் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் அன்பைத்தான் செலுத்தி வந்தார்கள். ஆனால் மேல் சாதியினரோ?.....அப்பப்பா சொல்ல முடியாத அநியாயம், அக்கிரமம் செய்து கொண்டுதான் இருக்கின்றனர். இவ்வித விஷயங்கள் நிகழும்போது எவ்விதம் அன்பு பாராட்ட முடியும்? ஆனலும் அன்பு பாராட்டுகிறார்கள் அப்பெருந்தகையாளர்கள்.

கரவெட்டி போன்ற ஊர்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளை மேல்சாதி மக்கள் சொக்கப்பானைகொழுத்துவதுபோல் கொழுத்திய பின்பும் அன்பு பாராட்ட வேண்டுமா?

தாழ்த்தப்பட்டோர், கிணற்றில் மட்டுமல்ல, குளத்திலும் நீர் அள்ளக் கூடாதென்று தடை செய்கிறார்களே, படித்த, பட்டம் பெற்ற மேல்சாதிக் காரர்கள்; அவர்களிடம் அன்புபாராட்டத்தான் வேண்டுமா?

தப்பித் தவறி, நல்ல உடைகளை, நல்ல ஆபரணங்கள் அணிந்து விட்ட தாழ்த்தப்பட்ட சகோதரிகளை மனதாலும் நினைக்க முடியாதபடி அம்மணமாக்கி பார்த்து ரசிக்கும் கடைகெட்ட சம்பவங்களைக் கண்டபின்பும், அன்பு பாராட்டத்தான் வேண்டுமா? நல்லூர் கந்தசுவாமி கோயில் வாசலில் நின்றுவிட்டதற்காக அடிபல பட்டபின்பும் அன்பு பாராட்டத்தான் வேண்டுமா?

மிருகங்களிடம் காட்டும் அன்பில் ஆயிரத்தில் ஒரு பங்குதானும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் காட்டாத பெருந்தகையாளர் மேல் அன்பு பாராட்டத்தான் வேண்டுமா?

பல நாட்களுக்கு முன்பு பாணந்துறையில் உள்ள பாடசாலை ஒன்றின் தலைமை ஆசிரியர் தன் மனைவிக்காக தாழ்த்தப்பட்ட சகோதரியான ஒரு ஆங்கிலோ எஸ். எஸ்ஸி. ஆசிரியையை ஒன்றரை மாதமாக நின்று படிப்பிக்கும்படிவிட்டதற்காக அன்பு பாராட்டத்தான் வேண்டுமா? அன்பு உதயமாகத்தான் முடியுமா? இவ்வளவு அல்லல்படும் மக்கள், உரிமைக்காகப் போராடுவது கூடாதென்று ஜனநாயகக் கட்சித் தலைவர் கூறலாமா?

திரு தொண்டமானுக்குத் தெரியுமா யாழ்ப்பாணத்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள்? அவருக்கு எங்கே தெரியும்? வடமராச்சி போன்ற இடங்களைச் சென்று பார்வை இட்டு வந்தபின் அவ்விதம் கூறுவாரா? கூற மனம் வருமா என்று கேட்கிறேன். நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். ஓர் ஆசிரியன். பல சமூக மக்களுடன் ஒன்று கூடி வாழ்ந்தவன். தாழ்த்தப்பட்ட சகோதரர் படும் அல்லல்களைக் கண்டு நெஞ்சு குமுறியவன்.

யாழ்ப்பாணத்தில், தீண்டாமை மற்றைய நாட்டை விட மிகமிக மோசமாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மனிதர்களை உயிர்களாகவே கருதுவது அரிது. அன்று அமெரிக்காவில் "கறுப்பு" மக்கள் பட்ட கஷ்டம் பல ஆண்டுகளுக்கு முன் இங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வந்தார்கள். மிஷன் பாடசாலை வந்ததினால், படித்து உத்தியோகம் பார்க்கத் தொடங்கியதால் ஓரளவு மனிதாபிமானத்துடன் நகரங்களில் சீவிக்கிறார்கள். கிராமங்களிலோ தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் சைவம் பாடசாலையில்சேர்ந்து படிக்கமுடியாது. தபால் இலாகா மந்திரியார் பாடசாலையிலேயே அப்படியென்றால், மற்றப் பாடசாலைகளைப் பற்றிக் கூறத் தேவை இல்லை. ஒரு சில பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மாணவர் தனி இடத்தில் இருந்து தான் படிக்கிறார்கள். இது கண்கண்ட உண்மை! இத்தியாதி காரணங்களைக் கண்ட பின்பும் உரிமைக்காகப் போராடக் கூடாதென்பது விவேகமான செயலல்ல!

'தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்த்து முன்னேறுவதன் மூலம் சாதி வழக்கத்தைப் பற்றிய நினைவை மக்களிடமிருந்து அகற்றி விடலாமென்று எண்ணக் கூடாது' என்று கூறுகிறார் தொண்டமான்.

மன்னர்களாலும், பிரபுகளாலும் நசுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமையை எதிர்க்காமல் பெற்றதாக எந்த வரலாறும் கூறவில்லையே!

பிரஞ்சு விடுதலை ருஷ்ய மக்கள் ஆட்சி, அமெரிக்க விடுதலை,சீனா சுதந்திரம்.இந்திய விடுதலை எல்லாம் எதிர்ப்பில்லாமல் கிட்டியதா? இன்று தென்னிந்தியாவில் தமிழ் மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஓரளவு மனிதாபிமானத்துடன் வாழ்வதும் உரிமைப் போரினால் என்பதை தொண்டமான் மறந்துவிட்டாரா? திரு தொண்டமானுக்கு யாழ்ப்பாண உண்மை நிலை மறைக்கப்பட்டு விட்டதா?

ஹரிஜனவிமோசனத்துக்கு அவர் கூறிய நல்வழி:

என்று கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதே. இதுதானா நல்வழி. இதுதானா விமோசனத்திற்கு வழி; இதுதானா உரிமைக்கு வழி! திரு தொண்டமான் இந்த உபதேசத்தை மேல் சாதிக்காரருக்குச் சொல்லி இருக்கவேண்டும்.

"இதுகாலம்வரை அடக்கி ஆளப்பட்ட மக்கள் உரிமைக்காகக் கிளர்ச்சி செய்தால் அன்பு செலுத்திய அந்த மனித ஜீவன்கள் புரட்சிக் கவிஞர் கூறியபடி கொலைவாளினை எடுத்து கொடியோர் செயலை அகற்றப் புறப்பட்டால் பிரஞ்சியலுயிக்கும்,ரஷ்யஜாருக்கும், எகிப்திய பாரூக்குக்கும் ஏற்பட்ட நிலை ஏற்படக் கூடும். ஆகவே மேல்சாதி மக்களே தாழ்த்தப்பட்ட மக்களையும் மனிதராக மதித்து உரிமையைக் கொடுங்கள்"

என்று சொல்லியிருக்க வேண்டும். இனியாவது தொண்டமான் வடமாகாணம் முழுவதும் ஒருமுறை சென்று பார்வை இட்டுவந்தால் நான் மேலே கூறியடி கூறுவாரென்றுஎதிர்பார்க்கிறேன். தமிழ் மக்கள் ஒன்றுபட குறுக்கே நிற்பது தீண்டாமை!

இந்த சாபத் தீட்டை ஒழித்துக்கட்டாதவரை தமிழினம் பலம் பெற்று தன் உரிமை பெறுவது சாத்தியமில்லை என்பதைத் தமிழ் மக்கள் உணரவேண்டும்.

இங்ஙனம்
"அன்பன்"
யாழ்ப்பாணம்

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம்

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை, என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் தாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில்வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சுவலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால் கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்துபோகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கைகால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50 சிறியது ரூ. 3-00

வி. பி. பி. செலவு வேறு.

புரொப்ரைட்டர்: எம். பொன்னையா

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.

கண்ணும் குருடு! காதும் செவிடு! ஆனால் புகழ்பெற்ற எழுத்தாளர்

முகத்தை தடவி அகத்தின் ஆழத்தை அறியும் திறமைகொண்ட திருமதி கெல்லர்

குருட்டுப் பெண் 'டைப்' அடிக்கிறார்-சினிமா பார்க்கிறார்

ஹெலன் கெல்லர் ஒரு பிரபல அமெரிக்க பெண் எழுத்தாளர். கல்வி நிபுணரும்கூட. ஹெலனுக்கு கண் தெரியாது, காது கேட்காது. இருந்தாலும் படித்து பட்டம் பெற்று பிரபல எழுத்தாளராக விளங்குகிறார். செவிடர்கள், குருடர்களின் நலனுக்காக தூர கிழக்கு தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்.

ஹெலன் கெல்லருக்கு இப்போது 74 வயது ஆகிறது. இப்போது இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார். தூரக்கிழக்கு தேசங்களில் (இந்தியா, பாகிஸ்தான், பர்மா, ஜப்பான், பிலிப்பைன்ஸ்) சுமார் 40ஆயிரம் மைல் சற்றுப்பிரயாணம் செய்யும் திட்டத்தின்கீழ் ஹெலன் இப்போது இந்தியாவுக்கு வந்திருக்கிறார்.

பிரயாண செலவு

குருடர்களுக்கு உதவுவதற்கான அமெரிக்கா ஸ்தாபனமும், ஹெலன் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் நாடுகளும், ஹெலன் சுற்றுப் பிரயாணத்துக்கு ஆகும் செலவை ஏற்றுக்கொண்டு [illegible]

தியாகம்

ஹெலன் இதுவரை 5 தடவை உலகச் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். செவிடர்களுக்காகவும், குருடர்களுக்காகவும் உதவி செய்வதற்காகவே ஹெலன் தன்னுடைய வாழ்க்கையை கொடுத்துவிட்டாள்.

ஹெலன் பேசுவது எழுதுவது எல்லாம் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களைப் பற்றியே இருக்கும்.

குழந்தை

ஹெலன் 1880ம் வருஷம் அமெரிக்காவின் தென் பகுதியில் உள்ள அல்பாமா என்ற ஊரில் பிறந்தாள். ஹெலனுடைய தகப்பனார் ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியர்.

ஹெலன் பிறந்தபோது நன்றாக ஆரோக்கியமாக இருந்தாள். ஆறு மாதம் ஆனதும் நடக்க ஆரம்பித்து விட்டாள். ஒரு வருஷத்துக் கெல்லாம் பேச ஆரம்பித்தாள். அப்போது அவள் செவிடு அல்லது குருடு அல்ல.

செவிடு

பிறந்து 10 மாதங்கள் ஆனதும் ஹெலனுக்கு ஒரு ஜ்வரம் வந்தது. அந்த ஜ்வரம் காரணமாக ஹெலனுடைய காது அடைத்துவிட்டது. கண் தெரியாமல் போய்விட்டது.

ஹெலன் மிகவும் முரட்டுக் குணம் படைத்தவளாக வளர்ந்தாள். ஹெலன் தனக்கு வேண்டுவதை சைகைமூலம் காட்டுவாள். அதை பெற்றோர்கள் கொடுக்காவிட்டால் பிடிவாதம்பிடித்து கூச்சல்போட்டு ரகளை செய்வாள்.

6 வயதில் குருட்டு பள்ளிக்கூட வாத்தியாரம்மாளான அன்னிசுலிவன் ஹெலனுக்கு வாத்தியாரம்மாளாக நியமிக்கப்பட்டாள்.

உள்ளங்கை பாடம்

சில மாதங்களில் ஹெலன் 800 வார்த்தைகள் கற்றுக் கொண்டாள். வார்த்தைகளை உள்ளங்கையில் சுலிவன் எழுதுவாள். ஹெலன் புரிந்துகொள்ளுவாள்.

ஹெலனின் கல்வியில் மிகவும் ஆச்சரியகரமான முன்னேற்றம் தென்பட்டது: ஹெலனின் முன்னேற்றத்தை நாட்டில் எல்லோரும் ஆர்வத்துடன் கவனித்து வந்தனர்.

10வது வயதில் அமெரிக்காவில் உள்ள பிரபல செவிடர்கள் பள்ளிக்கூடத் தலைவியான சாரா பல்லரிடம்

(15ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Office of the Registrar of Books & Newspapers,
6-APR 1955
CEYLON.



ம. மாரிமுத்து, தலவாகொல்லை

கே: பெண்களிடம் காந்தம் இருப்பதாக சொல்கிறார்களே, நான் ஒரு பெண்ணைத் தொட்டுப் பார்த்தேன், காந்தம் என்னை இழுக்கவில்லையே!

ப: ஒன்றில் நீர் மரக் கட்டையாக இருக்க வேண்டும். அல்லது அவள் கரண்ட் முடிந்த 'பெற்றி' (Battery)யாக இருக்க வேண்டும்.

ஃ

செல்வி இ. நேசமணி, கல்முனை

கே: சில பெண்கள் கால் சட்டை அணியும் ஆண்களைத்தான் கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறார்களே, ஏன்?

ப: இந்த காலத்துப் பெண்களுக்கு கணவனுடைய பாக்கட்டின் கனத்தில்தான் குறி. கால் சட்டைக்கு குறைந்தது மூன்று பாக்கட்டுகளாவது உண்டு. வேட்டிக்கு அது கிடையாதல்லவா?

கே: கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று நினைத்து வாழும் கொள்கையுடைய பெண்கள் இந்தக் காலத்தில் உண்டா?

ப: கணவனானாலும் கல்தான், புருஷனானாலும் புல்தான் என்று எண்ணிவாழும் பெண்களுக்கு இந்தக் காலத்தில் குறைவில்லை.

ஃ

'விடிவெள்ளி' மானிப்பாய்

கே: நாள் பொருத்தம் பார்த்து செய்யும் கலியாணங்கள் சீர் குலையக் காரணம் என்ன?

ப: சோதிடர் நாள் பொருத்தம் கோள் பொருத்தம் பார்த்தாரல்லாமல், ஆள் பொருத்தம் பார்த்தில்லையல்லவா அதனால் தான்.

ஃ

கே. ஜோசப்பின், மட்டக்களப்பு

கே: மட்டக்களப்பில் ஒரு புதிய தொற்றுவியாதி தோன்றியிருக்கிறது. அது என்னவென்று தங்களால் சொல்ல முடியுமா?

ப: ஓ சொல்ல முடியுமே, விடிய விடிய கூத்துப்பார்க்க வேண்டும் என்ற காலம் போய்விடிய விடிய சைக்கிள் ஓடவேண்டும் என்ற 'காலரா' பிடித்திருக்கிறது.

ஃ

எம். எஸ். ஓ. ஹலீம், ஹெமட்டகம

கே: இவ்வுலகில் மனிதன் துப்பறிய ஆரம்பித்தது எப்பொழுது?

ப: அர்த்த ஜாமத்தில் கூவியது வைகறையின் சேவல் அல்ல என்பதையும், கந்த மூலாதிகள் அருந்தும் துறவியின் குடிசையில் மாமிசம் புசிக்கும் பூனைக்கு வேலை யென்ன என்பதையும் அகலிகையின் கணவர் கௌதம முனிவர் சிந்திக்கத் தலைப்பட்டபோது.

ஃ

எம். எம். ராசா, யாழ்ப்பாணம்

கே: பெண்களுக்கு அவசியம் வேண்டுவது எது?

ப: பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்பதைச் சுலபமாகப் பார்க்கக் கூடிய ஒரு சாளரம்.

ஃ

அ. இராசகுலசிங்கம், கிளிவெட்டி

கே: உலகில் மிகப்பெரியவன் யார்? மிகச் சிறியவன் யார்?

ப: இரந்தும் ஈபவன் பெரியவன். இருந்தும் ஈயாதவன் சிறியவன்.

ஃ

ச. மு. அக்பர், திரிகோணமலை

கே: கடமை என்றால் என்ன?

ப: உரிமையைப் பெறுவதற்குமுன் ஆற்ற வேண்டிய பணி கடமையாகும்.

கே: தீக்கோழி என்று ஏன் பெயர் ஏற்பட்டது, தீயைத் தின்பதனாலா?

ப: வான்கோழி என்று ஏன் பெயர் ஏற்பட்டது வானத்தைத் தின்பதனாலா?

ஃ

செ. ஞானசிகாமணி, கல்முனை

கே: ஐயா உங்கள் வாய் இனிக்கிறதே அது எப்படி?

ப: இனியதமிழைப்பேசும் எந்த வாயும் இனிக்காமல் போகுமா?

ஃ

எஸ். எஸ். சிவபாதசுந்தரம், ஹரஸ்பெட்ட

கே: காதல் என்பது ஒரு தொழில் என்கிறேன். இது சரியா?

ப: மிகவும்சரி, காதல் ஒரு தொழில்தான். அதைவைத்துத்தானே கதாசிரியர்கள் பிழைக்கிறார்கள்.

ஃ

வி. பிரான்சிஸ், மன்னார்

கே: காதலர்கள் மனமொத்து விரும்புவது எது?

ப: இருவரும் சேர்ந்த தனிமை.

ஃ

எம். எஸ். எம். நிசாம், மருதானை

கே: குயுக்தியாரே, உங்களுக்கு உலகத்திலே வாழ விருப்பமில்லாவிட்டால் முதலில் என்ன செய்வீர்கள்?

ப: முதலில் என்னுடைய அரிசிப் புத்தகத்தை வாழ விரும்பும் ஒருவனுக்கு கையளித்து விடுவேன்.

ஃ

எஸ். ஈ. தப்பி, ஆரயம்பதி

கே: புரட்சியென்றால் என்ன?

ப: சாப்பாடு கிடைக்காத வயிறுகளிலே பிறந்து சாம்ராஜ்யங்களையே தவிடுபொடியாக்கிவிட்ட ஒரு மனிதகுலப் பூகம்பம். ஆனால் இன்று நெஞ்சில் உதிக்காமல் வாயிலிருந்து புறப்படும் வெறும் சத்தவெடியாகிவிட்டது.

ஃ

டோ. விக்டர், பருத்தித்துறை

கே: ஏழைவிடும் பெருமூச்சில் என்ன கலந்திருக்கும்?

ப: நிறைவேறுத ஆசைகளின் ஏக்கம் கலந்திருக்கும்.

ஃ

மு. பரஞ்சோதி, யாழ்ப்பாணம்

கே: கண்டவருடனெல்லாம் உறவு கொண்டாடும் ஒரு பரத்தைக்கும் கட்டிய கணவனிடம் தன் உள்ளத்தைத் திறந்துகாட்டும் ஒரு குலப் பெண்ணுக்கும் என்ன வித்தியாசம்?

ப: போஸ்ட்கார்ட்டிற்கும், உறையில் போட்ட கடிதத்திற்குமுள்ள வித்தியாசந்தான்.

ஃ

கே. கிறிஸ்கந்தராசா, மட்டக்களப்பு

கே: உலகில் தித்திப்பானதும் கசப்பானதும் காதல் என்கிறேன், சரியா?

ப: இல்லை. தித்திப்பானது காதல். கசப்பானது கலியாணம்.

ஃ

மு. க. கணபதிப்பிள்ளை, தொண்டமானாறு

கே: ஏழைகளின் கஷ்டத்தைப் பார்த்தால் எனக்கு மனம் உருகுகிறது. என்ன செய்யலாம்?

ப: ஐயையோ இதை வெளியில் சொல்லிவிடாதீர்; யு. என். பி. ஆட்சியில் இப்படியான துர்க்குறி கண்டால் நீர் ஒரு கொம்யூனிஸ்ட் நோயாளி என்று நிதானித்து விடுவார்கள் அரசியல் டாக்டர்கள்.

இனம் உய்ய வழி உண்டா?

"மஹாகவி"

நெல் உள; நிதிஉண்டு; நிறைவுள பொருளுண்டு,
கல் இள முலை மாதர் கடைவிழி மொழி மீதில்!
சொல்லள வினிலேனும் சுகம் உள தென, மண்ணில்
நல்லழ கொழுகும் பா நான் தரு வன உண்டே!

★

விதிகள் உள; ஆங்கே விரைபவை உள; தூரச்
சேதிக ளொடு நம்மைச் சேர் இதழ் உள; வெட்கிப்
போ(து) அழ, வெறுவாயே பூத்திடும் மகவுக்குத்
தாதியும் உளள், புட்டிப் பால்வகை தருதற்கு!

★

விரல்பட முது வீணை களிவெறி, விளைவித்து
முரலுவ துளதே! யாழ், முழவொடு குழலுண்டே!
குரலின் இ னிமை கூட்டிக் குமரிகள் இடைவாட்டிப்
புரிகிற நடனத்துப் புதுமையும் உளதன்றே?

★

தொட்டதும் இருள் தீய்க்கும் சுடர்உள; நெடுமாடிக்
கட்டிடம் உள; கோடி கருவிகள் உள; காசு
வட்டமும் உளதே!—தன் வழிகெட அதனோடே,
பட்டண உலகத்தைப் பார், சுழல் கிறதம்மா!

★

பாயிரம் உரையோடும் பனுவல்கள் பலவுண்டு;
கோயில்கள் குளமுண்டு; கோபுரம் உயர்வானைப்
போய்அடை வதும்உண்டு; போதனை மிக உண்டே!
ஆயினும் அகிலத்தில் அமைதியை எவர்கண்டார்?

★

மஞ்சிடை வருதற்கும் வாகனம் உள; விண்ணும்
அஞ்சிட எரிக்கும் ஆயுதம் உள; மக்கட்
பிஞ்சுகள் உயிர்வாழப் பிறிதொரு நீலமின்றேல்,
எஞ்சி, நம் இனம் உய்ய இங்கொரு வழிஉண்டா?



முடிசாய்ந்தது

ஆசிரியர்: ஈ. வெ. கி. சம்பத். வெளியிட்டோர்: நீலா நிலையம் செரி ரோட் சேலம் விலை: 1 ரூ 25 சதம்.

18ம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்சில் நடைபெற்ற புரட்சி முடிஆட்சியைச் சாய்த்தது: மக்கள் ஆட்சியை மலரச் செய்தது. மதவாதிகளை மருளச் செய்தது. முடிமன்னர்களைத் திகிலடையச் செய்தது.

ஐரோப்பிய மொழிகளில் பலநூற்றுக்கணக்கான நூல்கள் இச் சம்பவத்தைப்பற்றிக் கூறுகின்றன. தமிழை மட்டுமே அறிந்துள்ள மக்களுக்கு பிரான்சுப் புரட்சியைப்பற்றி அறியும் வாய்ப்புகள் அதிகமாகக் கிட்டவில்லை. அக்குறையை ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'முடிசாய்ந்தது' என்றும் இந்நூல்மூலம் நிவர்த்தி செய்துள்ளார்.

மேலைநாட்டு நூல்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து பாமரர்கள்முதல் பண்டிதர்கள்வரை படித்துப் பயன் பெறும் வண்ணம் இன்பத் தமிழில் அழகுநடையில், 'முடிசாய்ந்தது' என்னும் வரலாற்று ஆராய்ச்சி நூலை ஆக்கித் தந்து தமிழ்நாட்டு இலக்கியத்துக்குத் தொண்டு செய்துள்ளார் இந்நூலாசிரியர்.

கல்லூரியில் படிக்கும் வரலாற்று மாணவர்களுக்கு இந்நூல் பெரும் உதவியாக இருக்குமென்பது திண்ணம்.

'முடிசாய்ந்தது' ஒரு தொடர் நவீனம்போல் விறுவிறுப்புடன் அலுப்புத் தட்டாவண்ணம் சென்றுகொண்டிருக்கிறது. அழகிய முகப்புப் படம் நூலை அலங்கரிக்கிறது.

பிரசுரிப்போர் கூறுவதுபோல் ர, ற, ல, ள, ழ பிழைகளை ஆங்காங்கு காணக் கூடியதாக இருக்கிறது. அடுத்த பதிப்பில் திருத்தப்படும் என்று கூறுகிறார்கள். ஆனால் அவசரப்படாமல் பிழை இல்லாமல் வெளியிட்டு இருக்கலாம். தமிழில் வெளிவரும் நூல்கள் எல்லாவற்றிலும் இது ஒரு பெரும் குறையாக இருக்கிறது.

இனிமேலாவது புத்தகம் வெளியிடுவோர் இதனைக் கவனிப்பார்களென எண்ணுகிறோம்.

புரட்சிப் பாடகன்

ஆசிரியர்: ப. கண்ணன் வெளியிட்டோர்: தென்றல் நூற் பதிப்புக் கழகம் சலகண்டபுரம் சேலம் மாவட்டம் விலை: 1 ரூ 50 சதம்.

'பகுத்தறிவு' மாத இதழ் ஆசிரியர் ப. கண்ணன் அவர்களால் எழுதப்பெற்ற 'புரட்சிப் பாடகன்' என்னும் இசைத்துறை மறுமலர்ச்சி நாடக நூல் வரப்பெற்றோம்.

'திருச்சி வானொலி நிலையத்தினரால் 1947ல் பாடகன் என்னும் பெயருடன் முழுநேர நாடகமாக நடிக்கப்பெற்று, 'சண்டமாரு' தத்தில் தொடர் நாடகமாக வந்தது. அறிஞர் அண்ணாவின் ஆர்வமூட்டும் பேச்சால் வானொலிப் பாடகனை பல புதிய மாற்றங்களுடன் 'புரட்சிப் பாடகனாக' மாற்றி உள்ளதாக ஆசிரியர் கூறுகிறார்.

பாவலர் வேலாயுதசாமியும் பல பாடல்களை எழுதியிருக்கிறார். அவரின் புதுமைக் கூத்துப் பாடல்கள் பாராட்டத்தக்கன.

தமிழ் நாட்டிலே தமிழிசை இயக்கம் தோன்றிய நேரத்தில், அதற்குச் சரியான எதிர்ப்பு இருந்தது. தமிழரே தமிழில் என்ன இருக்கிறது என்றுகூடக் கேட்டனர். அர்த்தம் விளங்காமல் பாகவதர் பாட, சபையோர் தலையாட்ட அது தமிழ்ப் பற்றுக்கொண்டோரை வதைத்தது. அதனை வன்மையாக நாடகத்தில் கண்டிக்கிறார் ஆசிரியர்.

ஆஸ்ரமவாசி கீதானந்தர் தமிழ்தான் புரிகிறது. சுவை தருகிறது என்றால் எனக்குக் கோபம் எப்படி வராமலிருக்கும்? என்ன தமிழ்? எங்கே தமிழ்? ஆண்டவன் அறிவானு தமிழை, நாலு வேதம் தமிழா, பகவத்கீதை தமிழா? இதிகாசங்கள் தமிழா? எல்லாவற்றிற்கும் மூலம் தேவ பாஷையல்லவா?..." என்று பேசுகிறார். இதில் சிந்தனைக்குரிய பல விஷயங்கள் பொதிந்துள்ளன.

ஏழைப் பாடகன சங்கரன்-சகோதரி காவேரி நண்பன் முத்து. மிராசுதார் பெண் சுசீலா, பசுத்தோல் போர்த்த புலி கீதானந்தர் நாட்டாமைக்காரர் மகள் செல்லம். குருதேவரைத்தான் பணியும் படித்தமாணவன் நாகசுந்தரன். இத்தியாதி பாத்திரங்களை வைத்து சுவை சொட்டும் சம்பவங்களை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. இந்நூல் ஆச்சிரமம் என்னும் பெயரில் நடக்கும் அட்டூழியங்கள், குரு என்ற பெயரில் நடக்கும் கும்மாளங்கள் காதல் என்ற பெயரில் நடக்கும் கபட நாடகம் எல்லாம் அம்பலமாக்கப்படுகின்றது.

முற்போக்குக் கருத்துகளுடன் கூடிய இந்நூல் படிப்பதற்கு மட்டுமல்ல நடிப்பதற்கும் ஏற்றது.

—ந. பொ. ந. அரசன்

'சுதந்திரன்'
சந்தா விபரம்

வருட சந்தா	ரூபா 7=50
ஆறு மாத சந்தா	ரூபா 4-00

விபரங்களுக்கு எழுதவும்:-
சர்குலேஷன் மானேஜர்,
'சுதந்திரன்'
194ஏ, தட்டாதெரு, கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை வழக்கில் படுக்கையறைப் படங்கள் தாக்கல் செய்யப்பட்டன

முதல் எதிரிக்கும் தனக்கும் இருந்த உறவு பற்றி ஸ்ரீமதி தேனுவரா சாட்சியம்

டாக்டர் தேனுவரா கொலை வழக்கின் ருசிகரமான கட்டம் வழக்கை ஒட்டி திருமதி தேனுவரா அளித்த சாட்சியத்தின்போது அடைந்தது.

இந்த வழக்கில், மருதானை ஸ்டபோர்ட் பிளேசைச் சேர்ந்த டாக்டர் ஏ. எஸ். தேனுவராவைக் கொலை செய்யச்சதிசெய்ததாகவும், கொலை செய்ததாகவும் வெள்ளவத்தை ஸ்டேஷன் ரோட்டைச் சேர்ந்த முன்னாள் இராணுவ கப்டன் திரு டீ. எம். ஆர்தர் பெரேராமீதும், வெள்ளவத்தை காலி ரோட்டைச் சேர்ந்த எச். ஜயதிலகா என்பவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கு சென்ற24-ம் திகதிகொழும்புபிரதமமாஜிஸ்டிரேட் ஜனப் எம். எம். மஹ்ரூப் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொலையுண்ட திரு. தேனுவராவின் பாரியார் சாட்சியமளித்தார்.

கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்களில் இருப்பது தானும் முன்னைய இராணுவ கப்டன் திரு. பெரேராவும்தான் என்று 27 வயதுடைய விதவை திருமதி தேனுவரா அடையாளம் தெரிவித்தார்.

அவற்றில் ஒன்று திரு. பெரேராவும் திருமதி தேனுவாராவும் ஒரு படுக்கையில் இருக்கும்போது எடுக்கப்பட்ட படம். ஆனல் இந்தப் படத்தை யார் எடுத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்று திருமதி தேனுவாரா கூறினர்.

இன்னுமொரு படம் திரு. பெரேராவும் திருமதி தேனுவராவும் பொலநறுவையில் தண்ணீரில் இருக்கும்போது எடுக்கப்பட்ட படம். இந்தப்படத்தை திருமதி தேனுவரா அடையாளம் தெரிவித்து ஒப்புக்கொண்டார்.

திருமதி தேனுவரா தொடர்ந்து சாட்சியமளிக்கையில், தான் லண்டனில் கல்யாணம் செய்துகொண்டதாகக் கூறினர். பொலீஸ்காரர் திருமணப் பத்திரத்தைக் கேட்ட அன்றே தமது திருமணப் பத்திரம் காணமல் போயிருந்ததை தாம் அவதானித்ததாக கூறினர். தமது தந்தை ஒரு ருஷ்யர் என்றும் தாயார் ஒரு ஆங்கிலேயர் என்றும் தெரிவித்தார்.

காலஞ்சென்ற தமது கணவர் டாக்டர் தேனுவரா எழுதிவைத்த உயில்களைப் பற்றி திருமதி தேனுவரா தம்முடன் கூறுகையில் 1950ல் அவர் கூறினர். உயில்களை எழுதினர் என்று எதிரியும் தெரிவித்தார். 1954ல் ஏதோ தேவைக்காக சில உறுதிகளை வைக்கப்பட்டிருந்த பெட்டியில் தேடியபோது இந்த உயில்கள் காணப்படவில்லை. முந்திய உயில்களைப் போலவே இன்னுமொரு உயிலை அவர் அதே வருடத்தில் எழுதினர். சொத்துக்கள் எல்லாம் தமது பெயருக்கு எழுதப்பட்டன என்று திருமதி தேனுவரா கூறினர்.

முதல் எதிரியோடு தமது அறிமுகத்தைப்பற்றி கூறும்போது, ஒரு ரப்பர் தோட்டம் சம்பந்தமாக திரு. பெரேராவுடன் தொடர்பு கொள்ளுமாறு தமது கணவன் தெரிவித்ததன் பேரிலேயே தமக்கு அறிமுகம் ஏற்பட்டதாகக் கூறினர். ரப்பரின் தரத்தைப்பற்றி அறிவதற்காகவே திரு. பெரேராவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

முதல் எதிரி அப்போது பி.இ.ஆர்.குரேயிடம் வேலை செய்தார். அங்குதான் அவரை நான் முதலில் தெரிந்து கொண்டேன் என்று திருமதி தேனுவரா கூறினர்.

முதல் எதிரியை ரப்பர் பற்றி பேசுவதற்கு வீட்டிற்கு வருமாறு தமது கணவன் அழைத்திருந்தார் என்று திருமதி தேனுவரா தெரிவித்தார். அன்றுதான் முதல் எதிரியை சந்தித்ததாக கூறினர். ரப்பர்பற்றி அவர் ஆலோசனைகள் கூறினர்.

தமது கணவனின் அறிவித்தலின் பேரில்தான் முதல் எதிரியுடன் சில வேளைகளில் தமது தோட்டத்திற்குப் போனதாக திருமதி தேனுவரா கூறினர். இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவைதான் தோட்டத்திற்கு விஜயம் செய்ததாகவும் சில சமயங்களில் தோட்டத்தில் வேலை இருந்தபோது அவற்றைக் கவனிக்க முதல் எதிரி தாம் பொதுவாக தோட்டத்திற்கு காலை 7 மணிக்கே புறப்படுவதாகவும் திருப்பி மாலை 5 மணிக்கு வந்துவிடுவதாகவும் அவர் கூறினர். முதல் எதிரி மணமானவர் என்பது தனக்குத் தெரியும் என்று திருமதி தேனுவரா கூறினர். முதல் எதிரியின் மனைவியை தான் சந்தித்திருப்பதாகவும், அவர்களுடன் வெளியிலே போயிருப்பதாகவும் கூறினர்.

தான் முதல் எதிரியின் வீட்டிற்கு விஜயம் செய்ததிலும் பார்க்க அதிகமாக முதல் எதிரி தனது வீட்டிற்கு வந்திருக்கிறார் என்று அறிவித்தார். அவரது நட்பை தான் விரும்ப ஆரம்பித்ததாக கூறினர். 'பல இரவுகற் கொழும்புக்கு வெளியே தங்கியிருக்கிறோம். முதல் எதிரியுடன், கிளப்புகளுக்கும், விருந்துகளுக்கும்போயிருக்கிறேன்' என்று சொன்னர்.

சுமார் ஒருவருடத்திற்கு முன் முதல் எதிரி தமது வீட்டிற்கு வருவதை நிறுத்திக் கொண்டார் என்றும், அவரது மனைவி எனது கணவனுக்கு டெலிபோன்செய்து அவர் எனது வீட்டிற்கு வருவதை தான் விரும்பவில்லை என்று கூறியதாலேயே திரு பெரேரா நிறுத்திக் கொண்டார் என்று திருமதி தேனுவாரா கூறினர்.

இதன்பின்னர் திரு பெரேரா தமது வீட்டிற்கு வராமல் இருப்பது நல்லதென்று இருவரும் தீர்மானித்திருந்ததாக தெரிவித்தார். என்று

(13-ம் பக்கம் பார்க்க)

ருசிகரமான வழக்குகள்

ஜிந்துப்பிட்டி கொலை வழக்கு

ஜிந்துப்பிட்டி முருகன் தியேட்டருக்கருகாமையில்நடந்த கொலைச் சம்பவத்தை ஒட்டி சான்டோ பொன்னையா மீதுதொடரப்பட்ட வழக்குஇப்போது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வழக்கு சம்பந்தமான விபரம் அடுத்த வார சுதந்திரனில் வெளிவரும்.

உடல் வெளிறியும்-பலவீனமாகவும் இருந்தது என்கிறார் டாக்டர்

தன்னை கூட்டிச் செல்லுமாறு தாய்க்கு எழுதிய கடிதம் பற்றி ஜெயமெனிக்கா

"செல்வி ஜெயமெனிக்கா ஆஸ்பத்திரியில் டிஸம்பர் மாதம் 18ந் தேதி அனுமதிக்கப்பட்டபோது நான் அவரைப் பார்த்தேன். அவர் பெலவீனமாகவும் உடல் வெளிறியபடியுமிருந்தார். உடலின் மேற்புறத்தில் அனேக காயங்களும் இருந்தன" என்று செல்வி ஜெயமெனிக்கா கர்ப்பச் சிதைவு வழக்கில் டாக்டர் பி. ஏ.பர்ணந்தோ சாட்சியமளிக்கையில் கூறினர்.

இந்த வழக்கில் பத்தேகம தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் திரு ஹென்றி அபயவிக்கிரமாவும், டாக்டர் அட்டியகலேயும், ஸ்ரீமதி நாணயகாரவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார்கள்.

வழக்கு சென்ற 27ந் தேதி காலி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காலி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் பி. ஏ. பர்ணந்தோ சாட்சியமளித்தார்.

காயங்களைப்பற்றி விபரம் தெரிவிக்கையில் அவை சுமார் ஏழு நாட்களுக்குமுன் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்று டாக்டர் அபிப்பிராயம் தெரிவித்தார். டிசம்பர் 12ந் தேதிக்குப்பின் இரத்தம் பெருகியபடி இருந்ததாகவும், தனக்குக் கடைசியாக மாதவிடாய் வந்தது செப்டம்பர் 15ந் தேதி என்று செல்வி ஜெயமெனிக்கா தன்னிடம் சொன்னதாகவும் டாக்டர் கூறினர்.

அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் செல்வி ஜெயமெனிக்காவை தாம் சோதிக்கும்போது 12 வார கர்ப்பவதியாக இருந்ததாகவும், கர்ப்பச் சிதைவு பூரணமாகாததால் அதை பூரணப்படுத்தி தாம் தொடர்ந்து சிகிச்சை செய்ததாகவும் தெரிவித்தார்.

முன்பு அளித்த சாட்சியத்தைத் தொடர்ந்து மீண்டும் சாட்சியமளிக்கையில்செல்வி ஜெயமெனிக்கா தான் எப்படி, அறையில் யாரும் இல்லாதபோது தன் தாயாரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதினர் என்பதை விளக்கினர். 13-1-54ல் எழுதிய கடிதத்தில் தமையனருடன் வந்து தன்னை அழைத்துப் போகுமாறு தன் தாயாரைக் கேட்டுக் கொண்டதாக அவர் சொன்னர்.

ஜூலை 6ந் தேதி எழுதப்பட்ட ஒரு கடிதத்தைக் குறித்து செல்வி ஜெயமெனிக்க கூறுகையில், அப்போது திரு அபயவிக்கிரமா சினேகமாக இருந்ததாகவும் தன்னை தொந்தரவு செய்துவந்ததாகவும் கூறினர். அப்போதே தாம் வாடிவீடுகளுக்கு விஜயம் செய்ய ஆரம்பித்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

வேறுமொரு கடிதத்தைப் பற்றி தெரிவிக்கையில் பெற்றோரிடம் எவ்வளவு திட்டுதல்களைப் பெற்றபோதிலும் வீட்டு வாழ்க்கை இன்பமாகவும், அபெயவிக்கிரமா வீட்டில் வரவர வாழ்க்கை சந்தோஷமில்லாது இருப்பதாக தாம் எழுதியிருந்ததாகக்கூறினர்.

திரு அபெயவிக்கிரமாவும் அவரது பாரியாரும் தனக்கு அன்பாக இருந்ததாக செல்வி ஜெயமெனிக்கா எழுதியிருந்த ஒரு கடிதம் வாசிக்கப்பட்டது. யார் அந்தப்பாரியார் என்று கேட்டதற்கு அலிஸையே தாம் குறிப்பிட்டதாக ஜெயமெனிக்கா கூறினர். அலிஸ் அபயவிக்கிரமாவின் பாரியார் அல்ல என்பதை எப்போது தெரிந்துகொண்டீர்கள் என்று கேட்டதற்கு வெலிகம வாடிவீட்டிலிருந்து திரும்புகையில் என்று ஜெயமெனிக்கா பதிலளித்தார்.

மேலும் விவரிகையில் திரு அபெயவிக்கிரமாவிடம்வாடிவீட்டில் நடந்ததற்கு தான் ஆட்சேபனை தெரிவித்ததாகவும், அப்போது அலிஸ் தனது மனைவியல்ல என்றும் அலிஸ் கிராமப் புறத்திலிருந்து கொண்டுவந்துவேலைக்கமர்த்தப்பட்டவள் என்றும் அவள் மணமான பெண் என்றும் திரு அபெயவிக்கிரமா தன்னிடம் தெரிவித்ததாக செல்வி ஜெயமெனிக்கா கூறினர்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் சத்திர சிகிச்சைசெய்யப்பட்டதும் இரத்தம் பெருகத் தொடங்கியது திரு அபெயவிக்கிரமா அன்று காலை கொழும்பு போய் மாலை 4-30 மணிக்கு திரும்பி வந்தார் என்றார். தன் நிலையைப் பார்த்து டாக்டரின் ஆலோசனையின் பேரில் தமக்குக் கோப்பி தந்ததாகவும் தெரிவித்தார்

18-ந் தேதி காலை தனது தாயார் தன்னைப் பார்க்க வந்ததாகவும், புறக்கடை வழியாக வந்து தன்னைக் காரடிக்குக் கூட்டிக் கொண்டு போனதாகவும் கூறினர். காருக்குச் செல்லும்போது காவலாளி தங்களைச் சந்தித்து எஜமான் வரும்வரை காத்திருக்கச் சொன்னதாகவும், காவலாளியின் சகோதரர் காரை நிறுத்த முயற்சித்ததாகவும் சொன்னர்.

"ஆனல் நாங்கள் காரில் புறப்பட்டுவிட்டோம். நேரடியாக பொலீஸ் நிலையத்திற்குச் சென்று வாக்குமூலம் அளித்தோம். அதன்பின் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டேன்' என்று செல்வி ஜெயமெனிக்கா கூறிமுடித்தார்.

இதன்பின் மறுநாள் நடந்த விசாரணையின்போது அபெயவிக்கிரமாவிடம் வேலைபார்த்தவேலைக்காரிலில்லி சாட்சியமளித்தாள்.

தான் ஜெயமெனிக்கா வருவதற்குமுன்பாக இருந்தே சுமார் ஒருவருடம் அபெயவிக்கிரமா வீட்டில் வேலை செய்வதாகவும் தன்னை தன் சித்தப்பா ஜனப் மரைக்கார் மூலம் திரு அபெயவிக்கிரமா வீட்டில் வேலைக்கமர்த்தியதாகவும் கூறினள்.

லில்லி சாட்சியமளிக்கையில் கதிர்காமத்திற்கு திரு அபெயவிக்கிரமா ஜெயமெனிக்காவுடன் போனதாகக் கூறிவிட்டு காலியில் டிஸ்பன்ஸரிக்கும் போன விபரத்தையும் விவரித்தாள். கர்ப்பச் சிதைவு ஏற்பட்டதாகக் கருதப்படும் இரவு ஜெயமெனிக்காவுக்கு இரத்தம் பெருகிய விதத்தையும் விளக்கிக் கூறினள்.

இன்ஷூரன்ஸ் சம்பந்தமானதா .....

கலந்தாலோசியுங்கள்!

வான் காட்

குறைந்த சிலவில் நிகரற்றசேவை

★ மோட்டார். ★ ஆயுள்.

★ தொழிலாளர் நஷ்டஈடு.

கே. கிருஷ்ணசாமி
பிரதம ஏஜன்ட்

வான்காட் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட
மன்சூர் கட்டடம்
மெயின் வீதி, கொழும்பு—11.

போன்: 5054 தந்தி: கார்டியன்.

சுயபாஷை ஆசிரியர்கள் சுரணையற்றிருக்கும் வரை உரிமைகளைப் பெறமுடியாது

ஆட்சியாளரை நிர்ப்பந்திக்கும் அளவுக்கு ஒற்றுமை ஓங்கவேண்டும்

மேல் மாகாண தமிழ் ஆசிரியர் சங்க கூட்டத்தில் கொழும்பு மேயர் டாக்டர் என். எம். பெரேரா பேச்சு

இன்று உங்களுக்கு ஒரு நீண்ட உபந்நியாசத்தை நிகழ்த்துவதற்காக நான் இங்கு வரவில்லை. உங்களுடைய வருடாந்தக் கூட்டத்தில் நீங்கள் என்னத்தைப் பேசப் போகிறீர்கள்; என்ன உரிமைகளுக்காக வாதாடப் போகிறீர்கள்; உங்களுக்கு இப்பொழுது அவசரம் வேண்டிய கோரிக்கைகள் என்ன? என்பதையெல்லாம் அறிந்து கொண்டு போக வந்தேன்.

மேல் மாகாணத் தமிழ் ஆசிரிய சங்கத்திலிருந்து, வருடாந்தக் கூட்டத்திற்குச் சமூகமளிக்கும்படியாக எமக்கு அழைப்புக் கிடைத்தது. வருடாந்தக் கூட்டமென்றவுடன் ஆயிரக் கணக்கில் ஆசிரியர்கள் கூடி இருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டு வந்தேன். ஆனால் இங்கு கூடி இருப்பவர்கள் தான் உங்கள் சங்க அங்கத்தவர்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை.

நான் இப்பொழுதான் துறைமுகத் தொழிலாளர் கூட்டத்தில் பேசிவிட்டு வருகிறேன். தமிழிலோ, சிங்களத்திலோ, ஆங்கிலத்திலோ கொஞ்சமேனும் கல்வி அறிவில்லாத அவர்கள் உற்சாகத்துடனும், உறுதிப்பாட்டுடனும் ஒற்றுமையாகவும் கூட்டங்களுக்கு வருகிறார்கள். தங்கள் கோரிக்கைகளுக்காக உறுதிப்பாட்டுடன் போராடுகிறார்கள். ஆனால் கல்வி அறிவு படைத்த ஆசிரியர்களாகிய நீங்கள் திரளாக ஒன்று கூடி உங்கள் கோரிக்கைகளைச் சமர்பிக்காமல் இருக்கிறீர்கள். இன்று வேண்டி இருப்பது உங்கள் ஸ்தாபனத்தைப் பலப்படுத்துவதுதான். சுயபாஷா ஆசிரியர்களாகிய நீங்கள் எல்லாரும் ஒன்றுகூடி ஒரு குடையின் கீழ் கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன்மூலம் அரசாங்கத்தை அடிபணியச் செய்யமுடியும்.

அரசாங்க குமாஸ்தாக்களைக் கவனியுங்கள். அவர்களுடைய ஸ்தாபனங்கள் எல்லாம் ஒன்றுகத் திரண்டு ஒரே முகமாக 35 கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் கண்ட பிரதமர் அக்கோரிக்கைகளைப்பற்றி விவாதிக்க அவர்களை எல்லாவித செலவும் கொடுத்து ஒரு தேநீர் விருந்திற்கு அழைத்திருக்கிறார். ஆனால் இதைப் போன்று உங்கள் கோரிக்கைகளை விவாதிக்கப் பிரதமர் தேநீர் விருந்திற்கு உங்களை அழைப்பாரா? இல்லவே இல்லை. ஒருபோதும் அழைக்கமாட்டார். சுயபாஷா ஆசிரியர்கள் 69 ரூபா சம்பளத்தோடு வாழ்க்கையை நடாத்த முடியாது என்பது யூ. என். பி. அரசாங்கத்திற்கு தெரியாததல்ல. ஆனால் நீங்கள்கையால்ஆகாதவர்கள் என்று அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது: தங்களை எப்பொழுது நெருக்கிக்கொண்டிருப்பவர்களுடைய குறைகளைக் கவனிப்பதில் அரசாங்கம் கண்செலுத்துமேயொழிய உங்களைப் போன்று சோம்பிக் கிடப்பவர்களுடைய கோரிக்கைகளைத் திரும்பியும் பார்க்கமாட்டாது. நான் பலமுறை சுயபாஷா ஆசிரியர்களைப்பற்றிப் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்தேன். ஆனால் மந்திரிகள் சற்றே செவியைச் சாய்த்துக்கூட அவற்றைக்கேட்கவில்லை. யு. என். பி. அரசாங்கமும், மந்திரிகளும், ஏறுகிற மேடைகளிலெல்லாம் தேசிய மொழிகளைப்பற்றி வாய்வேதாந்தம் பேசுகிறார்கள். ஆனால் செய்கையிலே அவர்கள் தேசியமொழியை அலட்சியம் செய்கிறார்கள். உங்களுக்கு அளிக்கப்படும் வேதனத்திலிருந்தே நீங்கள் இதனை அறிந்துகொள்ளலாம். ஆகவே நீங்கள் இவ்வித நிலையைப்போக்க ஸ்தாபனரீதியாக ஒன்றுபடுங்கள். இலங்கை முழுதும் இருக்கும் சுயபாஷா ஆசிரியர் சங்கங்களை ஒன்றுகக்கூட்டிப் பலப்படுத்துங்கள். ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆசிரிய சங்கங்களுடன் ஒத்துழையுங்கள். ஒன்று கூடுங்கள். ஆயிரக்கணக்கில் ஒன்றுகூடி உங்கள் பலத்தை அரசாங்கத்திற்குக்காட்டுங்கள். அப்பொழுதுதான் அவர்கள் கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பார்கள்.

உங்களுடைய கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வற்புறுத்த நான் எப்பொழுதுமே ஆயத்தமாக இருக்கிறேன். இப்பொழுது தாய்மொழிக்கொள்கையில் அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம்கொண்டு வந்திருக்கிறோம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நான் பாராளுமன்றத்தில் பேசும்பொழுது உங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவேன். ஆனால் இப்பொழுதுதான் தக்கதருணம். அரசாங்கம் சம்பளத்திட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கிறது. அது விரைவில் வெளிவரும். இத்தருணத்தில் உங்கள் ஸ்தாபனங்களைப் பலப்படுத்திக் கோரிக்கைகளுக்காகப் போராடவேண்டும். உங்களுடைய கோரிக்கைகளுக்கு நான் எப்பொழுதும் பக்கபலமாக இருப்பேன்.

கடைசியில் ஆசிரியர்களைப் பற்றிக் கூறவேண்டியதொன்றிருக்கிறது. நான் பல ஆசிரியர்களோடு பழகுகிறேன். அவர்களுடன் பலமுறை சம்பாஷித்திருக்கிறேன். மணித்தியாலக்கணக்காகத் தங்கள் குறைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். அல்லது நீண்ட கடிதங்களையும், பிரேரணைகளையும் எழுதி பாராளுமன்ற எம். பி.க்களுக்கும், மந்திரிகளுக்கும் அனுப்பிக்கொண்டிருப்பார்கள். இத்துடன் தங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறிவிடுமென்று காத்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் கடிதங்களும் பிரேரணைகளும், மந்திரிமாருடையவும். எம். பிக்களுடையவும் குப்பைத் தொட்டிக்குள்ளேதான் போய்ச் சேருகிறது. அப்புறம் பழைய பல்லவிதான். ஆகவே இனியும் இவ்விதம் ஏமாற்றமடையாமல் ஸ்தாபனரீதியாக ஒன்று சேருங்கள். உங்களிடம் உள்ள பலத்தை மற்றவர்களும் அறியச்செய்யுங்கள். உங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கத்தை நெருக்குங்கள். உங்கள் ஒரே குரலை, ஒற்றுமையின் பலத்தை அரசாங்கம் கண்டுபயப்படட்டும். அதன்பின் உங்கள் உரிமைகள் தானாகவே கிடைக்கும். உங்கள் சங்கத்தின் கோரிக்கைகளை என்னிடம் சமர்ப்பித்தால் நான் அவற்றிற்காக அரசாங்கத்திடம் வாதாட எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறேன்.

புதிதாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் கைத்தொழில் இயக்கத்தில் சேவை செய்துவரும் முக்கியஸ்தரை இது சம்பந்தமாக நமது நிருபர் கேட்டதற்கு, 'இந்த நாட்டின் தொழில்களை வளர்ப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டவேண்டும். அன்னிய முதலாளிகளுக்கும், அன்னிய பொருட்களை இறக்குமதி செய்துகொள்ளலாபமடிக்கும் நோக்குடன் உள்ள பெரும் வர்த்தகர்களுக்கும் கட்டுப்பாடில்லாத சுதந்திரம் இருக்கும் மட்டும் அன்னிய பொருட்களின் போட்டியின் முன் தேசீயத் தொழில்கள் எக்காலத்திலும் தலைநிமிர முடியாது. எனவே நாட்டு மக்களினதுகைத்தொழிலின் வளர்ச்சிக்குஉதவவேண்டும் என்றுல் அன்னிய பொருட்களின் இறக்குமதியில் ஒரு வித கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதுடன் விஞ்ஞான ரீதியான வழிகளில் நம் உள்நாட்டு தொழில்களை வளர்ப்பது அவசியம்' என்றார்.

அறிமுகப்படுத்துகிறோம்

கலைஞர் 12:

பாரதி பரம்பரையில் வந்த வி. கி. இராசதுரை

--"பத்மன்"

1942ம்வருடம்கல்முனைப் பட்டணமைதானத்தில் ஒரு விழா. நெல்மணிகளினால் ஆக்கப்பட்ட தோரணங்கள், ஏனைய விளைபொருட்களினால் ஆக்கப்பட்ட சோடனைகள். மந்திரிகள் மற்றும் பெரியார்கள் குழுமியிருந்தனர். ஜனக்கடல்போல் கூட்டம்.

15 வயது நிரம்பாத பாலகன் ஒருவன் மேடையொன்றில் தாவி ஏறினான்; கறுத்துத்திரண்ட அவனது தேகமும் குறுகுறுத்த பார்வையை அங்குமிங்கும் அலையவிட்ட அவனது கண்களும் அவனுக்கு அழகை அளித்தன. ஒலிபெருக்கி வசதியில்லாத அம்மேடையிலே தனது இனிய குரலை எழுப்பி பாட்டிசைக்க ஆரம்பித்தான்பையன். சபையோர் மெய்மறந்து இருந்தனர். இப்பாட்டுகளைப்பாடி பணப்பரிசும் பாராட்டுப்பத்திரமும் பெற்ற சிறுவன் வேறு யாருமல்ல ஈழத்தின் நல்ல கவிகளில் ஒருவரான திரு வி. கி. இராசதுரையே.

மட்டக்களப்பைச் நேர்ந்த கல்லாறு என்ற இடத்திலே வில்லியம் முத்துதம்பி கிறகோறிஸ் ஆசிரியருக்கும், முருகப்பர் சின்னப்பிள்ளை ஆசிரியைக்கும் மகனாக 1927ம் வருடம் புரட்டாதி 3ம் நாள் பிறந்தார். தாய் தகப்பன் இருவருமே தமிழ் ஆசிரியராய் வாய்த்தமையினால், தமிழில் பற்றுக்கொண்டு தமிழிலேயே பயிற்றப்பட்ட ஆசிரியராகியுள்ளார்—திரு இராசதுரை. ஆசிரிய புயிற்சிக்கலாசாலையில் பயிலும்போதே இவருடைய கவிதை புனையும் சக்தியைக்கண்ணுற்ற போதகராசிரியர் பண்டிதர் சே. பூபாலபிள்ளை அவர்கள் இவருக்கு ''பாரதி—பரம்பரைப்பாவலன்'' என்ற பட்டத்தைச் சூட்டினார்.

சுதந்திரன், வீரகேசரி, ஈழகேசரி ஆகிய பத்திரிகைகளிலும், இன்னும் அனேகதென்னிந்தியப் பத்திரிகைகளிலும் திரு. இராசதுரை அவர்களின் கவிதைகள் வெளிவந்துள்ளன.

சென்ற ஆண்டு சித்திரை மாதத்தில் வீரமுனை என்ற கிராமத்திலே, ஒரு சில சுயநலப் புலிகளின் பேயாட்டத்தினால் விளைந்த கோரத் தீவிபத்தை அடிப்படையாகக் கொண்டு, ''தீயுண்ட வீரமுனை'' என்ற விபரண காவியத்தை அச்சிட்டு, அதனால் கிடைத்த லாபத்தை, வீரமுனை அகதிக் குழந்தைகட்கு கல்வி சம்பந்தமான உதவி கட்கு அளித்தார்.

திரிகோணமலை கடற்படைக்காரியாலயத்தில் சிலகாலம் குமாஸ்தாவாக கடமையாற்றிய இவர், ஹற்றன் ''ஹைலன்ட்ஸ்'' கல்லூரியிலும், திரிகோணமலை—குச்சவெளியிலும், வீரமுனையிலும் ஆசிரியராகக் கடமை பார்த்துள்ளார். தற்போது அக்கரைப்பற்று ''விளாக்கீது'' பாடசாலையில் ஆசிரியராகவுள்ளார்.

1954ம் வருடத்துப் பொங்கல் தினத்தன்று இலங்கை வானொலியில் ''இன்பப் பொங்கல்'' என்ற கவிதையைப் படைத்தார். வானொலியில் சிறுசிறு நாடகங்களும் நாட்டுப்பாடல்களின் தொகுப்புகளும் எழுதி இவை ஒலிபரப்பப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நடைபெறும் கூட்டங்களிலும் பங்குகொண்டு சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

''யான் இதுவரை பாடியுள்ள முன்னூற்றுக்கு மேற்பட்ட கவிதைகளை ஒன்று கூட்டி ஒரு பெரிய கவிதைத் தொகுதி வெளியிடவேண்டும்; அதைப் ''பாரதிதாச'' னிடம் சமர்ப்பித்து, அவர் பாராட்டைப் பெற வேண்டும். ஈழத்துத் தமிழ் பேசும் மக்களிடையே மறைந்து வாழ்கின்ற எல்லா இளங் கவிஞர்களும் ஒரு பெரிய மகாநாடு கூடி ஒரு 'தமிழ் கவிவிழா' நடத்தவேண்டும். தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசம் தனியரசுபெற வேண்டும். ஆகியவைகளே என் பேரவாக்கள்'' என்று தன்னுடைய ஆவலை வெளியிடுகிறார் இவ்விளங் கவிஞர் வி. கி. இராசதுரை.

சத்தியமே ஜெயம்

A. S. D. அமிர்தானந்த ★ லேகியம் ★

பிரதி தினமும் அனுபவத்தில் — முதன்மையானது — பத்தியமில்லாதது — ருசிகரமானது.

43 — வருஷ வைத்திய அனுபவத்தில் ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளது.



எமது நண்பர்கள் கவனிப்பு:

அமிர்தானந்த லேகியத்தால் (1000) வியாதிகள் சுகப்படுமென தற்புகழ் கூறவும், வர்ணிக்கவும் முன்வரவில்லை—எங்கள் வைத்திய முறைக்கு விகடம் அவசியமே இல்லை. வைத்திய அனுபவமுறை அனுபவத்தில் தெரிந்துகொள்ளுங்கள்.

விபரம்:

சரீர உஷ்ணங்களுக்கும், ஜீரண சக்திக்கும், மூல வியாதியஸ்தர்களுக்கும், கணைசூட்டிற்கும், சொறி, சிரங்கு, ஊரல், தடிப்பு இவைகளுக்கும், இரத்த சுத்திக்கும் அனுபவமானது. பிரதி தினமும் மல ஜலங்களைக் கிரமப்படி கழிப்பித்து சரீர சுகம் கொடுப்பதில்நிகரற்றது.

புட்டி ஒன்றிற்கு விலை ரூ. 2-50.

முன்பணமனுப்பவும் தபால் செலவு இலவசம்

A. S. D. மருந்துகள் கிடைக்குமிடம்:

மலையாள மெடிக்கல் ஹால்,

179, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் நவீனம்:

41. தெய்வப் பிறவி

பாக்கை மென்றுகொண்டு அம்மா தொடர்ந்து சொன்னார்:

"தங்கையா தம்பியைவிட்டுப் பிரியும்போது தன்னுடைய முகவரியைக் கொடுத்துச் சென்றார். அத்துடன் ஆயிரம் பவுண் காசையும் உடனே காசோலையாகக் கொடுத்தார். பின்னர் மன்றாட்டமாக ஒரு வேண்டுகோளும் கொடுத்தார். "உங்களைக் கண்டவுடன் என்னுடைய அடி உள்ளத்தில் ஏதோ துடிக்கின்றது. எங்கள் இருவருக்கும் முற்பிறப்பில் ஏதோ தொடர்பிருக்கின்றது. என்னை உங்களுடைய நண்பனுகவோ அல்லது உறவினனுகவோ கொள்ள வேண்டும்" எனத் தங்கையா தம்பியைப்பார்த்து மன்றாடினர்.

தம்பிக்குத் தன்னையேநம்ப முடியவில்லை. எங்கோ மேல் உலகத்தில் கற்பக மரத்தின் கீழ் இருக்கின்ற உணர்ச்சி ஏற்பட்டது. தங்கையாவின் வேண்டுகோளுக்கு அவர் எவ்விதமான மறுமொழியும் சொல்லவில்லை.

"ஒன்றும் சொல்லாதபடியால் ஓம் என்றே கொள்கின்றேன்" என்றார் தங்கையா.

நாதன் தன் கையிலே உள்ள காசோலையையும் தங்கையாவையும் மாறிமாறிப் பார்த்தார். பின்னர் தன் இரு கைகளையும் எடுத்துத் தங்கையாவைக் கும்பிட்டார்.

"சீச்சீ என்னையேன் கும்பிடவேண்டும்" எனச்சொல்லித் தங்கையா தம்பியைக் கட்டியணைத்தார். பின்னர் "இப்பொழுது எனக்கு நேரமாகிவிட்டது: நான் பிறநாடு செல்லவேண்டும். குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒருமுறை என்றாலும் நான் இங்கிலாந்திற்கு வருவேன். அப்பொழுது காணலாம். உங்களுடைய செலவிற்கு எடுத்துக் கொண்டு எஞ்சியதை கிறிண்டிலே என்கின்ற வங்கியிற்போட்டு வைக்கவும். அங்கேதான் என்னுடைய கணக்கும் இருக்கின்றது. அவர்களுக்கு நான் எழுதுவேன். சரியாக மூன்று நாட்கள் கழித்து அங்கே போங்கள். வங்கிக் காரர்கள் ஆகவேண்டியவைகளைச் செய்வார்கள். மாதம் மாதம் உங்களுக்காக அனுப்புவேன். அடுத்தமுறை காண்போம்" எனக் கூறித் தங்கையா சென்றுவிட்டார்.

"விடுமுறை முடிந்தது. மாணவர்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள். நாதனுடன் சிமித் என்னும் ஒரு வெள்ளைக்காரப் பையனும் ஆராய்ச்சி செய்து வந்தான். ஆராய்ச்சி வகுப்பில் திறமையில் தம்பிக்கு அடுத்தது சிமித் தான். இருவரும் நண்பர்களாகி விட்டார்கள். நாதனைப் போலத் தான் சிமித்தும். அவரும் வறியவர். ஏழு நாட்களாக நாதன் தனக்குக்கிடைத்த காசோலையைப்பற்றி ஒருவருக்குஞ் சொல்லவில்லை. முடிவிலே அதனைப்பற்றிச் சிமித்திற்குச் சொன்னர்.

"இப்படியான ஆட்களை நம்ப முடியாது. அந்த ஆள் சும்மாக உனக்கு ஒரு போலிக் காசோலையை எழுதித் தந்தால் என்ன செய்யலாம். வங்கிக்கு கொண்டுபோய் ஏமாற்றமடைய வேண்டியதுதான். அத்துடன் அவப் பேரும்வரும். அந்த ஆசாமிக்கு வங்கியிலே காசில்லாவிட்டால் எங்களுக்கு இந்தத் தொல்லை எல்லாம் ஏற்படும். எதற்கும் ஒரு மாதம் கழித்துச் செல்வோம். காசோலையைக் கவனமாக வைத்திரு" என்றார் சிமித்.

சிமித் சொன்னது சரியென்று படவே நாதனும் காசோலையை வைத்திருந்தார். பத்தாவது நாள் கிறிண்டிலே வங்கிலிருந்து ஒரு கடுதாசி நாதனுக்கு வந்தது. நாதனை நேரிலேவந்து காணும்படி அதிற் குறிக்கப்பட்டிருந்தது. சிமித்தையும் அழைத்துக்கொண்டு நாதன் வங்கிக்குச் சென்றார். சென்றதும் வங்கி உதவி முகாமைக்காரர் ஒருவர் இருவரையும் வரவேற்றார். வரவேற்ற பின்னர் "திரு தங்கையா தந்த காசோலையை ஏன் மாற்ற வரவில்லை?" எனக் கேட்டார். நாதன்மறுமொழி சொல்ல முன்னர் சிமித் அவரை அந்தத்தொல்லையிலிருந்து காப்பாற்றினர். "காசோலையை மாற்றினுல் செலவாகிவிடும். அதுதான் நாங்கள் வரவில்லை" எனச் சிமித் மறுமொழி கூறினர்.

"திரு தங்கையா எங்களுக்கு எழுதியுள்ளார். நீங்கள் இந்த ஆயிரம் பவுணையும் கொண்டு எங்களுடைய வங்கியில் கணக்குத் தொடங்குங்கள். பற்று வரவு உங்களுக்கும் எங்களுக்கும் இருந்தால் நல்லது. மாதம் மாதம் திரு தங்கையா அனுப்பும் காசோலையை நீங்கள் மாற்றவுஞ் சுகமாக இருக்கும். அப்படித்தான் அவரும் எழுதியுள்ளார்" என முகாமைக்காரர் சொன்னர். அதன்படியே நாதன் செய்தார். அதற்கு வேண்டிய தாள்களை நிரப்பும்போது "திரு தங்கையா என்ன பெறுமதி இருக்கும்?" எனச் சிமித் ஒரு கேள்வியைக்கேட்டார். "எவ்வளவென்று தெரியாது. அவர் ஒரு கோடீசுவரன் என்பது எங்களுக்குத் தெரியும். அவருடைய கணக்கு அப்படி இருக்கின்றது" என உதவி முகாமைக்காரர் சொன்னர்.

"தங்கையா அனுப்பும் பணத்தைக்கொண்டு நாதன் சிமித்திற்கும் ஏதோ உதவி செய்து வந்தார். அந்தச் சிமித் இப்பொழுது இங்கிலாந்திற் பேராசிரியராக இருக்கின்றார். அவரிடம் தான் குமாரசாமி ஆராய்ச்சிக்குச் செல்கின்றார். அந்த ஆராய்ச்சிப் படிப்பை நாதனே திறம்படச் செய்வார். சிமித்திலும் பார்க்க நாதன் கெட்டிக்காரர். ஆனல் குமாரசாமி பிற நாடுகளுக்குச் சென்று பழக வேண்டும் என்பதற்காகவே நாதன் அவரை இங்கிலாந்திற்கு அனுப்புகின்றார்."

அம்மா இதனைச் சொல்லும்போது என்னுடைய உள்ளம் வெந்துவெடித்தது.

"தங்கையாவும் நாதனும் நெருங்கிய நண்பர்களானர்கள். நாதனுடைய திறமையைத் தங்கையா நாளடைவில் அறிந்தார். இருவரும் பழகப் பழக ஒருவருடைய நல்லியல்புகளையும் பண்பாட்டையும் மற்றவர் அறிந்து கொண்டார்கள்; கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல நாதனுக்குத் தங்கையாவின் நட்புக் கிடைத்தது."

"பின்னர் என்னம்மா துக்கம்?" என என்னுடைய ஆவலை அடக்க முடியாமல் கேட்டேன்.

"பொறுமை வேண்டும் பிள்ளை. அந்தக் கதையை நான்தான் சொல்லப் போகின்றேன். நாதனுடைய ஆராய்ச்சித் திறமையைக் கண்டு எல்லோரும் வியந்தனர். நாதனுக்குப் பட்டமளிக்கப்படும். விழாவிற்கென தங்கையா வந்திருந்தார். தங்கையாவைத் தனது சிறிய தந்தை முறை இங்கிலாந்தில் பத்து நாட்களுக்கு மேலாகத் தங்குவதில்லை. ஆனல் ஒருமுறை அவர் வழக்கத்திலும்பார்க்க அதிக நாள் தங்கினர். அதுவே அவர் இங்கிலாந்தில் கடைசியாகத் தங்கியது. இப்படியாக அவருக்கு நடக்குமென்பதை நாதன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

"தங்கையா தன்னுடைய மகளின் மேற்படிப்பிற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்காக தன்னுடைய ஒரே ஒரு மகளையும் அழைத்துக்கொண்டு இங்கிலாந்திற்கு வந்திருந்தார். அவர் வந்து நிற்கும்போது தென் ஆபிரிக்காவில் பெரும் கலகம் ஏற்பட்டது. தங்கையா இங்கிலாந்தில் நிற்கையில் வெள்ளையர்கள் தங்கையாவிற்கும் ஆசிய மக்களுக்கும் எதிராகப் பெரும் கிளர்ச்சி செய்தார்கள். அதன் பயனுக இனவெறி பிடித்த வெள்ளையர்களின் கொலை பாதகக் கூட்டம் தங்கையாவின் ஆலைக்கு நெருப்புக் கொளுத்தியது. இதனுலே தங்கையாவுக்கு பல்லாயிரக் கணக்கான உரூபாவுக்குச் சேதம் ஏற்பட்டது. தன்னுடைய மகளின் மேற்படிப்பு ஒழுங்குகள் கிட்டத்தட்ட முடிந்தபடியால் எஞ்சியவைகளை நாதனைக் கவனிக்கும்படி சொல்லிவிட்டுத் தங்கையா உடனே தென் ஆபிரிக்காவிற்கு ஆகாயக் கப்பல்மூலம் சென்றார். அவர் ஆபிரிக்காவில் அதன் பின்னர் மூன்று நாட்கள் தான் உயிருடன் வாழ்ந்தார். வெள்ளையர்களின் ஏவலினுல் இனவெறி பிடித்த ஒரு வெள்ளையன் அவரை துப்பாக்கியினுற் சுட்டுக் கொன்றான். சுட்டு உயிர் பிரியும் தறுவாயிலும் "வாழ்க ஆசியா! வாழ்க ஆசிய மக்கள்" என அவர் வீர மொழிகளைச் சொன்னராம். உண்மையில் அவர் ஒரு தெய்வப் பிறவிதான்.

தங்கையாவின் தனிப்பிள்ளையான சந்திரமதி இங்கிலாந்தில் திடீரென அநாதையானர். சந்திரமதி என்றால் சந்திரமதிதான். சந்திரமதியைத் தேற்றும் பொறுப்பும் பார்க்கும் பொறுப்பும் நாதனுடையதாகிவிட்டன. திக்கற்று நிற்கும் அப்பெண் நாதனுடைய உதவியை நம்பியே அங்கிருந்தார். இதற்கிடையில் சந்திரமதிக்கும் பெரிய ஒரு கவலை இருந்தது. தந்தையை இழந்து நிற்கும் அந்த அபலைப் பெண் தன்னுடைய தாயின் நிலையை இட்டு ஏங்கினுள். தாய் ஆபிரிக்காவிலே தொடர்ந்து வாழ்ந்தால் தந்தைக்கு ஏற்

(11ம் பக்கம் பார்க்க)

இந்த எழுத்துக்கள்!

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் புதிய 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும்சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

நவீன முறைப்படி அச்செழுத்துக்களை வார்க்கும் உயர்தரமான இயந்திர சாதனத்தை நாம் புதிதாக நிறுவியுள்ளோம் என்பதை நமது நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

8, 10, 12, 14, 16, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

நாம் இப்பத்திரிகையில் உபயோகிக்கும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. இவ்வெழுத்துக்கள் உயர்தரமான உலோகத்திலும், தரம் சற்று குறைந்த உலோகத்திலும் விலைக்குத் தக்கபடி கிடைக்கும். வேண்டியவர்கள் விவரத்திற்கும் விலைப் பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக்கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக்கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,
194 ஏ, தட்டா தெரு, கொழும்பு—12.

மலச்சிக்கலுக்கும் மூலவியாதிக்கும்

ரிஷி லேகியம்

ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்

இதனைச் சாப்பிடுவதால் 9 வகையான மூலரோகங்களும் அதற்கு காரணமான மலச்சிக்கல்கள், அவற்றால் ஏற்படும் உபாதைகளும் பூரணமாகத் தீர்ந்துபோகும். மூலமுளைகள், இரத்தம், சீழ், பவுந்திரம், உள்மூலம், வெளிமூலம், தீராத மலச்சிக்கல், மூலச்சூட்டினால் உண்டாகும் உபாதைகள், தேகமெலிவு, கைகால் தேகஎரிவு, கடுப்புகள், வாய்வு ராகங்கள், இரத்த அசுத்தத்தால் உண்டாகும் தாலிப்பற்றிய வியாதிகள், சூதக ரோகங்கள், ய-வும் தீரும். கேட்லாக் இனமாக கொடுக்கப்படும்.

30நாள் மருந்து ரூ 5 50 15நாள் மருந்து ரூ. 3-00
தபால் செலவு சதம் 85.

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.
சோல் ஏஜண்டு:-
எஸ். சுப்பிரமணியம் அன் கோ.,
55, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலைவனத்திலே பழச்சாறு தேன்மழை பொழிவதைக் காணும் கவிஞர்

மக்கத்திலே மானிலத்து இலட்சியபுரியை சித்தரிக்கிறார்

இஸ்லாத்தின் பிறப்பிடம்பற்றி கவி உமர் தரும் மங்காத ஓவியம்

தன்னிகரில்லாத் தலைவன் ஒருவனைக் கொண்டு எழும் காப்பியங்கள்தோறும் நாட்டுப் படலம், நகரப் படலம் என்பனவும் இடம்பெறவேண்டும் என்பது காப்பிய இலட்சணங்களில் ஒன்றாகும். இப்படலத்தில் அந்நாட்டின் இயற்கை வனப்புகள், செல்வச் சிறப்புகள் என்பனவும், பட்டினங்களின் அழகுகள், கடைவீதிகளின் தனி இயல்புகள் என்பவற்றோடு மக்களது பண்புகள் பழக்க வழக்கங்கள் என்பனவும் இடம்பெறும். இதிலிருந்து அந்நாட்டு மக்கள் எவ்வளவு தூரம் நாகரிகமும், ஏனைய சிறப்புகளுமுடையவர் என்பதையும், அதற்கேற்ப அந்நாட்டின் சீரிய சிறப்புக்களையும் ஓரளவு மட்டிடலாம்.

இதில் புலவர்கள் அழகும், நயமும் வேண்டி தம் கற்பனை வளத்தோடு உயர்வேற்றியே கூறுவர். எனினும் உண்மை சிறிதுமில்லை என்று எண்ணுவது தவறு. பல நூல்களில் நாட்டுப் படலங்கள் படிக்கும்தோறும் இன்பம் பயப்பதாகும். நாட்டின் சிறப்பைப் பற்றிக் கூறும் புலவர்களின் தனித்திறமையே அலாதியானது. நாட்டுப் படலத்தைப் படிக்கும் போதே புலவனுடைய 'கையிருப்பை' நாம் அளவிட முடியும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சரிதையைக் கூறும் சீறுவைப் பாடிய கவி உமருக்கு நாட்டுப் படலத்தைப் பாடுகையில் ஒரு பெரும் சங்கடம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் நாட்டுப் படலத்தில் அனேகமாக அந்நாட்டின் நீர்வளம் நிலவளம், இயற்கை எழில்கள், (தடாகங்கள், பட்சியினங்கள்) முதலாம் பல அம்சங்களைப்பற்றியே பாட வேண்டி ஏற்படும். இந்நிலையில் உலகிலேயே அதிவரண்ட பாலைவனமாகக் கருதப்படும், அராபிய பாலைவனத்தின், மக்கமா நகரில் இந்த அம்சங்கள் எதைத்தான் எதிர்பார்க்கலாம்? எனவே புலவர் ஒரு தந்திரம் செய்தார்; தேவையான விடத்து இந்தியாவைப் பின்னணியாக வைத்துக்கொண்டே நாட்டுப் படலம் முழுமையும் பாடி முடித்தார். புலவர் எங்கு எதை வைத்துப் பாடினாலும் புலவனுடைய கற்பனைத்திறனே வேண்டிய விஷயமாகும். பாத்திரங்கள் மாசுறுவண்ணம் பாடுவது அவன் கடனேயன்றி அவனுடைய கற்பனையில் தலையிடுவதற்கு யாருக்கும் உரிமையில்லை. நாட்டுப் படலத்தில் புலவர் உமர் தரும் சில அழகிய காட்சிகளை இங்கு நோக்குவோம்.

பெண்களெல்லாம் புனலாடிய பின்னர் தம் கூந்தலை உலர்த்தும் நோக்கமாகவும் அத்தோடு மணம் வீசும் தம் நெடிய கூந்தல்கள் மேலும் மணம் வீசும் பொருட்டும், கூந்தலுக்கு புகை பிடிக்கின்றனர். என்ன புகை, சாதாரணமாக அடுப்பங்கரைக்குப் பக்கத்தில் குந்திக்கொண்டு, அடுப்பிலிருந்துவரும் விறகுப் புகையா? இல்லை! இல்லை!! சந்தனக் கட்டைகளை எரித்து அதிலிருந்துவரும் நறுமணம் வீசும் புகையைத்தான் பிடிக்கின்றனர். ஊரெல்லாம் இந்த நிலை. எனவே இந்தப் புகையெல்லாம் ஒன்று திரண்டு விண்ணிலே மேகங்களோடு போட்டியிட்டுக் கொண்டு நிற்கின்றன. இப்படியாயின் அப்பெண்கள் உபயோகிக்கும் சந்தனக்கட்டைகள்தான் எத்துணை அளவாகுமோ?

அங்குள்ள பழச் சோலைகளை நோக்கினால் இதைவிட அற்புதம். பழச்சோலைகளுக்கு வான்மழை தேவை. இதைப் பெற்றபின் பழ மரங்களெல்லாம் தேன் மழை பொழிகின்றன. ஆம், மா, பலா, வாழை ஆகிய மரங்களில் பழங்கள் கோதறக் கனிந்து, நெகிழ்ந்து, சாறுக தேன்மழை என நினைக்கும்படி கொட்டிவிடுகின்றன. இப்பழங்களையெல்லாம் கவனிப்பார் அங்கு யார்? மேலும் அங்குள்ள ஆலைகள்தோறும் கருப்பஞ் சாறு, ஆற்றை ஒக்குமாறு பாகசாலைகளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அங்குள்ள நீர்வளத்தைக் கேட்பானேன்? நீல நிறத்தையுடைய வாயைப் பெற்ற குவளைப் புஷ்பங்கள் நிறைந்த தடாகங்களெல்லாம் கடலா? குளமா? என்று ஐயுறும் வண்ணம் பரந்து தோற்றுகிறது. ''நீல நிறத்தையுடைய வாயைப்பெற்ற குவளை மலர்'' என்பதிலிருந்து நமது பெண்களெல்லாம் உதட்டில் சிவப்பு (லிப்ஸ்டிக்) பூசிக்கொள்வது போல அம்மலர்கள் நீல நிற லிப்ஸ்டிக் பூசிக்கொள்கின்றனவோ? என்று நாம் ஐயுறுதலும் சாலும். ஆனல் எங்குமுள்ளது போலவே தான் அங்குள்ள குவளை

அ. ஸ. அப்துஸ்ஸமது

மலர்களும் நீல நிற முடையன. எனினும் கற்பனைச் சிறப்பு நோக்கி, ''நீல வாய் மலர்'' என்று புல்வர் அழகுபடக் கூறினர். இதுதான் பாட்டு:-

ஏலவார் குழற்கிடு புகைமஞ்சி
னேடிகலுஞ்
சோலை வாய் தொறு முக்கனி
தேன்மழை சொரியு
மாலைவாய் தோறுங் கரும்
புடைத் தாறெடுத் தோடு
நீல வாய் மலர் வாவிகள்
பெருங்கட நிகர்க்கும்

இந்த மா, பலா, வாழை ஆகிய பழ மரங்களிலிருந்து சொரியும் பழச் சாறுகிய தேன்மாரி அச்சோலைகளுக்குள்ளேயே சேமித்துவிடவில்லை. சாறும், கனிந்த சிவந்தபழங்களுமாக பெருக்கெடுத்து நாலுபுறமும் ஓடி, அங்குள்ள சிறிய வாவிகளை நிரப்புகின்றன. நம் நாட்டில்கூட கிடாமாடுகளின் இயல்புநாமறிந்ததே. அவை உல்லாசமாக படுத்து ஆனந்திப்பதற்கு சேறுகள் நிரம்பிய சிறிய வாவிகளையே நாடும். மக்கமா நகரிலுள்ள எருமை மாடுகள நம் நாட்டு மாடுகளைப்போல, அசுத்தமும் துர்மணமும் நிரம்பிய சேற்று வாவிகளை அறியா. எனவே இந்தப் பழச்சேறு நிரம்பிக் கிடக்கும் வாவிகளிலேயே கிடந்து ஆனந்திக்கின்றன. மாடுகள் வெளிவரும்போது பார்க்க பெரும் வியப்பு. கரிய நிறத்தையுடைய எருமைகளெல்லாம் பழச்சாற்றின் பொன்னிறம் பெற்று விளங்குகின்றன. பார்ப்பவர்கள் இங்குள்ள வைகளெல்லாம் ''பொன்னெருமைக் குலத்துதித்தனவோ'' என்று நினைக்கும்படியாக தோற்றுகின்றன. அகிலமே புகழ்ந்தேற்றும் ஆத்மீகத் தலைவர், இணையற்ற இறைதூதரை உலகிற்களித்த மக்கமா நகரில் எருமைகள்கூட பொன்மேனி பெறினும் வியப்பென்ன?

தாறுகொண்ட பைங்கதலி
தே மாப் பலாத் தருத்தே
ரூறுகொண்ட செங்கனி
சிறு கிடங்கிடை யகுப்பச்
சேறுகொண்டதிற் கிடந்திருள்
செறி கருமேதி
வேறுகொண்டு பொன்
மேதியின் குலமென
விளங்கும்

இனி நாட்டின் பொதுச் சிறப்புபற்றிப் புலவர் கூறுகிறார். பொருளைக் கருதி நிற்றல் ஒன்றே அந்நாட்டில் மக்கள் செய்யும் நிந்தனை, இதுவன்றி துர் நினைவு கொண்ட வேறு எவ்வித நிந்தனையும் அவர்கள் சிந்தனையில் இல்லை. 'பொருள்' என்பது பரம்பொருளை முதலாவதாகவும் செல்வச் சிறப்புடைய நாடாதலின் ஜீவனோபாயப் பொருள் என்பதை முதலாவதாகவும் கருதி நிற்கின்றது. மேலும் அங்குள்ள கரிய நிற வண்டுகள் மலர்களில் தேங்கி நிற்கும் மதுத் திவலைகளை அருந்துதலேயன்றி வேறு கட்குடித்தலே அங்கில்லை. இதிலிருந்து நபிகணாதரின் பொன் வாக்குகளை அங்குள்ள மக்கள் எவ்வளவு தூரம் பின்பற்றி ஒழுகுகின்றனர் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். கோபத்தைக்கொண்ட யானைகளின் கொம்பைப் போன்ற தனங்களையுடைய இளம் பெண்கள் தம் கணவன்மார்களை புலவியிற் திருத்தும் பொருட்டு புகழ்ந்துரைக்கும் உணர்ச்சியுரைகளேயன்றி அங்கு வேறு பொய் பேசுபவர்களே கிடையாது. இத்தகைய தேவர் நாட்டில் கொலை செய்பவர்கள்கூட இருப்பார்களா? இல்லவே இல்லை. அழகிய பழக் குலைகளை உரியவர்கள் சரி, ஊரவர்கள் சரி தங்களுக்குத் தேவையாயின் எடுத்துச் செல்வர்; இதுதான் அங்கு நடைபெறும் கொலையும்! களவும்!!

நினைக்கும் பொற்பொருளே
நிந்தனை மற்றேர்
நிந்தனை சிந்தனையிலையே
யினக் கருஞ் சுரும்பு
மதுத்துளி யருந்து
மிவையலான் மதுப்பிறி
திலையே
சினக்கரி முலைக்கோட்டிளம்
முலைப்புலவி
திருத்தும் பொய்யலது
பொய்யிலையே
வனக்கனி கருத்த
குலைக்களவலது
மறுத்தொரு கொலைக்
களவிலையே:

உலகப் படத்திலே ஒரு அணு—ஆனல் தனி ஆட்சி அமைத்து அரசாளும் தேசம்

560 சதுர கிலோமீட்டர்கொண்ட ஆண்டோரா தன்னிகரில்லாது வாழும் புதுமை

ஏழு பொலீஸ்காரர் அந்த எழில்நாட்டின் அமைதியை காக்கும் விந்தை

ஆண்டொரா—ஒரு அழகுத் திருநகரம். அது இன்று ஐரோப்பாவின் சின்னஞ்சிறு நாடாகக் காட்சி அளிக்கிறது.

800 பேர்தான் தலைநகரத்திலே வசிக்கிறார்கள். மொத்த ஜனத்தொகை 5,500 தான்! இருந்தபோதும் அவர்களுக்கென ஒரு பாராளுமன்றம் இருக்கிறது—காற்றிலே பறந்து சுதந்திர கானம் எழுப்பும் கொடி ஒன்றும் இருக்கிறது!

அங்கே வறுமை கிடையாது. அடிமைகள் இல்லை. அந்த நாட்டின் பரப்பு 560 சதுர கிலோ மீட்டர்தானே என்று எந்த ஏகாதிபத்யமும் அதன்மீது பாத்யதை கொண்டாடவில்லை.

பனிக்காலம் முடிவுக்கு வந்ததும் ஆண்டொரா நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் கூடுகிறார்கள். தங்கள் நாட்டைச் சார்ந்திருக்கும் முக்கிய பிரச்னைகளை விவாதித்து விட்டு கலைந்து விடுகிறார்கள்!

பக்கத்திலே இமயமலை போன்ற பிரான்சு இருந்தும்—ஒரே நொடியில் இந்தக் கொழுந்து பூமியை கசக்கி எறியும் வல்லமை படைத்த ஸ்பெயின் இருந்தும்—ஆண்டொரா சுதந்திரமாக வாழ்கிறது. நீலம், மஞ்சள், சிகப்பு ஆகிய வர்ணம் கொண்ட அதன் இலட்சியக் கொடி சுந்தரமாகத்தான் பறக்கிறது!

இன்னும் சொல்லப்போனல் உலகப் படத்திலே அணுவினும் சிறியதாய் காட்சிதரும் ஆண்டொராவிலே செய்தித் தாள்கள் கிடையாது. தனக்கென்று சொந்தமான நாணயச் செலாவணியை ஏற்படுத்திக் கொள்ளும் அவசியமே இதுகாறும் ஏழவில்லை. பிரெஞ்சு நாணயமும், ஸ்பானிய நாணயமும் தான் அங்கே நடமாடுகின்றன.

தபால் நிலையங்கள்கூட மூன்று இருக்கின்றன. ஒரு தபால் நிர்வாகத்தை பிரான்சும், மற்றென்றை ஸ்பெயினும், மூன்றுவதை ஆண்டொராவும் நடத்தி வருகின்றன.

அங்கே பொலீஸ் படை எப்படி அமைந்திருக்கிறது தெரியுமா? அரசாங்கத்துப் பணத்தை விரயமாக்க கடல் போன்று ஜவான்கள் தொகையில்லை.

ஏழே பொலீஸ்காரர்கள் தான் அந்த எழில்மிக்க நாட்டின் அமைதியையும், ஒழுங்கையும் கண்போலக் காத்து வருகிறார்கள்.

தபால் தலைகளை விற்பதற்கு தனியாக போஸ்ட் ஆபீஸ்கள் கிடையாது. அந்தந்தப் பகுதியின் புகையிலைக் கடைகள்தான் தபால் தலைகளை விற்பனை செய்கின்றன.

பனிக்காலங்களில் ஆண்டொராவிலே யாரும் நடமாட முடியாது. எனவே அந்த நாட்டு மக்கள் கோடைக்காலத்திலே சம்பாதித்த பொருளை, குளிர் காலத்திலே செலவு செய்து கொள்கிறார்கள்.

அங்கே பசியில்லை. பட்டினி பட்டாளங்கள் கிடையாது. ஆண்டொராவிலே அளிக்கப்படும்கல்வி ஐரோப்பாவிலேயே சிறந்த கல்வியாகும். ஒவ்வொரு குக்கிராமத்திலும் பிரெஞ்சு மொழி சொல்லித்தர ஒரு பள்ளியும், ஸ்பானியமொழி கற்றுக்கொடுக்க ஒரு பள்ளியும் [illegible]

இன்னெரு முக்கியமான செய்தி! அந்த நாட்டிலே ''இரத்தமில்லாத புரட்சி'' யொன்றும் நடைபெற்றிருக்கிறது. ஓட்டுரிமைக்காக, சுதந்திரமாக வாழும் அந்த சிற்றூர் வாசிகள் 1933ம் ஆண்டில் புரட்சி நடத்தி வெற்றியும் அடைந்து விட்டார்கள்!

இலட்சக்கணக்கான மைல்கள் சுற்றளவு கொண்ட நாடுகள் வாழும் உலகத்திலேதான் 560 கிலோ மீட்டார் கொண்ட ஆண்டொராவும் தனித்து வாழ்கிறது!

அணுகுண்டும் ஹைட்ரஜன் குண்டும் நீதிவழங்க முற்பட்டிருக்கும் இந்த நேரத்திலேதான் ஏழே பொலீஸ்காரர்களைக் கொண்ட நாடு உயிர் வாழ்கிறது!

ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்டதாம் அதன் வரலாறு!—இப்படிப் பேசி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள் ஆண்டொரா வாழும் மக்கள்!

ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட நாடு சுதந்திரமாக வாழ்கிறது—மணிக்கொடி ஏற்றி ''பாரீர் எமது பழுதிலா வாழ்வை!'' என்று பாரெல்லாம் பறைசாற்றுகிறது.

நாமோ கல்தோன்றி மண்தோன்று காலத்தே வாளொடு பிறந்தவர்கள்; பெருவாழ்வு வாழ்ந்தவர்கள்! இமயமலை தோன்றிய (கி. மு. 20,000,000) காலம் முதற்கொண்டே வரலாறு பெற்றிருந்தோம் என்று பெருமை பேசிக் கொள்கிறோம். ஆனல் இன்று இந்த வரலாற்றிலே அடிமைஎனும் கறை படியவைத்து வாழ்கிறோம்?

—முரசொலி

சுடச்சுட

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டேனே! நான் 'புடவை வேணும்' னு கேட்டேன். நீங்களுடனே வாங்கிகொடுத்திட்டேள்.

—ஆ. விகடன் 6-2-55

கணவன்— அப்போ, அதையே கட்டிக் கொள்ளேன்.

ஃ ஃ ஃ

மனைவி— ஏன் இப்படி சும்மா உட்கார்ந்திருக்கிறீர்கள்? அந்தப்பரமசிவம்பாக்கிதர வேண்டுமே. அவன் கழுத்தை அறுத்தாவது பாக்கியை வாங்கிக் கொண்டு வாருங்கள்.

புருஷன்— அவன் கழுத்தை அறுத்தாலும் கழுத்துத் தானே வரும் பாக்கிவராதே

—குமுதம் 10-3-55

மனைவி— இப்படி சும்மா உட்கார்ந்திருக்கிறதற்கு, அதையாவது செய்துதான் தொலையுங்கள். —'நிறில்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUDANTIRAN

1955 ஏப்ரல் மாதம் 3ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411

தமிழரும் ஒற்றுமையும்

"இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் இனம் ஒற்றுமையின்றி வெவ்வேறு பிரிவாக சின்னபின்னப்பட்டுக் கிடப்பதுதான் இன்று அது நசுக்கப்பட்டு வருவதற்கு மூலகாரணம். தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒன்றுசேர்ந்து நின்றால் ஆதிக்கம் புரிபவர்கள் நம்மை அசைக்கவும் முடியாது" இப்படி சிலர் அரசியல் போதனை செய்கிறார்கள். தமிழ் இனம் வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தின் தூண்டுதலால் அவர்கள் செய்யும் இந்த நல்லுபதேசத்தை நாம் வரவேற்கிறோம். ஆனால் இந்த உபதேசத்தை எப்படி நடைமுறையில் அனுஷ்டிப்பது என்பதுபற்றி போதனை செய்பவர்களிடம் தெளிவான திட்டம் கிடையாது. யார் யாரோடு ஒற்றுமைப்படுவது? என்ன அடிப்படையில், எந்த இலக்கை முன்னிறுத்தி ஒற்றுமைப் படுவது? இவைபற்றி அவர்கள் எதுவும் சொல்வதற்கில்லை. இந்த நிலையில் இப்பிரச்னையை விரிவாக ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டியது தமிழ்ப்பேசும் மக்களுடைய கடமையாகும். தமிழர் தம் அரசியல் கட்சிகளின் கடமையாகும்.

தமிழ்ப் பேசும் மக்களிடையே சாதி, சமய, சாத்திர, கோத்திரப் பிரிவினைகள் அநேகம் உள்ளன. ஆனால் எடுத்துக்கொண்ட நமது ஆய்வுக்கு வேண்டியது தமிழ் மக்களுடைய அரசியல் பிரிவினைதான். இந்த ஆராய்ச்சிக்கு மலை நாட்டுத் தமிழ்ப்பேசும் மக்களைச் சற்று தள்ளிவைத்து விட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களிடையே நான்கு முக்கிய அரசியல் பிரிவினைகள் காணப்படுகின்றன. பாராளுமன்றத்தில் இவர்களுடைய பிரதிநிதிகள் எப்படிப் பிரிந்து நிற்கிறார்கள் என்பதைக் கொண்டே இப்பிரிவினைகளைக் கணக்கிட வேண்டியிருக்கிறது. 1. தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர்கள். 2. தமிழ்க் காங்கிரஸின் ஆதரவாளர்கள். 3. அரசாங்கத்தோடு ஒத்துழைக்கும் பிரதிநிதிகளின் ஆதரவாளர்கள். 4. சுயேச்சையான உதிரிப் பிரதிநிதிகளின் ஆதரவாளர்கள்.

இந்த நான்கு பிரிவினர்களும் ஒற்றுமைப் படுவது நல்லதுதான். ஆனால் என்ன அடிப்படையில், என்ன நோக்கத்தை, என்ன இலக்கைக் கொண்டு ஒற்றுமைப் படுவது என்பது தெளிவுபெற வேண்டும்.

சுயேச்சையாக நிற்கும் உதிரிகளிடம் எந்த கொள்கையும் கிடையாது; தமிழ் இனத்தின் நல்வாழ்வுக்கான எந்த திட்டமும் கிடையாது. எனவே எஞ்சிய மூன்று பிரிவினரும் உதிரிகளுடன் ஒற்றுமைப் படுவதில் எவ்வித நன்மையும் இல்லை.

அடுத்தபடியாக அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களிடம் இருப்பது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் திட்டம்தான். அரசாங்கத்தின் திட்டம் தமிழ்ப்பேசும் மக்களை நசுக்கும் திட்டமாகவே இருக்கிறது. எனவே இவர்களோடு ஒன்றுசேர்வது எனபது தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக அல்ல, தமிழ் மக்களை நசுக்குவதற்காகவே ஒன்று சேர்வதாக முடியும்.

தமிழ்க் காங்கிரஸை எடுத்துக் கொண்டால் அதற்கு திட்டமும் கிடையாது, கொள்கையும் கிடையாது என்பது அதன் தலைவர் அடிக்கடி போட்டுவந்த குத்துக்கரணங்களிலிருந்து நிதர்சனமாக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் அவர் வெளியிட்ட "ஐக்கிய முன்னணி" என்ற கோஷம் இலக்கோ, இலட்சியமோ அற்ற வெறும் கூச்சல் என்பது சற்று ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு புலனாகியிருக்கும். ஐக்கிய முன்னணி அமைக்கவேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஆடம்பரமாக மேடைகளில் சொன்னாரே தவிர எதற்காக ஐக்கிய முன்னணி, அது சாதிக்கப் போவது என்ன, அந்த சாதனைகளுக்கான திட்டங்கள் யாவை என்பனபற்றி அவர் வாய்திறக்கவேயில்லை. ஐக்கிய முன்னணி என்பது சம்பந்தப்பட்டவர் திரும்பவும் தமக்கு தலைமைப் பதவியைத் தேடிக்கொள்வதற்காக கிளப்பப்பட்ட வரட்டுக் கூச்சல்தான் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டதால் இந்த கோஷம் இயற்கையாகவே இறந்துபட்டது.

தமிழ் அரசுக்கட்சி ஒன்றுதான் தமிழர்களுக்கிடையேயுள்ள அரசியல் கட்சிகளுள், உருப்படியான திட்டங்களையும், ஸ்திரமான கொள்கைகளையும் உடையதாய் விளங்குகிறது. எனவே தமிழ்ப்பேசும் மக்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், அந்த ஒற்றுமையினால் தமிழ்ப் பேசும் இனம் காப்பாற்றப்பட வேண்டுமானால், ஏனைய மூன்று பிரிவினர்களும் தமிழ் அரசுக் கட்சியுடன் ஒன்றுபடுவதுதான் ஏற்றது, பொருத்தமானது, இயற்கையானது என்று நாம் துணிந்து கூறுவோம்.

ஆனால் தமிழ் அரசுக் கட்சியினர் குத்துக்கரண வீரர்களையும் சந்தர்ப்ப வேஷதாரிகளையும் தங்கள் கட்சிக்குள் சேர்த்துக் கொள்வது என்பது தீர்க்கமாக சிந்தித்து முடிவு கட்டவேண்டிய நுணுக்கமான பிரச்னையாகும். அந்தரங்க சுத்தி இல்லாதவர்களும், கொள்கையும், இலட்சியமும், கட்டுப்பாடும் அற்றவர்களுமான பலர் ஒரு கட்சியில் இருப்பதைவிட, ஸ்திரமான கொள்கையும், ஒரே நோக்கமும் கொண்ட சிலர் இருப்பினும் அக்கட்சி பலம்வாய்ந்ததாக விளங்கும். ஏப்ரல் 15, 16, 17ந் திகதிகளில் திருகோணமலையில் கூடும் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மகாநாடு இப்பிரச்னையைச் சாங்கோபாங்கமாக விவாதித்து ஒரு முடிவுக்கு வருதல் நன்று.

ஜனநாயக காங்கிரஸ் தலைவர் போட்டி
மட்டக்களப்பிற்கு ஒரு துறைமுகம்
யானை இறவுக்கு இப்பால் தமிழர் குடியேற தமிழ் அரசுக் கட்சி ஊக்கமளிக்குமா?

(சுதந்திரன் அரசியல் விமர்சகர்)

இலங்கை ஜனநாயக காங்கிரஸின் தலைவர் பதவிக்கு திரு. எஸ். தொண்டமான் கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து இவரே இப்பதவிக்கு போட்டியேற்படவில்லை. ஆரம்பத்தில் ஒன்றுக்குமேற்பட்ட பெயர்கள் பிரரேபிக்கப்படாலும்கூட கடைசிநேரத்தில் யாராவது ஒருவரை ஏகமனதாகத் தேர்ந்தெடுப்பதற்கு சாதகமாக போட்டியிடும் ஏனைய தலைவர்கள் தங்கள் பெயர்களை வாபஸ் பெற்றுவிடுவது வழக்கம். இம்முறை அப்படி நடைபெறவில்லை. அபேட்சகர்களான ஜனப் ஏ. அஸீஸ் திரு. எஸ். சோமசுந்தரம் ஆகிய இருவரும் இறுதிவரை போட்டியிடுவார்கள் என்று சொல்லப்படுகிறது.

இலங்கை ஜனநாயக காங்கிரஸின் தற்போதையத் தலைவர் திரு. எஸ். தொண்டமான். கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து இவரே

திரு. எஸ். சோமசுந்தரம்

தலைவராகஇருந்துவருகிறார். இம்முறையும் இவர் தலைவராக வரவிரும்பியிருந்தால் எதுவித எதிர்ப்புமின்றி சுலபமாகவந்திருக்கலாம். ஆனால் அப்படி வர அவர் விரும்பவில்லையென்றும் புதியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடமளிக்கவேண்டும் என்று அவர் கருதியதால் போட்டியிட மறுத்து விட்டார் என்றும் தெரிகிறது. தமிழ் அரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைப் போலவே திரு. தொண்டமானும் தலைவர் பதவியென்பது ஒருவருக்கே நிரந்தர உரிமையாக்கப்படலாகாது என்ற கருத்துடையவராக விளங்குவது பாராட்டற்குரியது. காங்கிரஸுக்குள்ளே மிகவும் செல்வாக்குப்பெற்ற தலைவர் திரு. தொண்டமான். கஷ்டமான கடந்த சில ஆண்டுகளில் அவர் ஆற்றிய சேவை அளப்பரிது. தாமாகவே அவர் தலைமைப் பதவியைவிட்டு விலகத் தீர்மானிக்கவில்லையென்றால், தலைமைப் பதவி ஒருபோதும் அவரைவிட்டு வெளியே போகமார்க்கமில்லை. இவ்வளவு செல்வாக்கோடிருந்தும் அவர் காட்டும் முன்மாதிரியானது தலைமைப்பதவிக்காகவே கட்சிகட்டிக் கொண்டமும் வேறு சில தமிழ்த் தலைவர்களுக்கு கண்ணைத் திறக்கவேண்டும்.

இம்முறை நடைபெறவிருக்கும் தலைவர் போட்டியை ஆதாரமாக வைத்துக் கொண்டு சிலர் காங்கிரஸுக்குள் கட்சிபேதமும், தலைவர் பதவிக்கு போட்டி ஏற்படுவது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு ஏற்றதா என்று சிலர் கேட்கக்கூடும். இலங்கை ஜனநாயக காங்கிரஸின் அமைப்போடு கூடிய ஒரு ஸ்தாபனத்திற்கு யார் தலைவராக வந்தாலும் வித்தியாசம் அதிகம் இல்லை. அப்படி வருபவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டாலும் சரி, போட்டியிட்டு வந்தாலும் சரி, இரண்டும் ஒன்றுதான். ஏனென்றால் போட்டியிடும் தலைவர்கள் தங்களுக்கென்று தனித்தனியான கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் சமர்ப்பித்து அவற்றின்மீது தேர்தலுக்கு நிற்பதில்லை. காங்கிரஸின் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் முன்னிறுத்தித்தான் போட்டியிடுபவர் யாராயிருந்தாலும் தேர்தலுக்கு நிற்க வேண்டியிருக்கிறது. இந்த அடிப்படையில், யாருடைய திட்டம், யாருடைய கொள்கை வெல்கிறது என்பதல்ல தேர்தல் தரும் முடிவு. அதிகப்படியான காங்கிரஸ் பிரதிநிதிகள் யார் தலைமையை விரும்புகிறார்கள் என்பதுதான் தேர்தலில் தீர்மானிக்கப்படுகிறது.

இம்முறை போட்டியிடும் இரண்டு அபேட்சகர்களையும் பற்றி சாதகபாதகமான அபிப்பிராயங்கள் காங்கிரஸ் வட்டாரத்தில் அடிபடுகின்றன. திரு சோமசுந்தரம் இளைஞர்; ஆனபடியால் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் அவர் மிகவும் இளைஞர், அனுபவம் போதாது, இப்போது ஏற்பட்டுவரும் கஷ்டமான கட்டத்தில் ஜனப் அஸீஸ் போன்ற ஒரு அனுபவசாலியும் திறமை சாலியுமே தலைமைப் பதவியைத் தாங்கவேண்டும் என்கின்றனர். திரு சோமசுந்தரத்தின் நிர்வாகத் திறமையையும், தொழிற் சங்க அலுவல்களில் அவருக்குள்ள அறிவையும் சிலர் சிலாகித்துப் பேசுகின்றனர். ஆனால் அவருக்கு பொதுக் கூட்டங்களில் பேசும் நாவன்மை போதவில்லையே என்று கவலைப்படுகின்றனர். ஜனப் அஸீஸ் நல்ல பொதுஜன ரஞ்சகமான பேச்சாளர்தான். சட்டசபை வாதிதான் ஆயினும் அவரை அரசாங்கம் ஒரு கொம்யூனிஸ்ட் அனுதாபியாக மதித்திருப்பதால அவருடைய தலைமையின் கீழ் காங்கிரஸிற்கு அரசாங்கம் வெறுப்புக் காட்டுமே ஒழிய அனுதாபம் காட்டாது என்பது அதன் தலைவர் அடிக்கடி போட்டுவந்த குத்துக்கரணங்களிலிருந்து நிதர்சனமாக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் அவர் வெளியிட்ட "ஐக்கிய முன்னணி" என்ற கோஷம் இலக்கோ, இலட்சியமோ அற்ற வெறும் கூச்சல் என்பது சற்று ஆழ்ந்து சிந்திப்பவர்களுக்கு புலனாகியிருக்கும். ஐக்கிய முன்னணி அமைக்கவேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஆடம்பரமாக மேடைகளில் சொன்னாரே தவிர எதற்காக ஐக்கிய முன்னணி, அது சாதிக்கப் போவது என்ன, அந்த சாதனைகளுக்கான திட்டங்கள் யாவை என்பனபற்றி அவர் வாய்திறக்கவேயில்லை. ஐக்கிய முன்னணி என்பது சம்பந்தப்பட்டவர் திரும்பவும் தமக்கு தலைமைப் பதவியைத் தேடிக்கொள்வதற்காக கிளப்பப்பட்ட வரட்டுக் கூச்சல்தான் என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டதால் இந்த கோஷம் இயற்கையாகவே இறந்துபட்டது.

தமிழ் அரசுக்கட்சி ஒன்றுதான் தமிழர்களுக்கிடையேயுள்ள அரசியல் கட்சிகளுள், உருப்படியான திட்டங்களையும், ஸ்திரமான கொள்கைகளையும் உடையதாய் விளங்குகிறது. எனவே தமிழ்ப்பேசும் மக்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டுமானால், அந்த ஒற்றுமையினால் தமிழ்ப் பேசும் இனம் காப்பாற்றப்பட வேண்டுமானால், ஏனைய மூன்று பிரிவினர்களும் தமிழ் அரசுக் கட்சியுடன் ஒன்றுபடுவதுதான் ஏற்றது, பொருத்தமானது, இயற்கையானது என்று நாம் துணிந்து கூறுவோம்.

ஆனால் தமிழ் அரசுக் கட்சியினர் குத்துக்கரண வீரர்களையும் சந்தர்ப்ப வேஷதாரிகளையும் தங்கள் கட்சிக்குள் சேர்த்துக் கொள்வது என்பது தீர்க்கமாக சிந்தித்து முடிவு கட்டவேண்டிய நுணுக்கமான பிரச்னையாகும். அந்தரங்க சுத்தி இல்லாதவர்களும், கொள்கையும், இலட்சியமும், கட்டுப்பாடும் அற்றவர்களுமான பலர் ஒரு கட்சியில் இருப்பதைவிட, ஸ்திரமான கொள்கையும், ஒரே நோக்கமும் கொண்ட சிலர் இருப்பினும் அக்கட்சி பலம்வாய்ந்ததாக விளங்கும். ஏப்ரல் 15, 16, 17ந் திகதிகளில் திருகோணமலையில் கூடும் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மகாநாடு இப்பிரச்னையைச் சாங்கோபாங்கமாக விவாதித்து ஒரு முடிவுக்கு வருதல் நன்று.

இந்த நிலையில் காங்கிரஸ் பிரதிநிதிகளின் கையாற்கம் ஓங்குகிறதோ அவர்தான் தலைவர் என்ற முடிவையே நாமும் செய்யவேண்டியிருக்கிறது.

♦

வடபகுதியில் ஒரு துறைமுகத்தை பிரயாணிகள் போக்குவரவு செய்வதற்கேற்றதான துறைமுகமாகத் திறக்கவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி கடந்த வாரம் எழுதியிருந்தோம். அதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ள விழிப்பு நமக்கு உற்சாகமளிப்பதாய் இருக்கிறது. மட்டக்களப்பு நகரசபையில் திரு எஸ். கணபதிப்பிள்ளை எனும் அங்கத்தவர் ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசியிருக்கிறார். "மட்டக்களப்புத் துறைமுகத்தை ஒரு வியாபாரத் துறைமுகமாகத் திறக்க



ஜனப் ஏ. அஸீஸ்

வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு இச்சபை போக்குவரத்து மந்திரியைக் கேட்டுக்கொள்ளுகிறது" என்பதுதான் அவர் சமர்ப்பித்த தீர்மானமாகும். இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது. இத்தீர்மானத்தை யொட்டி அவர் பேசுகையில் "மட்டக்களப்பிற்கு கப்பல் போக்குவரத்து இருந்த காலத்தில் நாகபட்டினம், தூத்துக்குடி, பப்பாய் முதலிய இடங்களிலிருந்து கப்பல்கள் பண்டங்களை ஏற்றிக்கொண்டு வந்தன. இதனால் சனங்களுக்கு பொருட்கள் மலிவாகக் கிடைத்ததுடன் பலருக்கு வேலையும் கிடைத்தது," என்று குறிப்பிட்டார்.

மட்டக்களப்புத் துறைமுகத்தை ஒரு வர்த்தகத் துறைமுகமாகத் திறக்கவேண்டும் என்ற ஆலோசனையை நாம் பலமாக ஆதரிக்கிறோம். காங்கேசன் துறை பிரயாணிகள் துறைமுகமாகவும், திருகோணமலை கடற்படைத் துறைமுகமாகவும், மட்டக்களப்பு வர்த்தகத் துறைமுகமாகவும் விளங்கினால் தமிழ் இலங்கை எத்தகைய தொழில் பெருக்கத்தோடும், பொருட் செழிப்போடும் விளங்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போதே நமக்கு பூரிப்பு ஏற்படுகிறது. தமிழ் மக்களுடைய கையில் ஆட்சியதிகாரங்கள் மாறும்போது இந்த எண்ணம் நிறைவேறுமல் போகுமா?

♦

"யாழ்ப்பாணத்துக் கமக்காரன் கமத்தொழிலில் எவ்வளவு திறமையுடையவனாக இருந்தாலும், போதிய நெற்காணிகளை அவன் சம்பாதித்துக் கொள்ளாத

[9-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூன்றுவது தேசிய மகாநாடு

திருகோணமலையில் நடைபெறத் திட்டங்கள் உருவாகின்றன

சைக்கிள் பவனி, ஊர்வலம், நாடகம் பொதுக் கூட்டம் ஆகியவற்றிற்கு ஏற்பாடு

(திருகோணமலை சுதந்திரன் நிருபர்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூன்றுவது தேசிய மகாநாடு ஏப்ரல் 15, 16, 17ல் திருகோணமலையில் நடைபெற விருக்கிறது. மகாநாட்டை மிகவும் விமரிசையாக நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருவதாக நமது திருகோணமலை நிருபர் தெரிவிக்கின்றார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூன்றுவது தேசிய மகாநாடு இம்முறை திருகோணமலையில் நடைபெறத் திட்டமிடப் பட்டிருக்கிறது. முதலாவதுமகாநாடு 1951ம் ஆண்டு திருகோணமலையில் தான் நடைபெற்றது. இரண்டாவது மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

ஏப்ரல் 15, 16, 17ந் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டுக்கான பூர்வாங்க வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஏப்ரல் 16ந் திகதி நடைபெறவிருக்கும் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளை திருகோணமலையிலிருந்து 21 மைல்களுக்கப்பால் உள்ள குச்ச வெளி என்னும் இடத்தில் வெகு விமரிசையாக நடத்தத்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது வெளியூர்களிலிருந்து வரும் சுமார் 100 பிரதிநிதிகளும் மற்றும் உள்ளூர் ஆதரவாளர்களும் உல்லாச விடுதலை ஸ்தலம் என்று வர்ணிக்கப்படும் குச்ச வெளியின் அமைதியையும் கடல்சுவாத்தியத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு இந்த மகாநாட்டின்போது கிடைக்கவிருக்கிறது.

சைக்கிள் ஊர்வலம்

ஏப்ரல் 16ந் திகதி அதிகாலையில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் திருகோணமலையிலிருந்து தமிழரசுக் கொடிகள், விருதுகள், சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகள் தாங்கிய சைக்கிள்களில் குச்சவெளியை நோக்கி உற்சாக கோஷங்களுடன் பவனி செல்வர். இந்தப் பவனியில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர்கள் மகாநாட்டுச் செயலாளரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு வேண்டிய கொடி, சுலோக அட்டை, விருது (Badge) முதலியவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரப்படுகிறார்கள்.

பவனிசெல்லும்இந்த இளைஞர் படைக்கு வழிவழியே தாகசாந்தி உபசரணைகள் செய்ய விரும்பும் செல்வர்களும் ஆதரவாளர்களும் தங்கள் கருத்தை முன் கூட்டியே மகாநாட்டுச் செயலாளரிடம் தெரியப்படுத்தும்படி அன்பாக வேண்டப்படுகிறார்கள்.

சைக்கிள்பவனியில் கலந்து கொள்ள முடியாத முதியவர்கள் குச்ச வெளிக்குச் செல்ல விசேஷ பஸ் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படுகிறது.

16-ந் திகதி சனிக்கிழமை குச்சவெளியில் நடைபெறும் மகாநாட்டு நிகழ்ச்சிகளின் பின் அங்கு ஒரு அருமையான நாடகமும் நடைபெறும்.

மகாநாட்டின் மூன்றுவது தினமான 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கட்சிப் பிரமுகர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய ஊர்வலம் ஒன்று நகரின் பிரதான வீதிகள் மூலம் பெரிய மைதானத்தை அடையும். அங்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். இந்தப் பொதுக் கூட்டத்திலே தமிழ் பேசும் மக்களின் இன்றைய நிலை, அவர்கள் எதிர் காலத்தில் செய்யவேண்டியதுயாதுள்ளன பனபற்றியெல்லாம் வன்மை மிக்க பேச்சாளர்கள் எடுத்துரைப்பார்கள்.

பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம்

மகாநாடு பற்றிய சகல விஷயங்களையும் தீர்மானிப்பதற்காகவும் திட்டமிடுவதற்காகவும் ஒரு பூர்வாங்க ஆலோசனைக் கூட்டம் ஏப்ரல் 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு திருகோணமலை, மகுதி வீதியிலுள்ள, அர்ச் அந்தோனியார் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அட்வகேட் திரு அ. அமிர்தலிங்கம் இக்கூட்டத்தில் பேசுவார்.

செலாவணி இலாகாவில் மோசடி!

கள்ள பர்மிட் வழங்கியதாக ஒருவர் வேலையிலிருந்து நீக்கம்

துப்பறியும் இலாகா புலன் விசாரித்து வருகிறது

(நமது நிருபர்)

செலாவணி இலாகாவில் வேலைபார்க்கும் மேலுத்தியோகஸ்த்தர் ஒருவர் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணமனுப்பும் கள்ளப் பர்மிட்டுகளைத் தயாரித்து இந்திய வியாபாரிகளுக்கு கொடுத்துள்ளார் என்ற ஒரு குற்றச்சாட்டை துப்பறியும் இலாகா துப்புத்துலக்கிவருகிறது.

அனுமதேயப் பேர்வழி ஒருவரின் கடிதத்தின் பேரிலேயே செலாவணி இலாகாவின் விசாரணை இலாகா இதனைக் கண்டுபிடித்தது என்று தெரிகிறது.

மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர் தான் கொடுத்த பர்மிட்டுகளுக்காக ஒரு சுமாரான தொகையைச் ''சந்தோஷம்'' பெற்றிருக்கிறார் என்றும் சொல்லப்படுகிறது.

பொலீஸ் துப்பறியும் இலாகா தனது புலன்விசாரணையை பூர்த்திசெய்யும் வரை இந்த குறிப்பிட்ட உத்தியோகஸ்தரை செலாவணி இலாகா தற்காலிகமான வேலையிலிருந்து நீக்கி வைத்துள்ளது.

ஆங்கிலத்திற்கும் சுய மொழிக்குமிடையே அரசாங்கம் காட்டும் தாரதம்மியம்

தேசிய மொழிக் கொள்கையை அர்த்தமற்றதாக்குகிறது

பரிசளிப்பு விழாவில் விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர் பேச்சு

'இந்நாட்டிலே ஆங்கிலம் கற்கும் ஆறு வீத மக்களின் பொருட்டு அரசாங்கம் அளித்து வரும் சலுகைகள் தாய்மொழி வளர்ச்சிக்காக அளிக்கப்படுவதில்லை. இந்தப் பேதம் உடனடியாகநீக்கப்படாவிட்டால் அரசாங்கம் தேசிய பாஷைகளைப்பற்றிப் பேசுவதில் அர்த்தமே இல்லை'' என்னும் பொருள்பட கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கொழும்பு விவேகானந்த வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில் பாடசாலைத் தலைமை ஆசிரியரும், மேல்மாகாண தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவருமான திரு கே. வி. செல்வத்துரை கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:

''தமது நாட்டின் நல உரிமைகளை ஆண்டனுபவிக்கும் சலாக்கியம் ஒவ்வொரு சுதந்திரநாட்டுப் பிரசைக்கும்பிறப்புரிமையானதுஅதற்குஇன்றியமையாததாய தேசிய மொழிகளை அந்நாட்டு மக்கள் பேணிப் பாதுகாக்க வேண்டியது அவர்களின் முதற்கடமையாகும். ஆகவே நாட்டின் தாய் மொழிக் கல்வியைச் சீருற அமைத்து நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டிய மகத்தான பொறுப்பு தாய் மொழிப்பாடசாலைகளிலும், தாய்மொழி ஆசிரியர்களிலுமே தங்கியுள்ளது. நாளைய அறிவுடைச் சமுதாயத்தை ஆக்கி அளிக்கவிருக்கும் பாடசாலைகளுக்கு இன்றியமையாத வசதிகளை அளித்தலிலும், அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் பொருளாதார வளத்தை உயர்த்துதலிலும் சுதந்திர அரசாங்கம் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும்.

''ஆங்கில பாடசாலைகளுக்கும், தாய்மொழிப் பாடசாலைகளுக்கும் ஆசிரியர்கள் நியமிப்பதிலுள்ள மாணவர் வரவுச் சராசரியிலுள்ள பாரதூரமான வித்தியாசம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். இந்நாட்டின் ஒருசில மாணவர்களுக்கு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் மூலம் ஆங்கிலக் கல்வியைப் போதிக்க வசதி அளித்தும், தாய்மொழிப் பாடசாலைகளில் கல்விகற்கும் தொண்ணூற்று நான்குவீத மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் எஸ். எஸ். ஸி. சித்தி அடைந்த ஆசிரியர்களே எஸ். எஸ். ஸிவரை கல்வி புகட்ட வேண்டுமென்னும் கொள்கை உடனே அகற்றப்பட்டு தாய் மொழிப் பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க ஆவன செய்ய வேண்டும்.

''இன்று எட்டாம் வகுப்பு வரை சுயபாஷையிற் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென ஒப்புக்கொண்டுள்ள அரசாங்கம் அவ்வகுப்புகளில் கல்வி போதிப்பதற்கென அமைந்த ஆசிரியர்களின் பயிற்சிக் கலாசாலையான மஹாறகம ஆங்கில பயிற்சிக் கல்லூரியின் பாடத்திட்டத்திலெவ்வித மாற்றமும் செய்யாமலிருப்பது வருங்காலக் குழந்தைகளின் கல்விக்குக் குந்தகம் விளைப்பதாகும். நாட்டிற்கின்றியமையாத கல்விக் கொள்கையில் இத்தனை சீர்கேட்டிற்கும் காரணமாயிருப்பது குடியேற்ற நாட்டிற்கே உரிமையாய் வகுக்கப்பட்டு அந்நியர் ஆட்சியை நிலைப்படுத்துவதற்குரித்தாயமைந்த பாடசாலை ஒழுங்குச் சட்டங்களேயாகும். இவற்றை உடனடியாக மாற்றியமைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.

இப்பரிசளிப்பு விழாவைபவத்திற்கு திரு கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமைதாங்கினர். திரு கே. கனகரத்தினம் முதலியோர் சொற்பெருக்காற்றினர். திருமதி ஆழ்வாப்பிள்ளை பரிசில்களை வழங்கினர்.

விருந்து

காலையில் பாடசாலை முகாமைக்காரர் திரு வி. பி. என். சிங்கம் பாடசாலை ஆசிரியர்களுக்கும், பரிசோதகர்களுக்கும், மற்றும் சில பிரமுகர்களுக்கும் மதிய போசன விருந்தொன்றளித்து உபசரித்தார்.

பிரதமரின் விருந்துபசரணைகளுக்கு ரூ. 30,000

இது போதாது என்று மேலும் ரூபா 10,000

வெளிநாட்டுத் தொடர்பு அதிகரித்து விட்டதாம்

(நமது நிருபர்)

அரசாங்கத்தின் உபசரணை விருந்துகளின் அளவில் திடீர் பெருக்கேற்பட்டிருக்கிறது. நடக்கும் நிதிவருடத்தில் அரசாங்கத்தால் பிரதம மந்திரியின் விருந்துபசாரங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ 30,000 போதாமல் போயிருக்கிறது.

ஆரம்பத்தில் பிரதமருக்காக அவரது அரசாங்க விருந்துகளுக்கு ரூ 30,000 1954—55 நிதிக்கணக்கீட்டின்படி ஒதுக்கப்பட்டது. இலங்கையின் அதிகமான வெளிநாட்டுத் தொடர்பும், அதிகப்படியான சர்வதேச சங்கங்களினது பிரதிநிதிகளின் வருகையும் அரசாங்க விருந்தினர்களது எண்ணிக்கையும் அதிகரித்திருப்பது ஒதுக்கப்பட்ட ரூ 30,000 போதாமல் போயிருக்கிறது. இந்தப் பெருக்கத்தினால் ஒதுக்கப்பட்ட மானியம் போதாமல் இருக்கிறதாம்.

இந்த உபதலைப்பின்கீழ், நடக்கும் நிதிவருடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் மானியம் போதாமையினால் இன்னுமொரு 10,000 ரூபாய் ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனநாயக காங்கிரஸ்...

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

வரை அவனால் முன்னேற்ற மடைய முடியாது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் போதிய வயல் நிலமோ நீர்ப்பாசன வசதியோ கிடையாதாகையால், யானை இறவுக்கப்பால் சென்று நீர்ப்பாசன வசதியோடு கூடிய நெற் காணிகளை அவன் தேடிக் கொள்ளவேண்டும்'' என்று உணவு உற்பத்தி அதிபர் திரு என். மாணிக்க இடைக்காடர் கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கிறார்.

திரு மாணிக்க இடைக்காடரின் இந்தப் புத்திமதிக்கு யாழ்ப்பாண மக்கள் அவசியம் சேவிசாய்க்க வேண்டும். அவருடைய இந்தப் புத்திமதியினால் யாழ்ப்பாணக் கமக்காரன் முன்னேற்ற மடைவது மட்டுமல்ல, தமிழையும் தமிழ்ப் பிரதேசத்தையும் காப்பாற்றிய பணியையும் அவன் புரிந்தவனாவான். வடபகுதியிலுள்ள வவுனியாப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கு தமிழ் இனத்தின் கையில் அதிகாரம் கிடையாது. தடுத்து நிறுத்தாமல் அப்படியே விட்டுக் கொண்டே போனால் இன்னும் சில வருடங்களில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திற்கு இப்பால், அதாவது யானை இறவைத்தாண்டியதும் சிங்கள நாட்டில்தான் பிரவேசிக்க வேண்டிய நிலைமை யாழ்ப்பாணத்தவருக்கு ஏற்படும். இந்த நிலைமை ஏற்படுவதற்கு முன்னுடியே தமிழ் மக்கள் யானை இறவுக்கு இப்பால் உள்ள அவ்வளவு பிரதேசங்களையும் ஆக்கிரமித்துக்கொண்டு நெருக்கமாகக் குடியேறிவிடவேண்டும். இப்படியான ஒரு குடியேற்றத்தை ஊக்குவிப்பதற்கான ஒரு திட்டத்தை திருகோணமலையில் கூடும் தமிழ் அரசுக் கட்சியின் வருடாந்த தேசிய மகாநாடு ஆலோசித்து வகுக்கும் என்று கருதுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 13.



பிரவேசக் கட்டணம் சதம் 50



பிரவேசக் கட்டணம் சதம் 50



மேல் இரண்டு கட்டங்களுக்கும் பிரவேசக் கட்டணம் ரூ. 1-00 செலுத்தினல் இந்த மூன்றுவது விடையை இனமாக அனுப்பலாம்.

பெயர்.....

விலாசம்.....

.....

அனுப்பும் மொத்த விடைகளின் தொகை.....

கட்டணத்தின் தொகை ரூ.....ச.....

போஸ்டல் ஆடர் வவுச்சர் இலக்கங்கள்.....

போட்டியின் விதிகள் 15ம் பக்கம் பார்க்க

ரொக்கப் பரிசு ரூ. 1,000-00
முதலாவது பரிசு ரூ. 600-00
இரண்டாவது பரிசு ரூ. 300-00
அதிகப்படியான விடைகள் அனுப்பு பவருக்கு விசேஷ பரிசு ரூ. 100-00
முடிவு திகதி 13-4-55 பி. ப. 5 மணி
சரியான விடை 17-4-55ல் பிரசுரிக்கப்படும்
பரிசு பெற்றோர் விபரம் 24-4-55ல் பிரசுரிக்கப்படும்
பரிசு பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை 30-4-55ல் செக் மூலம் அனுப்பப்படும்

இடமிருந்து வலம்

1. இந்துக்களின் புதுவருடம் இந்த மாதத்தில் ஆரம்பிக்கிறது.
3. கல்வித் தெய்வமான சரஸ்வதியின் ஆசனம்.
5. நீண்ட பிரயாணம் செய்பவர்களுக்கு இது அவசியம்.
6. தேடாக் கயிறு தலை மாறிக்கிடக்கிறது.
8. செப்பு.
9. பழைய இலக்கியங்களை ஆராய்ந்து இதைப் பற்றி ஒரு அரிய நூலை ஆக்கியிருக்கிறார் விபுலானந்த அடிகள்.
10. தம்பதிகளில் ஒருவர்.
12. கடை குறைந்து கிடக்கும் இது கை கூடாவிட்டால் "சாதல், சாதல், சாதல்" என்று பாடியிருக்கிறார் பாரதியார்.
13. உயர்ந்த கோபுரத்தின் உச்சிக்கு ஏறுவதென்றால் சிலருக்கு இது ஏற்படுவது சகஜம்.
15. கைத்தடி.
17. வாழைத்தடலின் சாறு வெள்ளைத் துணியில் பட்டால் இது பிடித்து விடும்.
19. குழந்தைகளுக்கு அஜீரணத்தால் உண்டாகும் ஒரு நோய்.
20. பட்டம் பதவிகளுக்காக அரசாங்கத்திற்கு இது பாடுபவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.
21. இது உள்ளவன் வாழ்க்கையில் முன்னேறுவான்.

மேலிருந்து கீழ்

1. புதுமையான இவர்கள் ஆரம்பத்தில் நிந்தனைக்குள்ளாவது இயற்கைதான்.
2. சந்திரன்.
3. சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இந்த திதியைகண்டு அஞ்சுவது வழக்கம்.
4. இதில் காயம் பட்டால் வீரன் வாளைப் போட வேண்டியதுதான்.
7. ஒருமுறை தீமை புரிந்த வர்மீது வாழ்நாள் முழுவதும் இது பாராட்டும் குணம் சிலருக்கு உண்டு.
8. குழந்தைகளுக்கு குதூகலம் ஏற்பட்டால்..... ப்பு தானுகவே வந்துவிடுகிறது.
10. கால் அணி.
11. அறிஞர்.
14. கண்ணகியின் சிலைவடிப்பதற்காக இதை இமயத்திலிருந்து கனகவிஜயன் என்ற ஆரிய மன்னனின் தலையில் ஏற்றிவந்தானும் ஒரு தமிழ் மன்னன்
16. மாலை நேரம்.
17. இது பெருக்கெடுத்தால் கரையிலுள்ளவர்கள் தவிக்க வேண்டியதுதான்.
18. இன்றையத் தமிழ்ப் பண்டிதர்கள் தமிழின் இதைப்பற்றித் திரும்பத் திரும்பப் பேசித் திருப்தியடைகிறார்கள்.
19. இதலை நிலைகெட்டவர்கள் பலர்.

போட்டி அனுப்பும் விலாசம்:

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 13
சுதந்திரன் காரியாலயம் 194, ஏ, தட்டா தெரு, கொழும்பு-12



இவர்கள் உல்லாசமான சவாரியின் சுகத்தை

நியூ ஹட்ஸன்

அல்லது

ஸன்பீம்

சைக்கிள்களினுல் அனுபவிக்கிறார்கள்

★ நியூ ஹட்ஸன் 22 அங்குலம் ரோட்ஸ்டர் கியர் கேஸ், லகேஜ்காரியர், ஸ்டாண்ட் & டெரீ ஆசனத்துடன் விலை ரூ. 205-00

★ ஸன்பீம் (ஆண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

★ ஸன்பீம் (பெண்களுடையது) 21 அங்குலம் லயிட்டுவரிஸ்ட் விலை ரூ. 210-00

சிறுவர் சிறுமிகளின் சைக்கிள்களும் கிடைக்கும்.

லயிஸ் பிரவுண் அன்கோ. லிமிட்.,
மக்லம் ரோட், கொழும்பு.

சுடச்சுட

★ பொதுமக்களின் ரசிகத்தன்மை எப்படி இருக்க வேண்டும்' என்பதை மத்திய சர்க்கார் தணிக்கை இலாகா நிர்ணயம் செய்யக் கிளம்பி விடுகிறது. இதன் விளைவாகத் தணிக்கைக்குப் போகும் படங்கள் படும் பாடு அற்ப சொற்பமல்ல.

—ஆ. விகடன் 13-3-55

பொதுமக்களின் ரசிகத் தன்மைக்காக படங்கள் படும் பாடே பெரிய பாடாய் போய்விடுகிறது. பொதுமக்கள் பார்க்கவேண்டாதவைகளை தணிக்கை போர்டர் பார்த்துவிடுகிறார்கள்.

★ காங்கிரஸ் அக்கிராசனர் திரு தேபர். 'விஜய வாடா' விற்கு விமான மூலம் விஜயம் செய்திருக்கிறார்.

—செய்தி

விஜயம் செய்ய வாடா என் கண்ணின் மணியே என்று விஜய வாடாவில் உள்ள ஜனங்கள் பாடியிருப் பார்களோ?

★ ஜலவாயுக் குண்டு உற்பத்திக்குத் தடைபோட ஒப்புக்கொள்வது, பிரிட்டன் விஷயத்தில் தற்கொலை போன்றது.

—திரு ஹெரல்ட் மெக்மிலன்

தலைபோட ஒப்புக்கொள்வதுதானே.

★ கல்வி மந்திரி திரு பண்டா திறமை யற்றவர் என்பதற்காக பதவி நீக்கம் செய்யப்படவேண்டும்.

—செய்தி

பதவி நீக்கம் செய்தால் மட்டும் போதாது. பாலர் பாட புத்தகத்தையும் பரிசாக வழங்க வேண்டும் அல்லவா?

★ வேலை ஸ்தலங்களின் உள்ளேயிருந்து வேலை நிறுத்தம் செய்தலைச் சட்டவிரோதமாக்குவதற்கான சட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

—செய்தி

அட பழைய பரமசிவமே. வெளியே இருந்தும் வேலை நிறுத்தம் செய்ய விடமாட்டேன் என்கிறார்களே, என்று அழுகிறார்கள் கம்யூனிஸ்டுக்கள்.

★ நேருஜீ நாகபுரிக்கு விஜயம் செய்தபொழுது, ஒரு ரிக்ஷாக்காரன் ஒரு கையில் கத்தி, மற்றொரு கையில் காகிதம் ஒன்றுடன் நேருஜியின் மோட்டார் மீது பாய்ந்தான்.

—செய்தி

அவன் கையிலிருந்த காகிதத்தில் என்ன எழுதியிருப்பான் என்று நினைக்கிறீர்கள். என் ரிக்ஷாவில் ஒரு நாளாவது ஏறினது கிடையாது. இப்படித் தினமும் காரிலேயே பிரயாணம் செய்தால், எங்கள் ரிக்ஷாதான் என்னத்திற்கு ஆவது; 'இந்த விஷயம்' நேருவுக்கு மாத்திரம் தான் தெரியும். அதை எப்படி வெளியில் சொல்லிக் கொள்வார்?

★ மதுவிலக்கின் வெற்றி அதை அமுல் நடத்தும் முறையைப் பொறுத்துள்ளது.

—சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா

சாமியானை, நான் குடித்து விட்டு பேசவில்லை.

'சொல்லாமல் விட்டது'

கணவன்— நேற்று நான் ஒரு அதிசயமான சொப்பனம் கண்டேன் 'நான் புடவை வேணுமா' ன்னு கேட்டேன். நீ 'வேண்டாம்' னு சொல்லிவிட்டே.

மனைவி— அதைவிட அதிசயமான சொப்பனம் நான் போன வாரம்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

மானம் இழந்தவன்

(வ. மகாலிங்கம்)

பரந்த நெல்வயலகளின் மத்தியில் அந்தக் குடிசை கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. வெளியே சிறிதாக மழை தூறிக்கொண்டிருந்தது. பொழுது மங்கிக் கொண்டேபோனது. அன்றிரவு மழைகொட்டுவதற்கு அறிகுறியாக இருள் மேகங்கள் வானவீதியில் அசைந்து கொண்டிருந்தன.

அந்த இளமங்கைக்கு வயது பதினெட்டு இருக்கலாம். பருவத்துடிப்புகள் உடலமைப்பிலும் அங்கங்களிலும் உயிர் ரேகைகளாகத் துடித்துக்கொண்டிருந்தன. ஒரு கிராமப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய அடக்கம் அழகு, அன்பு அத்தனையும் அவளிடம் பிரதிபலித்துக்கொண்டிருந்தன. இன்பம் பயக்கும் ஏடாக இருக்க வேண்டும்—தூணில் சாய்ந்துகொண்டே புன்னகையுடன் வாசித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென ஒரு சப்தம் குடிசையின் உள்ளே கேட்டது. துடிதுடித்துக்கொண்டே, ''எனனப்பா அது?'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே ஓடினாள் அவள்.

வயது முதிர்ந்த ஒருவர் தமது வெள்ளிக் கம்பி போன்ற தாடியைத் தடவிக் கொண்டே தனது முன்னால் உடைந்து சிதறுண்டு கிடந்த மதுக் கிண்ணத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். மதுவின் நாற்றம் மூக்கைப் பிடுங்கிக்கொண்டு எழுந்தது. ''மதுவா, அப்பா?'' என்று திகைத்தாள் அந்தச் சுந்தரி.

''ஆம்'' என்று கூறுவது போலத் தலையசைத்தார் அந்தப் பெரியவர். உலகிலே கவலைப் புயலால் அடிபட்டு அல்லற்பட்டு ஆற்றாது அழுது, அனுபவ ஏட்டின் ஒவ்வொரு அத்தியாயத்தையும், ஒவ்வொரு இதழையும் அலசி ஆராய்ந்து கற்றுத் தெளிந்த அந்தப் பெரியவர் அமைதியின் உருவகமாக அசையாது நின்றார் அதே இடத்தில்.

''ஆம், மதுதான், மாலா. உடைந்து சிதறிக்கிடப்பது மதுக் கிண்ணந்தான். இந்தப் பதினெட்டு ஆண்டுகளாக உனக்குத் தெரியாமல் குடித்து வந்தேன். மது அருந்துவது வெட்கப்படக் கூடிய காரியமென்றதனால் அல்ல. நான் மது அருந்துவதன் காரணம் உனக்குத் தெரியக்கூடாது என்பதற்காக.

''மாலா! மழை பெலமாக ஆரம்பிக்கிறது. அதோ! அந்தச் சாரளத்தைத் தாளிடு''

மீண்டும் மதுக் கிண்ணத்தை நிரப்பிக்கொண்டே பேச ஆரம்பித்தார் அந்தப் பெரியவர்.

''மதுவைச் சமூகம் வெறுக்கிறது. ஆனால் நான் கண்ட அனுபவத்திலே மானம் இழந்தவன் மனதுக்கு மாற்று மருந்து மது. உடைந்து சிதறிய உள்ளத்தை ஒன்று சேர்த்து ஒட்டவைப்பது மது. இன்பமில்லை என்று ஏங்கித் தவிப்பவனுக்கு இன்பம் சேர்ப்பது மது. வாழ வழியின்றி வழி தவறும் நடைப்பிணத்துக்கு வாழ்வில் ஒளியைக் காட்டுவது மது. சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவனுக்கு சாந்தியளிப்பது மது.

''பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டிலே—கற்பின் குரல் மதகோசை எழுப்பிய கன்னித் தமிழ் நாட்டிலே, கணவனைக் கொன்ற காவலன் அரசை, மானவுணர்ச்சியுடன் கவிழ்த்து ஆர்ப்பரித்த கண்ணகி குலவிய நாட்டிலே கணிகையர் குலத்திற் பிறந்தும் கற்பு நெறிதவறாது வாழ்ந்த மாதரசி மாணிக்கம் மாதவி பிறந்த தமிழர் நாட்டிலே—நடந்த ஒரு கதை. கண்ணீரில் தோய்த்துத் தீட்டப்பட வேண்டிய சோகக் கதை. இரத்தத்தால் தன் இதயத்திற் படிந்த அவமானத்தை. கவலையைக் கழுவிய ஒரு வாலிபனின் வாழ்க்கைச் சித்திரம். இதைக் கேள், மாலா.

''நூற்றுக்கணக்கான மக்களுக்குத் தம் உயிர்களை ஆண்டவனிடம் அபயம் வைத்து மூச்சடக்கி பூமியின ஆழத்தில் சென்று நிலக்கரி எடுக்கும் சுரங்கத் தொழிலாளி அவன். காலைதொட்டு மாலை வரை பூமியின் அடித்தளத்தில் அவன் தொழில் புரிந்தான். வியர்வை சிந்தி, இரத்தஞ் சிந்தி, மூச்சுத் திணறித் தொழில் புரிந்த அவன் கூலியாகப் பெறும் குறைந்த ஊதியத்தில் தன் குடும்பத்தை நடத்தினான். உழைப்புக்குத் தகுந்த ஊதியமின்றி உருக்குலைந்துவிட்டான் அந்த உத்தமன். என்றாலும் அவன் மனைவி கேட்டதை அவன் கடன்பட்டாவது வாங்கிக் கொடுக்கத் தவறியதில்லை. அவ்வளவு தூரம் அவளிடம் அவனுக்கு அளாதியான வாஞ்சை.

''அன்று ஒரு தேனீர்க் கடையில் ரொட்டி சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது கடையின் பின் புறத்திலிருந்து இரு குரல்கள்:

''அவ தழுக்கும் மினுக்கும்.....முதலாளியை வீட்டில் காணவே முடியாது. எந்த நேரமும் அவ கிட்டத்தான் கிடப்பான்.''

''யாரைச் சொல்றே? நம்ப மருதையின் பொண்டாட்டிதானே?''

''ஆமாண்ட, அவளேதான்''

''சுரங்க முதலாளியின்னு சும்மா மனுசனு? ஏண்டா புதுப் புதுச் சேலையெல்லாம் வாங்கிக் கொடுக்கிறான். பணம் பணமா அள்ளி வீசறான். அவன் சொந்த மகளுக்கே அத்தனை சேலைகள் கிடையாது. இதையெல்லாம் மருதை விசாரிப்பதில்லையோ?''

''அவன் ஏண்டா, விசாரிக்கப்போறான்? கஷ்டப்படாம பணம் குவியுது. தேவையானதெல்லாம் வாங்கிப் போட முதலாளி. அவனுக்கென்ன?''

''சீ, என்ன இருந்தாலும் இந்த மானங்கெட்ட வாழ்க்கையைவிட பிச்சை எடுக்கலாமே, வீடு வீடாக?'' மருதை தன் காதுகளையே நம்பவில்லை, இது நடக்க முடியுமா என்ற ஒரே கேள்விக் குறி அவன் முகத்தில் காணப்பட்டது.

''ஒருகாலும் இல்லை. முதலாளி குறைந்தது அறுபது வயதைத் தாண்டியவர். படித்தவர். பக்திமான். பிறருக்கெல்லாம் உபதேசம் பண்ணும் பிரமுகர். இந்தச் சுத்த அபாண்டமான பொய்யை அந்த மனிதன் கழுத்திலா கட்டுவது?'' என்று எண்ணிக்கொண்டே வீட்டுக்குச் சென்றான்.

மருதை தன் மனைவியிடம் சொன்னான், இந்தக் கேவலமான கதையை. சீறிவிழுந்தாள் அத்தப் பத்தினி சிங்கத்தைப்போல. ''எந்த முட்டாள் சொன்னான்? தன் சொந்த மகளைப்போல இவ்வளவு இரக்கத்துடன் வளர்க்கிற அந்தப் பெரிய மனுஷனை இப்படியுமா சொல்றாங்க? அப்படித்தான் நான் நடந்துகொண்டாலும் இவங்களுக்கு என்ன? இவங்க எல்லாம் சொந்தப்பொண்டாட்டியின் நடத்தையைச் சுத்திப் பாத்துக்கிட்டே இருக்காங்களாக்கும்.''

''இல்லைச் சுந்தரி, அவங்க யாராவது பேசித்தொலையட்டும். நமக்கென்ன?'' என்று ஆறுதல் கூறினான் அந்த நம்பிக்கெட்ட நல்லவன்.

''அன்று அந்திப்பொழுது. சுரங்க முதலாளி கோவிலுக்குப்போய்விட்டு மருதையின் வீட்டுவழியாக வேலைக்காரர், காக்காய்பிடிப்போர், கடன் வாங்கியோர் முதலியோர் புடைசூழ வந்தார். அந்த நேரமே ரயில் ஏறி நீலகிரிக்குப் புறப்படவேண்டும் என்று பணித்தார். மருதை சகல ஏற்பாடுகளும் செய்து புறப்பட்டான். அந்த வாலிபன் ஒரு வாரம் கழிந்த பிறகே திரும்பிவர முடியும்.

''மாலா, கதையின் நடுப் பகுதிக்கு வந்துவிட்டோம். அந்த வாலிபனின் கண்கள் திறக்கப்படும் கட்டம், சில நிமிடங்களில் வந்துவிடும். மாலா! அந்த மதுக்கிண்ணத்தை நிரப்பு.'' என்று கூறிக்கொண்டே கதையை மீண்டும் ஆரம்பித்தார்.

''ரயிலுக்குப்போன அந்த வாலிபத் தொழிலாளி திரும்பிவந்தான். ரயில் பாதை வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் அன்று ரயில் நீலகிரிக்குப் போகாதென்று கூறிவிட்டார்கள். மூட்டை முடிச்சுடன் உடனே திரும்பி வந்தான் மருதை.

''மாலா! மனிதனுக்கு மானவுணர்ச்சியைக் கொடுத்த கடவுள், ஏன் கோபத்தையும் கொடுத்தார்? இன்றும் உலகில் எத்தனை பேர் தமது சொந்த மனைவியரைப் பணத்துக்கு விலை கூறி விற்று மனிதரென்று திரிகிறார்கள்? பிறரது ஏளனச் சிரிப்பு அந்த மந்தக் காதுகளில் விழுவதில்லை. தமது மனைவிக்குப் பிறக்கும் பிள்ளைகள் தமது பிள்ளைகளல்ல என்று தெரிந்து கொண்டும் கண்மூடி மௌனிகளாக வெட்கமின்றி பிறர் மத்தியில் மகிழ்ந்து குலாவுகிறார்கள். அந்தச் சோதாக்களைப் போல உணர்ச்சியற்ற மரக்கட்டைகளைப்போல, அந்த வாலிபனும் பிறந்திருந்தால் ஒரு கவலையும் ஏற்பட்டிருக்காது. ஆனால் அந்த வாலிபன் தன் மானவுணர்ச்சியுள்ளவன். விபசாரத்தை வெறுப்பவன்; நேர்மைக்கு மட்டும் மதிப்புக் கொடுப்பவன்''

''தன் மனைவியையன்றிப் பிற பெண்களை ஏறெடுத்துப் பார்ப்பதும் பாபம் என்று இதய பூர்வமாக நம்பிய வாலிபன் திரும்பிவந்தான். அவன் கண்டது.....அப்பப்பா! மறக்கவே முடியாது. அதை நினைக்கவே இதயம் சுக்குநூறாகிவிடும் போலிருந்தது. அடக்க முடியாத ஆழமான கவலை, அனையுடைத்துப் பாய்ந்தது. கோபப் புயல் கொந்தளித்துச் சீறி எழும்பிற்று. உலகமே அவன் முன் சுழன்றது.

''தன் இதயத்தில் எவருக்குமே இடமளிக்காது எந்த மனைவிக்கு அதை ஏகபோக உரிமையாக அளித்தானோ அந்த மனைவி, அக்கினி சாட்சியாகத் தாலிகட்டிய அந்த தர்ம பத்தினி, ''அன்பே, உயிரே, ஆரமுதே'' என்று ஆசைமொழி பேசிய ஆருயிர் மனைவி சுரங்க முதலாளியின் தோளில் துவண்டுகொண்டிருந்தாள். அறுபது வயதுக் கிழவனின் அன்பணைப்பிலே, ஆனந்த ஆலிங்கனத்திலே அசைவற்றுக் கிடப்பதைக் கண்டான் மருதை''

பெரியவரின் கண்களில் தீப்பொறிகள் பறந்தன. பேச்சில் ஒரு துடிப்பு, உடலில் ஒரு பதட்டம். மேலும் இரண்டு கிண்ணம் மதுவை ஒரே மூச்சில் பருகிவிட்டுக் குடிசையில் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தார்.

''அப்பா, அந்த வாலிபன் என்ன செய்தான்? அந்த இடத்தை விட்டுப் பைத்தியம் பிடித்தவன்போல ஓடிவிட்டானு?'' இது மாலாவின் ஆவல் தும்பும் கேள்வி.

''ஆம், அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டான். ஆனால் அந்நியனின் ஆலிங்கனத்தில் ஆனந்தங்கொண்ட அபசாரியையும் பகல்வேடம் பூண்ட முதலாளியையும் அவனது கத்தி குருசிபார்த்த பிறகே அந்த இடத்தைவிட்டு ஓடினான்''

''சட்டம் ஒரு விசித்திரமான கபோதி. ஒருவன் செய்த குற்றத்தை மட்டும் சட்டம் பார்க்கிறது. எந்தச் சூழல், எந்த நிகழ்ச்சி அவனைக் குற்றஞ் செய்யத் தூண்டியது என்பதைக் காணும் சக்தி சட்டத்துக்கு இல்லை.

''கைவிலங்குடன் நின்றான் வாலிபன் கைதிக் கூண்டில். பொய்யை மெய்யாக்க நடந்ததைத் திரையிட்டு மறைக்க, நாற்றமெடுக்கும் உண்மைக்கு நறுமணம்பூச சட்டம் அனுமதி கொடுத்தது. தூக்குமேடை அவன் வரவை எதிர் நோக்கி நின்றது. சவக்குழி அவனை விழுங்குவதற்குத் தயார் செய்துவிட்டது; அவனை மரணம் அரவணைக்க முன்வந்து கொண்டிருந்தது.

''ஆனால் நீதி தவறிவிடவில்லை. தருமம் அழிந்துபட

(13ம் பக்கம் பார்க்க))

ஆசை ஏணி

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட கதிதான் தாய்க்கும் ஏற்படும் என அஞ்சினாள். அது மட்டுமல்ல; தன் தந்தையின் இறப்புக்கு காரணமாகவுள்ள அந்த ஆலையையும் விற்றுத் தொலைக்க வேண்டும் என்பதே சந்திரமதியின் எண்ணம். ஆகவே தாயையும் தன்னுடன் அழைத்து வந்து இங்கிலாந்தில் இருப்பதற்கு விரும்பினாள். தாயை அழைத்துவரும் பொறுப்பையும் நாதனிடமே ஒப்படைத்தார்.

பாலர்முதல் பாமரர்வரை பகுத்தறியக்கூடிய சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி

வெற்றிபெற்றவர்களின் பாராட்டுக்கள்

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி 11 ல் முதற் பரிசு பெற்ற இருவர்களான திரு க. மெய்யழகனும், திரு ச. செல்லையாவும் போட்டி ஆசிரியருக்கு அனுப்பிய கடிதத்தை மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம். சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி நமது நேயர்களிடை சிருஷ்டித்துள்ள உயர்ந்த நல்லெண்ணத்தையும், உற்சாகத்தையும் இக்கடிதங்கள் பிரதிபலிக்கின்றன.

திரு மெய்யழகன் அனுப்பிய கடிதம்:

ஐயா, தங்கள் 21-3-55 கடிதம் கிடைக்கப் பெற்றேன். மிகவும் சந்தோஷம்! தங்கள் விருப்பப்படி எனது குடும்பப்படத்தை இக்கடிதத்துடன் அனுப்பியிருக்கிறேன். அத்துடன் தங்கள் குறுக்கெழுத்துப்போட்டியைப்பற்றி சில வார்த்தைகளும் சொல்ல விரும்புகிறேன். குறுகிய காலத்துள் பாலர் முதல் பாமரர்வரை யாவருக்கும் விளங்கக் கூடிய முறையில் நுட்பமான கருத்துகளைப் புகுத்தி சாமர்த்தியமாக குறிப்புகளைக் கொடுக்கும் போட்டி ஆசிரியர் அவர்களின் அனுபவமிக்க அறிவாற்றலை என்னால் மெச்சாமலிருக்க முடியவில்லை. பல வருட கால அனுபவம் பெற்ற பிரபல தமிழ் நாட்டுப் போட்டி ஆசிரியர்களையும் இவர் மிஞ்சிவிட்டார் என்றால் அதுமிகையாகாது. நம் தாய் நாடான ஈழத்திலும் தமிழ் நாட்டு அறிஞர்களுக்குச் சமமான அறிவாற்றல் பெற்ற அறிஞர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணி நான் பெருமிதம் அடைகிறேன். இவ்வளவு சொல்லியபின் என் மனதிற்

திரு ச. செல்லையா

படும் குறையையும் சொல்லிவிடுவது தான் நல்லதென நினைக்கிறேன்.

சுதந்திரன் குறுக்கெழுத்துப்போட்டி அளவுக்கு மிஞ்சிய மாற்று விடைக்கட்டங்களைக் கொண்டிருக்கிறது. சரியான விடையை எவரும் அனுப்பமுடியாமல் ஒரு தப்புள்ள விடை இரண்டு தப்புள்ள விடைகளை அனுப்பியவர்களே பெரும் பாலும் முதற் பரிசு பெற்றுவருவதே இதற்குப் போதிய சான்றாகும். ''சுதந்திரன்'' மேலும் மேலும் வளர்ச்சியுற்று தமிழுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் உழைத்து வரவேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன். வணக்கம்!

இப்படிக்கு
க. மெய்யழகன்
அனுராதபுரம்

திரு செல்லையா அனுப்பிய கடிதம்:

ஐயா, ஆசிரியர் அவர்களுக்கு பணிவுடன் எழுதிக் கொள்வது.

எனது ஜீவியம் ரொம்பக் கஷ்டமான நிலைமையில் இருக்கிறது. முன்னால் எவ்வளவு சுதந்திரமாக இருந்த நான் தற்சமயம் கூலித் தொழிலுக்கு ஆளாகிவிட்டேன். எனக்கு ஓர் மகனும் பெண் சாதியுமிருக்கிறார்கள். மகனுக்கு ஒன்றரை வயது. பெயர் ஜானகிராமன். எங்களுடைய வறுமையை நீக்கும் பொருட்டு வேண்டியளவு சுவீப் டிக்கட்டுகளும் ஜிம் காஞ்டிக்கட்டுகளும் எடுத்து காசை விரயமாக்கினேன். வேறு பத்திரிகையின் போட்டிக்கும் செலவழித்தேன். பயன் இல்லை. பிறகு சுதந்திரனுக்கு விடையெழுத ஆரம்பித்தேன். அதில் வெற்றியும் கண்டேன். கடன்களைத் தீர்த்தேன். எனக்கு பெரும் மகிழ்ச்சி.

சுதந்திரன் எளிமையான விடையை எடுத்து ஏழை எளியவர்களுடைய வறுமையை நீக்கி வருவதற்காக என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துகொள்கிறேன்.

இப்படிக்கு
ச. செல்லையா
மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுசக்தி மூலம் அதிசயிக்கத் தக்க ஆக்க வேலைகள் செய்யலாம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அணுசக்தி மின்சார சக்தியாக மாற்றப்படுவது, தொழில் வளர்ச்சிக்கு மிகவும் அனுசரணையாக இருக்கும். குறிப்பாக மிகவும் அதிக அளவு மின்சார சக்தியைச் செலவிட வேண்டிய ஆலைகளுக்கு (அலுமினியம், இரும்புக் கலவைகள், தாது உரங்கள், ரசாயனப் பொருள்கள் முதலிய பொருள்களை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கு) இது மிகவும் உதவிபுரியக்கூடியது.

இரும்பு, எஃகு தொழிற் சாலைகளுக்கும் கண்ணாடி, பீங்கான்கள், பேப்பர் முதலியவற்றை உற்பத்தி செய்யும் ஆலைகளுக்கும் தேவையான வெப்ப சக்தியை அணுசக்தி ஏராளமாக அளிக்கவல்லது. அணுசக்தி மின்சார நிலையத்திலிருந்து கிடைக்கும் வெப்பத்தைக் கொண்டு இந்நிலையத்தைச் சுற்றிலுமுள்ள விஸ்தாரமான பிரதேசத்தைச் சேர்ந்த நகர்களுக்கும் கிராமங்களுக்கும் வெப்பம் அளிக்க முடியும். இது நகரின் காற்றோட்டத்தை சுத்தம் குறையாதபடி பாதுகாப்பதற்கும் பிரம்மாண்ட அளவுடைய எரிபொருள்களை எடுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து போக்குவரத்து சாதனங்களை விடுவிப்பதற்கும் உதவி புரியும்.

ஒருசில கிராம் எடையுள்ள அணுக் கருவிலிருந்து பொருளைக்கொண்டு மிகுந்த கனமுடைய கப்பல்கள் அல்லது ரெயில்கள் கூடியசீக்கிரத்தில் ஓடச் செய்யப்படும் என்பதை எண்ணும்போது ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் இது உண்மையிலேயே நடைபெறப்போகிறது. நிலக்கரி அல்லது எண்ணெய் இல்லாமலே இயந்திரக் கருவிகளையும் இயந்திரங்களையும் இயங்கச் செய்ய முடியும். வெடிமருந்தும் வேட்டும் இல்லாமல் மனிதர்கள் மலைகளை உடைத்தெறிவார்கள், அணைக்கட்டுகளைக் கட்டியமைப்பார்கள். நதிகளை வெட்டி ஆழப்படுத்துவார்கள்.

அணுக் கருவினுள்ள இந்த சக்தியைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டபின், இது வரை சரியானபடி ஆராயப்பட்டிராத மற்றொரு உலகினுள்ளும், அதாவது பேரண்டத்தினுள்ளும், புகுந்து அதன் இரகசியங்களையும் மனிதன் கண்டறிவான் என நாம் எதிர்பார்க்கலாம். முதலில் மனிதன் சூரியமண்டலத்தைச் சேர்ந்த கிரகங்களுக்குச் சென்று வருவான், பின்னர் இதர நட்சத்திர மண்டலங்களைச் சேர்ந்த கிரகங்களுக்கும் செல்லத் தொடங்குவான்.

அங்கஜீவிகளின் வளர்சிதை மாற்றம் (metabolism) சம்பந்தமான மிகவும் சிக்கலான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், பற்பல தொழில் நுணுக்க முறைகளைக் கட்டுப்பாடு செய்வதற்கும் ரசாயனக் கிரியைகளையும் உலோக உருக்கு முறைகளையும் ஆராய்வதற்கும் சோவியத் நாட்டில் "குறியிட்ட அணுக்கள்" என்ற முறை விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. மற்றும் இங்கு கதிரியக்கத் தின்போது வெளிப்படும் கதிர்களும் கதிரியக்க சமனிகளும் (isotopes) விரிவான முறையில் வைத்தியத் துறையிலும் (புற்றுநோய், படை, லூப்பஸ் முதலிய வியாதிகளுக்கான சிகிச்சை) தொழில் நுணுக்கத் துறையிலும் (ரேடியோஸ்கோப்பியின் மூலம் உலோகப் பொருள்களின் அமைப்பினுள்ள குறைபாடுகளை நிர்ணயம் செய்தல்), மற்றும் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் வேலையிலும், கப்பல் கட்டும் தொழில், இரும்பு, எஃகு ஆலைகள், கட்டிட வேலைத் தொழில்கள் முதலியவற்றிலும் உபயோகிக்கப்படுகின்றன.

அணுசக்தியைப் பயன்படுத்திக்கொள்வதின்மூலம் இயற்கையின் பூதாகரமான சக்திகள்மீது மனிதனுக்குள்ள வல்லமையை மாபெரும் அளவிற்கு உயர்த்த முடியும்; உற்பத்தி சக்திகளை வளர்ப்பதற்கும் தொழில் நுணுக்க, கலாச்சார முன்னேற்றமடைவதற்கும் மக்களின் செல்வத்தைப் பெருக்குவதற்கும் அளவு கடந்த வாய்ப்புகள் பெற முடியும்.

ஜப்பானிய நகர்களான ஹிரோஷிமாமீதும் நாகசாக்கிமீதும் அணுகுண்டுகளை வீசிய நாடான அமெரிக்கா, அணுசக்தியை யுத்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் பாதையை மேற்கொண்டுள்ளது. ஆனால் வருங்காலத்தில் மனிதகுலம் மேற்கொள்ள வேண்டிய பாதை இதுவல்ல. இந்த மாபெரும் விஞ்ஞான கண்டுபிடிப்பை சமாதான ஆக்க வேலைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் வழிமுறைகளை சோவியத் நாடு சுட்டிக்காட்டி வருகிறது. அணுசக்தியை சமாதான பூர்வ முறையில் உபயோகிப்பதில் சோவியத் நாடு பெற்றுள்ள அனுபவத்தை இதர நாடுகளுக்கும் எடுத்துரைப்பதற்கு தயாராக இருப்பதாக அது பிரகடனம் செய்துள்ளது.

சோவியத் நாட்டில் அணுசக்தி நாசத்தையும் சாவையும் ஏற்படுத்துவதற்காக பயன்படுத்தப்படவில்லை. ஆக்க வேலைகளுக்காகவும் உயிரைப் பேணுவதற்காகவும் இங்கு அது பயன்படுத்தப்படுகிறது. சமாதான பூர்வமான நோக்கங்களுக்கு மக்களுடைய நன்மைகளுக்காக இந்தப் புதிய சக்தியை உபயோகிப்பதில் சோவியத் நாடு அக்கறைகொண்டுள்ளது.

—"சோவியத் நாடு".

ஆரோக்கியத்தின் அழகொளியின் மகிழ்வு

கொழும்பு முகத்துவாரத்தைச்சேர்ந்த திருமதி ஹோஸ் வான்டெரில் பத்து மாதமான தனது மழலைக் குழந்தை பிலிப்புடன் காட்சியளிக்கிறார்.

"மகன் பிலிப்பிற்கு பிறக்க முதல் வாரம் தொட்டு லெக்டோஜனையே ஊட்டி வருகிறேன். இப்பொழுது 10 மாத வயதான பிலிப் லெக்டோஜன் உணவை அருந்தும் மற்றெல்லாக் குழந்தைகளைப்போலவே எனது செல்வமும் தானாகவே பேசுகிறது" என்கிறார் திருமதி வான்டெரில். இலம்பொருந்திய கைகால்களுடன், பூரண ஆரோக்கிய அபிவிருத்தியுடன், புன்முறுவல் தவழ எனது மகனைப் பார்க்கும்போது என் பெற்றமனம் எவ்வளவு ஆனந்திக்கிறது தெரியுமா? இதெல்லாவற்றிற்கும் லெக்டோஜனுக்கே நான் பெரிதும் கடமைப்பட்டவள். லெக்டோஜனே குழந்தைகளின் மிகச்சிறந்த உணவு.

LACTOGEN

இலங்கையின் குழந்தைகளின் உணவு

இயல் இசை நாடகம்

புதுப்பாணியில் பழைய "சாவித்திரி"

பழமையை மனிதன் முற்றிலுமாய் மறந்துவிடுவதில்லை. மறக்கத் துணிவதுமில்லை. காலப்போக்கில் அவை அருகிப்போக நேரிட்டாலும் இடையிடையே புதுவிதத்திலாவது அவற்றைக் கண்டு களிப்பதில் திருப்தியடைகிறான். அதனால்தான் சமூகப் படங்கள் குவிந்துவரும் இந்நாட்களிலும் நந்தனார், கண்ணகி—கோவலன் கதைகள் மூன்றுவது முறையாகவும், மற்றும் பல தமிழ்ப் படங்களைத் திரும்பவும் படம் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பழைய அரிச்சந்திரா, பூதத்தம்பி, சத்தியவான்—சாவித்திரி நாடகங்களைப் பற்றியெல்லாம் சுவைத்துச் சுவைத்துப் பேசுபவர்களை இன்றும் நாம் காணலாம். அவர்களையெல்லாம் திருப்திப் படுத்தப்போலும் கொழும்பு தமிழ் மகளிர் கலை வளர்ச்சிக்கழகத்தார் சாவித்திரி நாடகத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

கொழும்பிலே நாடகம் நடத்துவதற்காகத் தோன்றிய ஆண்களின் கழகங்களெல்லாம் குட்டிச்சுவராகி வரும்போது இம்மகளிர் கழகம் சிறுமிகளைக் கொண்டே ஒரு நல்ல நாடகத்தை தயாரித்தமை பாராட்டிற்குரியதாகும்.

பழைய சத்தியவான் சாவித்திரிதானே என்று எண்ணிவிடாதீர்கள். பழைய "ரோமியோ—ஜூலியெட்" தான் இரண்டு ஆண்டுக்கொருமுறை புதுப்புது வடிவில் வெளிவரவில்லையா? மக்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் சுவைக்க வில்லையா? அதேபோலத்தான் இச்சாவித்திரி நாடகம் பழையகதை புது உருவில், புதிய "செட்டிங்" களோடு, புதிய பின்னணியோடு நடாத்துகின்றனர்.

தமிழ் பெண்களோடு முஸ்லிம் சிறுமிகளும் மேடையேறி நடிக்கும் முதல் தமிழ் நாடகம் இது ஒன்றையே நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள்.

நாடகம் உங்கள் பொறுமையைச் சோதிக்கும் அளவிற்கு நீண்டுவிடவில்லை. இரண்டுமணி நேரத்திற்குள் நல்ல விறுவிறுப்பாக ஓடுகிறது.

வசனங்கள் யாவும் 'கருணை நிதித்' தமிழில் ஒலிக்கின்றன. அவற்றையெல்லாம் தடங்கல் சிறிதுமின்றி சிறுமிகள் அனைவரும் முழக்குகின்றனர். சத்தியவானின் தந்தையாகத் தோன்றி நடிப்பவர் வசனங்களை இராச சபையில் அள்ளி வீசுவதும், பற்களை நற நற வென்று இடையிடையே கடிப்பதும் காண்பவர்களனைவருக்கும் உணர்ச்சுயூட்டவல்லன.

நாரதராக நடிப்பது ஒரு முஸ்லிம் சிறுமி என்றால் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள். செல்வி நஜ்ஜிமா அப்துல் காதர் நாரதர் பாகத்தைத் திறம்பட நடித்துள்ளார். ஒரு முஸ்லிம் சிறுமியர்கூட இப்படி அழகாக வசனம் பேசவல்லவர் என்பதை நான் இந்நாடகத்தில்தான் கண்டேன்.

சாவித்திரியாக நடிக்கும் செல்வி கௌரி நடராசாவை நீங்கள் ஒருபோதும் மறக்க முடியாது. பாத்திரத்திற்கேற்ற அவர் முக அமைப்பும், அடக்கமான நடிப்பும், அன்பான வார்த்தைகளும் யாவர் உள்ளத்தையும் தொட்டுவிடவல்லன.

சத்தியவான் பாகமேற்று நடிப்பவர் மோகன சந்திரா குமாரசாமி. ஆண் பாத்திரம் ஏற்று நடிக்கவல்ல அம்சங்கள் யாவும் இவரிடம் அமைந்திருக்கின்றன. வீட்டிலே தமிழ்மொழியே பேசுவதில்லை என்பதை இவர் மேடையில் காட்டிக் கொள்வது ஒரு குறையாகும். தொடர்ந்து வீட்டிலும் தமிழ் பேசி வருவாராயின் அடுத்த நாடகத்தில் ஒரு ஆண்பாகத்தை இவர் அருமையாக நடிக்கவல்லவர்.

இயமனாக நடிக்கும் கனக மணி தில்லையம்பலத்தைப் பற்றிக் குறிப்பாகக் கூறுவதற்கு எதுவுமில்லை.

நாடகத்தில்வரும் இரு நடனங்களும் நல்லாயிருக்கின்றன. பின்னிருந்து பாடுபவர்களின் குரல்கள் மெச்சத்தக்கவை. பாட்டுக்கள் யாவும் நன்று. பக்கவாத்தியத்தால் செய்யப்படும் பின்னணி ஒலிகள் நாடகத்திற்கு உணர்ச்சியூட்டுகின்றன.

—கிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோல் வழுக்கில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் அதற்கு பின்னும் திருபெரேரா வுடன் தான் வெளியே சென்றிருப்பதாகச் சொன்னார்.

சிலவேளைகளில் முதல் எதிரி வந்து தன்னைக் கூட்டிப்போனதாகவும், வேறு வேளைகளில் தான் சென்று அவரைக் கூட்டிச் சென்றதாகவும் சொன்னார்.

படங்கள் சில காட்டப்பட்டபோது அவை முதல் எதிரியால்எடுக்கப்பட்டவை என்று திருமதி தேனுவார அறிவித்தார்.

அவரிடம் ஒரு ஒட்டமட்டிக் கமரா இருந்தது. அவர்கள் படுக்கையில் இருக்கும் போது அவற்றில் ஒரு படம் எடுக்கப்பட்டது. படம் எடுக்கப்பட்டபோது அது தனக்குத் தெரியாது என்று சாட்சி கூறினார்.

பொலீஸ் அந்தப்படத்தை காட்டுமட்டும் அதைதான் பார்த்ததில்லை என்றும் அது பொலனறுவை வாடி வீட்டிற் தானும் முதல் எதிரியும் போயிருந்த சமயம் எடுக்கப்பட்டதாகவும் தொடர்ந்து கூறினார். இன்னுமொரு படம் காட்டப்பட்டபோது, அதில் தானும் முதல் எதிரியும் இருப்பதாக அடையாளம் தெரிவித்துவிட்டு பொலநறுவையில் — தண்ணீரில் எடுக்கப்பட்ட படம் என்று தெரிவித்தார்.

ஒரு கைப் பை காட்டப்பட்டபோது அது முதல் எதிரியுடையதென்று திருமதி தேனுவரா கூறினார். அதில் முதல் எதிரி - திருமதி தேனுவாராவின் சிறிய புகைப்படம் இருந்தது.

1954ல் தமது கணவன் ரட்னம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இருதயக் கோளாறுல் அவர் பீடிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் முதல் எதிரியை தாம் அடிக்கடி சந்தித்ததாக திருமதி தேனுவரா கூறினர். ஒவ்வொரு மாலையிலும் முதல் எதிரியைச் சந்தித்ததாகவும் இரவுச் சாப்பாட்டை அவருடனேயே எடுத்ததாகவும் தெரிவித்தார். முதல் எதிரி தமது கணவனை ஆஸ்பத்திரியிலோ அல்லது வீட்டுக்கு வந்த பின்கூட வந்து பார்க்கவில்லை என்று தெரிவித்தார்.

தாம் புதிய வீடுகட்டி குடியேறியது சம்பந்தமான விபரங்களைத் தெரிவித்த பின் தாம் கப்டனுடன் சினேகமாக இருந்தாகவும் கூறினர்.

துப்பாக்கிச் சம்பவத்தின் பிறகு என்ன நடந்திருக்கக் கூடும் என்பதை தமது கணவர் கூறினர் என்றும், அது அவரது புரக்டர் சகோதரரின் வேலையாக இருக்கலாம் என்று அவர் தெரிவித்தாரென்றும் திருமதி தேனுவாரா சொன்னர்.

இதன்பின் சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

பெண்களுக்கு ஓர் மகா சஞ்சீவி

கெர்ப்பத்தைத் தடுக்கும் ஆறுவித நோய்களையும் அகற்றி, சூதக வயிற்று வலி, வாய்வு, தலைவலி, மயக்கம், ஏப்பம், படபடப்பு, திரேகம் பூரித்தல், குத்தல், உழைவு, சோம்பல், ஆயாசம், பல வீனம், உஷ்ணம், விலக்கம் மிகுதியாகப் போகுதல், கொஞ்சம் கண்டு மறைதல் போன்ற சகல வியாதிகளையும் போக்கவல்லது

கெர்ப்பக்கோள் நிவாரணி

சிறியது—ரூ. 3-75.
பெரிய புட்டி விலை ரூ. 7-00
வி.பி.பி. செலவு வேறு.

சென்ற் மேரி வைத்தியசாலை,
201, செட்டியார் தெரு,
கொழும்பு.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. வழக்கிலே எதிர்பாராத மாற்றம், உண்மையான கொலையாளி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டான். அவன் யாருமல்ல. சுரங்க முதலாளியின் ஒரே மகன் தான் தன் தந்தையையும், சறுக்கிவிழுந்த மருதையின் மனைவியையும் ஆலிங்கத்தின் போது சாளர வழியாகக் குறிபார்த்துச் சுட்டான் என்பது ருசுப்படுத்தப்பட்டுவிட்டது. அவனே குற்றத்தையும் ஒப்புக்கொண்டு விட்டான்''

''ஏனப்பா, அவன் தந்தை அவனுக்கு அப்படி என்ன செய்தார்?''

''மாலா, தன் சொந்தக் கணவன் பரத்தையர் இன்பத்தில் மகிழ்ந்து, குடும்ப பாரத்தை அலட்சியஞ் செய்தால் எந்தப் பெண்தான் பார்த்துக்கொண்டு மானத்துடன் உயிர்வாழ முடியும்? சுரங்க முதலாளியின் மனைவி நல்லவள். தன் கணவனின் நடத்தையைக் கண்டித்திருக்கிறாள். இந்தக் கடையர் செய்கையைக் கைவிடும்படி மன்றாடியிருக்கிறாள். கடைசியில் அவமானம் தாங்காது தூக்குக் கயிற்றில் சுருக்குப் போட்டுத் தற்கொலை செய்துவிட்டாள். தன் கண் மணிபோன்ற மூன்று குழந்தைகளையும் இந்த வஞ்சக உலகில் விட்டுப் பிரியுமுன் தன் தற்கொலையின் காரணத்தை ஒரு கடிதத்தில் எழுதி வைத்துவிட்டு இறந்தாள்.

''மகன் வந்தான். கண்டான் அன்னையின் கைச்சாத்திட்ட அன்புக் கடிதத்தை. பொங்கினான் சிங்கம்போல. அன்னைமூட்டிய தெய்வ மணிக்கையின் ஆணைகண்டதும் அனலைக் கக்கும் எரிமலையானான். ஒரு துப்பாக்கியால் அன்னைக்குச் செய்த அநீதியை அழித்துவிட்டான்.

''துப்பாக்கிக் குண்டு பாய்ந்தே இருவரும் இறந்திருக்கவேண்டும் என்று பிரேதங்களைப் பரிசோதித்த டாக்டர் அறிக்கை விடுத்தார். மருதைக்கு விடுதலை.

''மாலா! நான்தான் அந்த மருதை. இப்படியாகச் சோகப் புயலில் சிக்கிச் சுழன்று திகைவுற்றவன் மது அருந்தி மகிழ்வதில் தவறுண்டா?'' என்று தாடியைத் தடவிக் கொண்டே அந்தப் பெரியவர் மகளைக் கேட்டார்.

மாலாவிடமிருந்து ஒருசிறு துளி கண்ணீரும் கவலையின் ரேகை நெளிந்தோடும் ஒரு புன்னகையும் மட்டும் பதிலாக வந்தன.

[யாவும் கற்பனை]

நுவரேலியா ரேஸ்

50 சத சுவீப்

ஏப்ரல்

7 ஆ, 16 ஆ, 23 ஆ, 30 ஆ

ஆக இன்னும் 4 ரேஸ்கள் மட்டும் ஞாபகமிருக்கட்டும்

தாங்கள் அதிர்ஷ்டசாலியாக இருந்தால் லட்சாதிபதியாக முடியாதா?

ஆகவேண்டுமானால்

தேவகி ஸ்டோர்ஸ்க்கு நூரேலியா ரேஸுக்குரிய உங்கள் அதிர்ஷ்டமுள்ள டிக்கட்டுகளுக்கு வழக்கம்போல் எழுதுங்கள். பிந்தினால் முடிந்துவிடும்.

தபாலில் பெற

தேவையான டிக்கட்டின் தொகைக்கு போஸ்டல் ஆர்டருடன் சாதாரண தபாலுக்கு 10 சத முத்திரை அல்லது பதிவு தபாலுக்கு 35 சத முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

சிரமக்கட்டணமில்லை

பிரசித்திபெற்ற 2-/ ரூ. காலிஜிம்காணா சுவீப் டிக்கட்டுகள் எழுத, தெளிவான விலாசம் அதிர்ஷ்டப் பெயருடன் முன் பணமனுப்பி லிஸ்ற் நம்பர் தபால் கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம்.

ஆடர்களுக்கு.

தேவகி ஸ்டோர்ஸ்,

சுவீப் டிக்கட் ஏஜண்ட்
154, செக்கடித் தெரு, கொழும்பு.

வெற்றிகரமான 7வது வாரம்!

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

காலை 10மணி, பி.ப. 2மணி, மாலை 6, இரவு 9-30மணி

சுரங்கனி (சிங்களம்)

செல்லமஹால் பிளாஸா

காலை 10-00, பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30

பகவான், கீதாபாலி நடித்த

நல்ல பிள்ளை (தமிழ்)

சென்ட்ரல்

4வது வெற்றி வாரம்!

★

(கொழும்பு)

இன்று காலை 10-00 மணிக்கும், மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்
நாளை மாலை 6-00 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும்

வடுவூராரின் திகில் நிறைந்த அதியற்புதமான துப்பறியும் நாவல்!

அவள் வீட்டிலிருந்து வெளியேறும்போது அவன் என்ன நினைத்தான்?

அவன் உள்ளத்தில் சந்தேகப் புயல் கடுமையாக வீசிற்று.

அந்தப் பயங்கர உண்மை என்ன?

கே. ஆர். ராமசாமி, லலிதா, ராகினி, சாரங்கபாணி, ராமச்சந்திரன் நடித்த



கஸ்த்தூரி பிலிம்ஸ்

மோகனா

நடனம்: பத்மினி & குசலகுமாரி

இசை: சுப்பராமன்

சங்கீதம்: பாண்டுரங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளம்:

சிலிகன்

(படிகதாது)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சிலிகனில் (Silicon) பல வித இனங்களை சென்ற வாரம் அறிந்தோம். அவைகளின் தன்மைகளையும் அறிவது அவசியமாகும். ஓபல் (Opal) ஒரு வகையான கல்லை மரகதம் என்று நாம் கூறுவோம். மரகதம் (Opal) நீலம், பச்சை இரு வர்ணங்களுடன் மஞ்சள்நிறத்தையும் காட்ட வல்லது. உருண்டையான நீரோடிய மரகதம், திருப்பிப் பார்க்கப் பார்க்க பல விதமான நிற ஒளிகளையும் காட்ட வல்லது. ஆனல் இந்த ஒளியழகை விஞ்ஞான மூலம் நன்முக எவரும் ஆராயவில்லை. ஓபல் என்ற பெயரை கனிஜப் பொருள் நிபுணர்கள் பல்வேறு தரப்பட்ட கற்களைக் குறிப்பிட உபயோகிக்கின்றனர். இக்கற்கள் யாவும் சிலிகா (Silica) என்னும் பொருளானவை. இக்கற்கள் பார்வைக்கு படிவைக் கற்களைப் போல் உருவமின்றி கனம் குறைந்திருக்கும். சிலிகாவில் ட்ரைடிமைட் (Tridymite) என்றும் கிரிஷ்டோபாலைட் (Crystobalite) என்றும் இரு வகையான படிவக் கற்கள் உண்டு. அவை சுத்தமாகக் கிடைப்பது கஷ்டமாகும். இவைகளைப்போல் ஹயாலைட் (Hyalite) என்னும் படிவக் கல்லையும் பார்த்தால் அது தண்ணீர் மரகதம்போல் காட்சிதரும். மரகதத்தில் மொழுகு மரகதம், (Waxy Opal) நெருப்பு மரகதம் (Fire Opal), தண்ணீர் மரகதம் (Water Opal) எனப் பலவகையுண்டு. மரகதத்தில் உண்டாகும் பற்பல துல்லியமான தனியலை நீளமான நிறங்களே (Monochromatic) மரகதத்திற்கு ஒளியையும் அழகையும் கொடுக்கின்றன. நவரத்தினங்கள் என்ற உயர்ந்த ரகக் கற்கள் பெரும்பாலும் சிலிகனிலான வையேயாகும்.

நம் வீடுகளில் பெரும்பாலும் பயன்படும் அலுமினியப் பாத்திரங்கள் அதிசய உலோகமான அலுமினியத்திலை ஆக்கப்பட்டவை. அலுமினியம் களிமண் சத்து என்பதை அறிந்து ஆச்சரியப்படாதீர்கள். பூமியில் 'அலுமினியம் சிலிகேட்' (AluminiumSilicate) செறிந்து விளங்குகின்றன. அலுமினியம் பூமியில் அநேக இடங்களில்லிலிகன், பிராணவாயு இவற்றுடன் கலந்து அலுமினிய சிலிகேட் அல்லது களிமண் சேர்க்கைப் பொருளாகவே கிடைக்கிறது. அலுமினியம் முழுவதும் பாக்சைட் என்னும் தாதுவிலிருந்தே மின்சார சக்தி மூலம் எடுக்கப்படுகிறது. அலுமினியம் வெறும் சமையல் பாத்திரங்களுக்கு மட்டுமல்லாமல், விமானங்களிலிருந்து சிறு மின்சாரப் பொறிகள்வரை உபயோகிக்கப்படுகிறது. இலேசான அலுமினிய உலோகம் எடையில் அநேக உலோகங்களை விடப் பலமானது. அலுமினியத்தைவிட அத்துடன் மற்றச் சில உலோகங்களைக் கலந்த கலவை உலோகங்கள் (Alloy) உபயோகம் அதிகமாகிறது. தாமிரமும் அலுமினியமும் கலந்த உலோகக் கலவை பொதுவான உபயோகங்களுக்கெல்லாம் பயன்படுகின்றன. மக்னீசியமும், அலுமினியமும் கலந்த மக்னேலியம் (Magnaleuim) என்னும் உலோகக் கலவை எஃகு இரும்பைவிட பலமுள்ளது. இந்த உலோகம், விமானம், கப்பல் முதலியன கட்டப் பயன்படுகின்றன. அலுமினியத்தைக் களிமண்ணிலிருந்து பிரித்தெடுக்கச் சுலபமான வழி கண்டால் இரும்பு உபயோகம் குறைந்து அலுமினியக் காலம் (Aluminium age) சீக்கிரமே வந்துவிடும் என்று சொன்னல் மிகையாகாது.

"கனகவாசன்"

நடைச்சித்திரம்

அவர்.....?

கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இரத்தினபுரி பஸ்ஸுக்காக வெயிலையும் பொருட்படுத்தாது ஒரு 'கியூ' முடிவில்லாததுபோல் நீண்டு போய்க் கொண்டிருந்தது. ஒரு இடத்தில் "உஷ்.....அப்பாடா!..... அடேயப்பா!" என்ற வண்ணம் வெயிலின் உக்கிரத்தை நினைத்துப் புழுங்கிக்கொண்டே அடிக்கொருதரம் நெற்றியில் வழிந்த வியர்வையை துடைத்துவிட்டவாறு நின்றிருந்தார் சின்னதம்பி. அவர் பக்கத்தில் ஒருவர். அவரைப் பார்த்தால் தமிழர் போல் தோற்றிற்று. உடுப்பு ஒரே 'வெள்ளை' மயம். வேறெது? 'ஆபாரம் வேஷ்டி' தான்!

சின்னதம்பிக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி. பேச்சுத் துணைக்கு நல்ல ஆள் ஒருவர் கிடைத்துவிட்டார் என்று தான்! கொஞ்ச நேரம் அவரையே பார்த்தார். பிறகு, "என்னடா இது.....! இந்த வெயில் தொல்லை பெருந் தொல்லையாக இருக்கிறதே.....! மனிதன் வெளியில் தலையை எட்டிக்கூட பார்க்க முடியவில்லை..... மோசம், மோசம்.....!" சின்னதம்பி அவரோடு பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தார்..... "சரி, வெயில்தான் இப்படி இருக்கிறது என்றுல் இந்த பஸ் காரர்கள் தொல்லை அதைவிடப் பெரிய தொல்லை. போதுமான பஸ்களைப் போட்டு ஜன நெருக்கடியை

எம். எம். மக்கீன்

குறைக்கிறுனென்றுல் கிடையாது. என்ன நான் சொல்கிறது". — சின்னதம்பி அவரை ஏறிட்டுப் பார்த்தார்.

அந்த 'அவர்' "உம்" என்று ஒரு உம்மை தலையை 'பிரி'யாக ஆட்டிப் போட்டார்.

சின்னதம்பி திருப்திபட்டவர்போல் "இப்பொழுது பாருங்கள்! நான் இரத்தினபுரியிலே இன்றைக்கு சரியாக 4 மணிக்கு நின்முக வேணும். இப்போ நிற்கிற 'கியூ'வைப்பார்த்தால் இரவு எட்டு மணிக்குக்கூடப் போய் சேரமாட்டேன் போலத் தெரிகிறது. என்னுங்க அப்படித்தானே!"— சின்னதம்பி தனது 'சொற் பொழிவு'க்கு கொஞ்சம் ஓய்வு கொடுப்பது போல அந்த 'அவ'ரைப் பார்த்தார்.

"உம்!" — திரும்பவும் அந்த 'அவ'ரிடமிருந்துவந்த பதில்!

"அப்புறம் கேளுங்கள், பஸ் நெருக்கடிதான் இப்படியிருக்கிறது என்றுல் 'கியூ'வில் நிற்கிறவர்களுக்கு ஒரு கொட்டகையாவது போடக்கூடாதா?..... அவர்களெல்லாம் நம்மை மனுஷனுய் நினைத்தால் தானே!....."— வெயிலைப்பற்றி துவங்கிய பேச்சு எங்கேயோ போய் விட்டதை சின்னதம்பி உணர்ந்திருந்தாரோ என்னவோ அவரை ஏறிட்டுப் பார்க்கமட்டும் தவறவில்லை! இதற்காவது அந்த மனுஷன் பதிலுக்கு ஏதாவது சொல்ல வேண்டாமா? பழையபடி அதே 'உம்'தான். ஆனல் இந்த முறை சத்தம் கொஞ்சம் பெரிதாக இருந்தது! சின்னதம்பிக்கோ இப்பொழுது உற்சாகம் மட்டுப்பட்டது. சின்னதம்பி அந்த 'அவ'ரை மேலும் கீழுமாகப் பார்த்தார். "ஆமாம், நீங்கள் எதுவரையில் போகிறீர்கள்?" பதில் இல்லை! அந்த 'அவர்' முகத்தை சுளித்துக்கொண்டு ஒரு பக்கமாய் திரும்பிக்கொண்டார்! "நீங்கள் எதுவரையில் போகிறீர்கள்?"— சின்னதம்பியின் பொறுமையின்மை இம்முறை நன்முக விளங்கியது. "உம்...உம்...உம்!.....மட்ட தெமல தன்னநே!"—மடமடவென்று 'அவ'ரிடமிருந்து புறப்பட்டது வார்த்தைகள்!.....

"நாசமாய்ப் போச்சு! இத்தனை நேரமும் பேசிக்கொண்டிருந்தது தமிழ் தெரியாத சிங்களவரிடத்திலா?"-சின்னதம்பி அசந்து போனர்.

சின்னத்தம்பியும் அந்த 'அவ'ரையும் பார்க்க சகிக்கவில்லை!

"ஆழ்ந்து சிந்தித்து எதையும் அறிந்து செய்பவனுக நட. சாதாரணசமயங்களில் மக்குவாக நடந்து காட்டாதே! ஏனென்றுல் முக்கியமான சமயங்களில் உன்னையறியாமலே மக்காகிவிடுவாய். பார்ப்பவர்களும் கேட்பவர்களும் 'மடையன்' எனறு உடனே சொல்லிவிடுவார்கள்!"

—இந்தக் காலத்து பயலொருவனின் 'அனுபவ' மொழி.



அணுக்குண்டா! என்று மலைத்துவிடாதீர். அது ஒன்றுமில்லை. போர் விமானங்கள் எண்ணெய் டாங்கி இது பிளாஸ்டிக்கில் செய்யப்பட்டது.



பி. ஓ. எல். காமன்வெல்த் ஆகாய விமானப் போக்குவரத்தில் பாவிப்பதற்காக உற்பத்தி செய்யப்பட்ட புதிய 'பிரிட்டானியா வானூர்தி' ஒன்று இது. இதை [illegible] பார்வையிடுகிறார்.

என்னைக்கோவை

முதல் விருந்து: கல்வி

★ தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு

—திருவள்ளுவர்

★ வாழ்க்கையின் பயிர்ச்சியே கல்வியாகும்

—வில்மொட்

★ ஒரு மனிதன் கல்வியைப் பெருத அளவிலே அவன் ஒரு மனிதன் என்பதற்காய சரியான தன்மையைப் பெற்றவனுகான் —எச். மேனன்

★ ஒரு "மாபிள்" கல்லுக்கு ஓவியம் எப்படியோ, கல்வி மனித மனதிற்கு—உயிர்க்கு. நம்பகமாக இருளில் அமைந்து மறைந்து கிடக்கும் தத்துவ ஞானிகளை, மத ஞானிகளை; தேசத் தலைவர்களை, புத்திவானர்களை, மற்றும் நல்லவர்களை அல்லது பெரியவர்களை வெளிப்படுத்தி வெளியுலகுக்களிக்கிறது கல்வி —அடிஷன்

★ கல்வியின் பெருமுடிவு மன நலத்திலும் பார்க்க ஒழுக்கமுடைமையும் மற்றேரின் அபிப்பிராயத்தால் மனதை நிறப்புவதிலும் தனது சொந்த வல்லமைகளைத் தானே பாவிக்க பயிர்ச்சியளிப்பதுமாகும்

—ரைரன் எட்வர்ட்

★ கல்வியின் பலாபலனுகிறது: எண்ணத்தை சிந்திப்பது என்பதைவிட எவ்விதம் சிந்திப்பது என்று எங்கட்குப் போதிப்பது மனதைத் திருத்துவது மூலம் மற்ற மனிதரின் எண்ணங்களைக் கொண்டு ஞாபகத்தை நிறையாது நாமே சிந்திக்கும் திறனைப் பெறுவதுமாகும் —பியட்டீ

★ கல்வி என்பதன் பொருள் மக்களறியாததை அறிவிப்பதாகாது; அதன்பொருள் அவர்கள் ஒழுங்காகமுறைப்படி ஒழுகச் செய்வதாகும் —ரஸ்கின்

★ கல்வி நிலையங்கள் மக்களைப் பயிற்றுவிப்பதற்கான மிக மிக சுத்தமான நிலையங்களாக அமையும். அவை இந்த நிலையை அடைந்தால் ஆரம்ப காலத்தை தவிர அவை விஞ்ஞான ஆராய்ச்சியில் இருப்பிடமாக அமையாது —வால்ட்டர் பி. பிட்கின்

★ முதலில் நாம் வேண்டுவது இளைஞர் நன்முக அறிய கதைக்க, வாசிக்க மேலும் எழுத தம் தாய்ப்பாஷையில் புலமையுள்ளவராக இருக்கவேண்டுமென்பதே.

—எச். ஜி. வெல்ஸ்

★ கல்வியின் முழு நோக்கமாகிறது; குணப்பண்பை அளிப்பதாகும். —ஓஸியா

★ சோம்பேறிகள் மற்றவரிலும் இலகுவில் கஷ்டத்தில் ஆள்வர், மிகுதமாக ஏனென்றுல் அவர்கள் வேண்டுவதும், தேவைப்படுவதும், கைக்கு அதிக வேலையும், குறைந்த மூளைவேலை—அறிவுமாகும். ஆனல் அவர்கள் அவைகளைப் பெற்றுக் கொள்வதில்லை.

—ஈ. எச். ஜோன்ஸன்

★ அங்கே உண்டு கல்வியின் ஒரே ஒரு நோக்கம், அதாகிறது—வல்லமைக்கு கல்வி ஆவது.

டாக்டர் அல்பிரட் அட்லர்

—திரட்டியவர்: எம். எஸ். எம். கரீம்

கழகச் செய்திகள்

பொருளாதார நெருக்கடி முற்றும்போது 150 லட்சம் ரூபா கோட்டி ஆடம்பரச் செலவு ஏன்?

நல்லூர் தமிழரசு வாலிப முன்னணி கூட்டம் நிறைவேற்றிய தீர்மானம்

"பௌத்த ஜெயந்திக் கொண்டாட்டத்திற்கென அரசாங்கம் 150 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பது ஆடம்பரச் செலவுகளுக்கு மேலும் ஊக்கமளிப்பதாயிருக்கிறது. உற்பத்திப் பொருட்களின் விலைவாசிகள் வீழ்ச்சியுற்று பெரிய பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது, இது போன்ற ஆடம்பரச் செலவுகளைச் செய்வது புத்திசாலித்தனமும் விவேகமுமாகாது" இவ்வாறு நல்லூர் தமிழரசு வாலிபர் முன்னணிக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

நல்லூர் தமிழரசு வாலிப முன்னணியின் பொதுக் கூட்டமொன்று சென்ற 13-3-55ல் செங்குந்த சைவ ஆங்கில வித்தியாசாலையில் தலைவர் திரு கா. சபாபதியின் தலைமையில் கூடியது. கூட்டத்தில் தொடர்ந்த பல நிகழ்ச்சிகளிடையே பௌத்த ஜெயந்திக் கொண்டாட்டத்தைப் பற்றியும் அதன் அனுவசிய செலவைப் பற்றியும் திரு மு. ஆலாலசுந்தரம் விரிவாகப் பேசினார். பின்னர் அரசாங்கம் ஆடம்பரச் செலவுகளுக்காக பல லட்சம் ரூபாய் செலவழிப்பதை கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேறியது.

வினயகர் முன்னணி வாலிபர் சங்கம்

வி. மு. வா. சங்க பொதுக் கூட்டம் சென்ற 19-3-55ல் திரு இ. மகாலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் கூடியது. புது வருட உத்தியோகஸ்தர் தெரிவில் கீழ் காணப்படுபவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்:

போஷகர் திரு த. செல்வ வினயகம், தலைவர்: திரு இ. மகாலிங்கம், உபதலைவர்: திரு செ. ஸ்ரனிஸ்லஸ், கௌரவ காரியதரிசி திரு. அ. சீனித்தம்பி, உப காரியதரிசி: திரு கோ. சிவலிங்கம், தனாதிகாரி திரு ச. தெட்சணமூர்த்தி, உபதனாதிகாரி திரு செ. கருணானந்தசாமி, வாசிகசாலை அதிபர்: திரு. ச. நாராயணசாமி, வாசிக சாலை உப அதிபர்: திரு. க. பாலசிங்கம், கல்வி அதிபர், திரு அ. சீனித்தம்பி. 9 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

திக்கரை வாசிகசாலை

காரை நகர் திக்கரை வாசிகசாலையின் வருடாந்தக் கூட்டம் சென்ற 18-3-55ல் ஆசிரியர் திரு வே. சண்முகம் தலைமையின்கீழ் வாசிக சாலை முன்றிலில் நடைபெற்றது. தலைவர் தமது முகவுரையில் ஒரு சமூகத்திற்கு வாசிகசாலையினது இன்றியமையாமைபற்றி விரிவாகப் பேசினார். முக்கியமாகப் பாடசாலைக் கல்வி அறிவில்லாத வயோதிபர்களுக்கு இது ஓர் சிறந்த ஸ்தாபனமாக விளங்குகிறதெனவும் எடுத்துரைத்தார். அதன்பின் நிகழ் வருட உத்தியோகஸ்தர்களின் தெரிவு நடைபெற்றது.

போஷகர்: திரு ஆ. ச. கந்தையா, தலைவர்: திரு. வே. சண்முகம், உபதலைவர்: திரு சி. ஆ. பாலசுப்பிரமணியம், காரியதரிசி: திரு வே. காசிநாதன், உபகாரியதரிசி: ஐ. சோமாஸ்கந்தமூர்த்தி, தனாதிகாரி: திரு க. தம்பையா, உபதனாதிகாரி: திரு ஆ. தர்மலிங்கம். அத்துடன் ஒன்பது நபரைக் கொண்ட ஓர் நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இ. தி. மு. க. இரத்தினபுரி (கிளை)

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் இரத்தினபுரி கிளையின் செயற்குழு கூட்டம் 19-3-55ல் தோழர் அண்ணாதாசன் தலைமையில் கூடியது. அவ்வமயம் உறுப்பினர் சேர்ப்பது, அடுத்த செயற் குழுவில் சென்ற ஆண்டு கணக்கை சரிபார்த்து அறிக்கை கொடுக்கும் படி கணக்காளரை கேட்டுக் கொள்வது விரைவில் கழக பணிமனைக்கு இடம் தேடுவது முதலிய விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன. மற்றும் தோழர் கண்ணதாசன் அவர்களின் தந்தையார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

லஜ்னது அன்வாரில் கபூரியா.

லஜ்னது அன்வாரில் கபூரியாவின் 1954-55 வது வருட இறுதிப் பொதுக் கூட்டம் சென்ற 18-3-55 ல் ஜனப் ஏ. எம். முஹமத் லெப்பை தலைமையின் கீழ் கூடிற்று.

தலைவர் முன்னுரைக்குப் பின் காரியதரிசி டபிளியு. ஏ. எம். இப்ரூஹீம், நூல் நிலைய நிர்வாகிகளின் ஒருவரான எஸ். யூசிம், உப பொக்கிஷாதிபர் எம். ஐ. எம். மஹ்மூத், சங்கவிற்பனையாளர் ஏ. எம். முஹித்தீன், கணக்குப் பரிசோதகர்களில் ஒருவரான. என். எம். எம். ஜனது, ஆகியோர்கள் தங்கள் அறிக்கைகளை வாசித்தார்கள்.

பின் தஹ்ஸீல் வகுப்பு மாணவர்களும் வேறு சிலரும் சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் பின்னுரைக்குபின் உபகாரியதரிசி ஏ. எம். சலீம் நன்றி செலுத்தினர்.

மாணவ மன்றம்

அட்டாளைச்சேனை சாதனை பாடசாலை மாணவ மன்றத்தின்முதல்கூட்டம்18-3-55ல பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமானது. அவ்வமயம் மேற்படி மன்றத்துக்கு ஏ. எம். பழுலூன் தலைவராகவும் எஸ். வை. எம். அப்துல் ஹக், பி. எம். கபூர் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், ஏ. எம். ஜமால்தீன் தனாதிகாரியாகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இலங்கை தோட்ட ஆசிரியர் யூனியன்

கம்பளை அரசாங்க தமிழ்ப் பாடசாலையில், இலங்கை தோட்டப்பாடசாலை ஆசிரியர் யூனியன் நிர்வாகசபைக் கூட்டம் சென்ற 12-3-55 ல் தலைவர் திரு டி. மோசஸ் தலைமையின்கீழ் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் தற்சமயம் தோட்ட ஆசிரியர்களின் நிலைமையையும் முன்னேற்றத்திற்கு இருக்கிற தடைகளையும் தெளிவாக எடுத்துக் கூறினார்.

பின் திரு ஜே. தேவாசீர்வாதம் காரியதரிசியாகவும், திரு டி. இ. துரைராஜ் தனாதிகாரியாகவும் நியமிக்கப் பட்டனர்.

முக்கூட்டு யூனியன்

அன்றுபகல் 2மணிக்கு முக்கூட்டு யூனியன் கூடவும் திரு டி. மோசஸ் தலைமையில் கூட்டம்நடைபெற்றது. தலைவர் விஷயங்களைத் தெளிவு படுத்திய பின் அவசியமான சட்டதிட்டங்களை பரிசீலனை செய்து சட்டமாக்கப்பட்டது. உடன் மகஜர் தயார் செய்து, முக்கூட்டு யூனியன்மூலம் அதிகாரிகளுக்கு டம் தூதுகோஷ்டி போய் நிலைமைகளை விளக்கி, தோட்ட ஆசிரியர்களுக்கு நன்மைபுரியவும் தீர்மானிக்கப்பட்டது. திரு பொ. ராசையா அவர்களும் திரு டி. சாமுவேல் டேவிட் அவர்களும் முக்கூட்டு யூனியனை சரியான முறையில் அமைக்க அதிகபாடுபட்டனர். எல்லா தோட்ட ஆசிரியர்களும் உடன் யூனியனில் சேர்ந்து கொள்ள வேண்டுமென்றும் யூனியனுல் தோட்ட ஆசிரியர்கள் அனைவரும் நன்மை பெற யூனியன் உத்தியோகஸ்தர் ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. தலைவர் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

பாராட்டுக் கூட்டம்

அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான தோழர் வி. கே. சாமி தாயகம் செல்வதைக் குறித்து கடந்த 13-3-55ல் கொள்ளுப்பிட்டியில் திரு வை. மு. அழகேசன் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் வி. கே. சாமி, மன்ற ஆரம்பமுதல் செயற்குழு உறுப்பினராக இருந்து அவர் மன்றத்திற்கு ஆற்றிய அரிய பணியினை பாராட்டி தோழர்களான எம். உமர், எம். எஸ். குமார் எஸ். எஸ். சுப்பையா எஸ். நயினர் மாணவர்ஜெயசீலன் வேலய்யா, தி. பரமசிவம், தமிழ்மாறன் ஆகியோர் பேசியபின் தோழர் வி. கே. சாமி, தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்து பேசிய பின் செயலாளர் கே. கே. தமிழ் நாதன் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

ஜனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம்

கல்லடி உப்போடை ஜனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தபாற் கந்தோர் தலைவர் திரு க. உ. வே. கதிர்காமத் தம்பி தலைமைபின்கீழ் ஆரம்பமானது.

காரியதரிசியால் வருடாந்த வரவு செலவுக்கணக்குகள் வாசிக்கப்பட்டதும், சபை அதைப் பரிசீலனை செய்து அங்கீகரித்தது.

1955ம் ஆண்டு சித்திரை மாதம் நடக்கவிருக்கும் மட்டக்களப்புப் பகுதி ஜனசமூக நிலையங்களின் ஆண்டு விழாவில் பங்குபற்றுவது பற்றி ஆலோசனை நடந்தது. முடிவில் நடப்பு வருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு க. உ. வே. கதிர்காமத் தம்பி உபதலைவர்: திரு க. முத்துப்பிள்ளை காரியதரிசி: திரு சே. அம்பிகாபதி உபகாரியதரிசி: திரு ஆர். ராஜதுரை தனாதிகாரி: திரு சீ. காசுபதிப்பிள்ளை 7 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

இ. தி. மு. க. பொரளை கிளை

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் பொரளைக் கிளையின் சொற் பயிற்சிக் கூட்டம் சென்ற 19-3-55ல் தோழர் எஸ். பி. கதிரேசன் தலைமையில் நடைபெற்றது. சொற்பயிற்சியில் கீழ்க் காணும் தோழர்கள் பங்கு பற்றினர். தோழர்கள் எஸ். பொன்னையா, ஏ. எஸ். சண்முகவேல், கே. பி. முத்து சோமநாதன், கே. காயம்பு ஞா. சி. அன்பழகன் மற்றும் பல தோழர்களும் பேசினர்கள். இறுதியாக தலைவர் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

அறிவுக்கு ஆலயம் அமைத்தனர்

கதிர்காமதொண்டர் சபையின் அரிய தொண்டு

"கடவுளுக்கு கல்லினுல் கோவில் அமைக்கும் நாம் கோவிலின் அருகில் கடவுளின் தன்மையாகிய அறிவுக்கும் கோவில் அமைத்தல் வேண்டும்" என்று அழகாகக் கூறுகின்றனர் கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையினர், தமது 29-ம் ஆண்டறிக்கையிலே.

இதுகாறும் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களுக்கு தொண்டு புரிந்து வந்த மேற்படி சபையினர் கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் கொழும்பு தொண்டர் வித்தியாலயம் என்று ஒரு பாடசாலையையும் மருதானை கப்பித்தாவத்தையில் கைலாசநாதர் பால செல்வ விநாயகர் ஆலயங்களுக்கு கருகாமையில் ஆரம்பித்தனர். இந்தப் பாடசாலையில் தற்போது 250 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள் என்றும் ஆறு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர் என்றும் தெரிகிறது. மடாலயமே பாடசாலையாக உபயோகிக்கப்படுவதால் போதிய இடவசதி இல்லாமல் இருக்கிறதென்றும்புதிய கட்டடங்கள் அமைக்க 2 லட்ச ரூபாய் வேண்டுமென்றும் இதற்கு யாவரும் பொருளுதவி புரிய வேண்டும் என்றும் நிர்வாக சபையினர் கோருகின்றனர்.

ஒரு வருட காலத்துக்குள் இப்பாடசாலையை பிரபல வர்த்தகர் திரு கே. மதியாபரணம் அவர்கள் தலைமையில் இவ்வளவு அபிவிருத்தி செய்த மேற்படி தொண்டர் சபையினர் தமிழ்ப் பேசும் மக்களின் பாராட்டலுக்குரியவர்களே. ஏனென்றால் கொழும்புப்பாடசாலைகளில் தமிழ்க் கல்வி புறக்கணிக்கப்பட்டுவரும் இந்த நேரத்தில் இப்படிப் புதுப் புதுத் தமிழ் பாடசாலைகளைத் தோற்றுவிப்பது தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் செய்யும் பெருந் தொண்டாகும். இந்தக் கல்வி நிலையத்திற்கு தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரும் தாராளமாக அள்ளிக் கொடுக்க வேண்டும். நிதிஅனுப்ப வேண்டிய விலாசம், தனாதிகாரி திரு ஆர். சபாநாயகம், நாஷனல் வங்கி, கொழும்பு.

கண்ணும் குருடு!...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலன் கல்வி கற்றாள். பேசினால் எப்படி இருக்கும் என்பதே அப்போது ஹெலனுக்கு தெரியாது. திரும்பத் திரும்ப கஷ்டப்பட்டு சொல்லிப் பார்த்து ஒவ்வொரு எழுத்தாகக் கற்றுக்கொண்டாள். அப்புறம் அவளுக்கு பேச வந்துவிட்டது.

காலேஜ் போனாள்!

ஆங்கிலம் மட்டும் அல்லாமல் லத்தீன், பிரெஞ்சு, ஜெர்மனிபோன்ற பாஷைகளையும் கற்றுக்கொண்டாள்.

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் சேர்ந்து 8 வருஷம் படித்தாள். ஹெலனுடன் வாத்தியாரம்மாள் சுலிவனும் பள்ளிக்கூடத்துக்கு போவாள். ஹெலனின் கையில் எழுதி பாடங்களை வாத்தியாரம்மாள் விளங்க வைப்பாள். இம்மாதிரி படித்து 1904ம் வருஷம் ஹெலன் பட்டம் வாங்கினாள்?

டைப் அடிப்பாள்

ஹெலன் நிறைய புத்தகங்கள் எழுதியிருக்கிறாள். தன்னுடைய வாழ்க்கையைப்பற்றியும் எழுதி இருக்கிறாள்.

இம்மாதிரி புத்தகங்களுக்கான விஷயங்களை எழுத டைப் அடிக்கும் மிஷினையும் குருடர்கள் படிக்க உதவும் "பிரெய்லி" எழுத்து மிஷினையும் ஹெலன் உபயோகிப்பாள். மிகவும் நிதானமாக டைப் அடிப்பாள்.

சினிமா நடிகை

ஹெலனுடைய வாழ்க்கைப்பற்றிய சினிமா படத்தை அமெரிக்க கம்பெனி தயாரித்தது. அதில் ஹெலன் நடித்தாள்.

சினிமா பார்ப்பாள்!

பெர்னர்ட் ஷா, ரவீந்திரநாத்தாகூர்போன்ற கவிகளைப்பற்றியும் அமெரிக்க ஜனாதிபதிகள் அனைவரைப் பற்றியும் ஹெலனுக்கு நன்றாக தெரியும்.

கவிதை, சினிமா இலக்கியம் சங்கீதம் இவைகளில் ஹெலனுக்கு விருப்பம் அதிகம். சினிமா பார்க்கப் போனால் ஹெலனுடைய கையில் சினிமா கதைப் போக்கை அவளுடைய நண்பர்கள் எழுதுவார்கள் ஹெலன் அதைப் புரிந்து கொண்டு ரசிப்பாள்.

நேருவும் ஹெலனும்

பேசுபவர்களுடைய உதட்டை (வாயை) தடவிப் பார்த்து ஹெலன் அவர்களுடைய கருத்தை தெரிந்து கொள்ளுவாள். சமீபத்தில் நேருவுடைய முகத்தை தடவிப் பார்த்து அவருடைய குணாதிசயங்களைப்பற்றி ஹெலன் சொன்னது நினைவிருக்கலாம்.

லட்சியம்

ஹெலன் கடவுள் நம்பிக்கை உள்ளவள். 1948ல் இந்தியாவுக்கு வந்தாள். ஹெலனுடைய நல்ல குணத்தினாலும் கவர்ச்சியாலும் ஹெலனுக்கு உலகம் முழுவதும் நண்பர்கள் உள்ளனர். கண் அற்றவர்களுக்கும் காது கேட்காதவர்களுக்கும் உழைப்பதையே தனது லட்சியமாககொண்டிருக்கிறாள் ஹெலன். —தினத்தந்தி

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி விதிகளின் சுருக்கம்

1. சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள் யாவும் சுதந்திரனில் வெளியாகும் கூப்பன்களில் அல்லது சுதந்திரன் ஸ்தாபனத்தார் அச்சிட்டு இலவசமாக விநியோகிக்கும் கூப்பன்களில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.

2. போட்டிக்குரிய கட்டணம் இலங்கைப் போஸ்டல் ஆடர், இந்திய மணி ஆடர் அல்லது சுதந்திரன் போட்டி வவுச்சர் மூலம் சுதந்திரன், கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

3. சம்பந்தப்பட்ட ஒரு போட்டியில் பரிசுபெற தாங்கள் தகுதியும் உரிமையும் உடையவர்களெனக் கருதும் நேயர்கள் அப்போட்டி முடிவும் பரிசு பெற்றவர்கள் விவரமும் வெளியான மூன்று நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை ரூபா 25 பிணைப் பணத்துடன் பதிவுத் தபால் மூலம் சுதந்திரன் மனேஜருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

போட்டிவிடை அனுப்ப வேண்டிய விலாசம்.

சுதந்திரன் குறுக்கெழுத்துப் போட்டி-13

தபால்பெட்டி இலக்கம் 1183

சுதந்திரன் காரியாலயம், 194ஏ, தட்டாதெரு, கொழும்பு—12.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காமினி (கொழும்பு)

மகத்தான 5வது வாரம்!

இன்னும் பல திரைகளில்

இன்றைய சிங்கள சமூகத்தின் ஒப்பரிய ஓர் கதையான

★ அசோகா

மிஸ் புஷ்பாஜனட், சுமதிபிபிலே,
மிஸ பிரேமகாந்தி, ஆனந்த வீரக்கூன்
முலியோர் நடித்தது.

வெற்றிகரமான 3வது வாரம்!

கிங்ஸ்லி கொழும்பு | விஜயா மட்டக்களப்பு | சபையர் வெள்ளவத்தை | வெலிங்டன் யாழ்ப்பாணம்&திருகோணமலை | வெம்பிளி கண்டி

அளிக்க முடியாத தேனமுத இன்பத்தை அள்ளிவீசும் அரும் நாடகக் கலைப் பித்துப்பிடித்த அதிசயக் கவி மனேகரன். அறிவிலும் ஆற்றலிலும் கலையென்ற வலையிலும் (காதலில்) விழுந்தபின் அந்தக் கலையின் உருவத்தையே (மனேகரனையே) காதலிக்கும் காரிகை சித்திரா. தன் கணவனின் காதலியைக் கொடுக்குமாறு அன்னியனிடம் மன்றாடும் பத்தினியின் பரிதாபக் காட்சி. உருக்குலைந்து நிற்கும் உத்தம மனையாளின் காட்சி. இவற்றைக் காண -- மோடர்ன் தியேட்டர்ஸாரின் இல்லறஜோதியைக் காண வாருங்கள்.

மோடர்ன் தியேட்டர்ஸ்

இல்லற ஜோதி

நட்சத்திரங்கள்: சிவாஜி கணேஷன், பத்மினி, ஸ்ரீ ரஞ்சனி.



விரைவில் எதிர்பாருங்கள்!

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் அடுத்த மகத்தான வெளியீடு!

மதுபாலா, திலிப்குமார், நிம்மி

முதலியோர் நடிக்கும்

மெஹ்பூப்ஸ்

அமார் [ஹிந்தி]

மைலன் தியேட்டர் [கொழும்பு]

பத்மினி, சிவாஜி கணேசன், பாலையா நடிக்கும்

அருணா பிலிம்ஸ்

தூக்குத் தூக்கி

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 19ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் லிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. 1955 ஏப்ரல் 3ந் திகதி பிரசுரம் செய்யப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org